
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 மார்ச் 23 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 70 | Thursday 23, March, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## சர்வதேச நாணயநிதி உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த

# இப்போதாவது ஆதரவு தாருங்கள்

## எதிர்க் கட்சிகளிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை



நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

கடந்த காலத்தை விமர்சிப்பது தனது பணியல்ல என்றும், நாட்டை கட்டியெழுப்புவதே தனது பணி எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி, கடந்த கால தவறுகள் மீண்டும் ஏற்படாத வகையில் சட்டதிட்டங்கள் மற்றும் பின்னணியை வகுத்து, எதிர்காலத்தை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் நேற்று (22) காலை பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றாமல், ராஜபக்ஷவினரைக் காப்பாற்றுவதே தனது நோக்கம் என்று பலர் குற்றஞ்சாட்டினாலும், இலங்கை கடினமான தொங்கு

02

- சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த தற்போதேனும் ஆதரவளிக்குமாறு எதிர்க் கட்சிகளிடம் ஜனாதிபதி கோரிக்கை
- கடந்த கால தவறுகள் மீண்டும் நிகழாத வகையில் சட்டதிட்டங்களையும் பின்னணியையும் ஏற்படுத்தி, நாடு கட்டியெழுப்பப்படும்
- இலங்கை, பொருளாதார தொங்கு பாலத்தை கடக்க தான் செயல்பட்டதை இன்று சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது
- தற்போதைய கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் பலன் மக்களுக்கு விரைவில் கிடைக்கும்
- சிரமங்களைப் பொறுத்துக் கொண்டு நிதானமாகச் செயல்பட்ட மக்களுக்கு நன்றிகள்

பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றிய ஜனாதிபதி தெரிவிப்பு!

## வீதி கட்டமைப்பிலுள்ள சிக்கல்கள் இந்த வருட இறுதிக்குள் நிவர்த்தி

### ஒப்பந்தக்காரர்களது நிலுவைப் பணம் புத்தாண்டுக்கு முன்னர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடளாவிய ரீதியிலுள்ள வீதி கட்டமைப்புக்களில் காணப்படும் பல்வேறு சிக்கல்களையும் இந்த வருட இறுதிக்குள் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கப்பெற்றதும் இந்த வீதி கட்டமைப்பு திட்டங்களில் சிலவற்றுக்கு நிதியைப் பெற்றுக் கொடுக்க முடியும்

06

### பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீட்சிபெற

## அரசின் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்

### சபையில் முன்னாள் அமைச்சர் குமார வெல்கம

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கப் போவதாக முன்னாள் அமைச்சர் குமார வெல்கம பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

## தமிழ் கடற்றொழிலாளர்களது பாதிப்புகளை புரியாத தமிழகம்

### இந்திய துணைத்தூதுவரிடம் அமைச்சர் டக்ளஸ் ஆதங்கம்



இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறி எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் முறையினால் இலங்கையின் வட பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களே பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை தமிழக மக்கள் புரிந்து

06

## ஞானக்கா வீட்டில் 80 இலட்சம் கொள்ளை

**அநுராதபுரம் பொலிஸார் விசாரணை**

அநுராதபுரத்தில் பிரசித்தி பெற்ற ஆலயம் ஒன்றை நடத்தி வரும் ஞானக்கா என்ற

06

## 10,000 ரூபாவால் குறைந்த தங்கம்

### டொலர் குறைவினால் தாக்கம்



நேற்றைய தினம் தங்கத்தின் விலை வேகமாக குறைந்துள்ளது.


டொலரின் மதிப்பு சரிந்ததால் தங்கம் பவுணிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தங்க விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றைய தங்கத்தின் விலை அட்டவணை கீழே

06

## மாணவர்களுக்கான சீருடை விநியோகம் இன்று

### கல்வியமைச்சு நேற்று தெரிவிப்பு



இரண்டாம் கட்ட பாடசாலை சீருடைகள் இன்று (23) விநியோகிக்கப்படவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதனடிப்படையில், 4.1 மில்லியன் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிக்கு மாணவர்களுக்கு சீருடைகள் விநியோகிக்கப்படவுள்ளன. ஏப்ரல்

06



தென்னாபிரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர், தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோஷவை நேற்று சந்தித்தபோது...

## ரமழான் முதல் நோன்பு நாளை ஆரம்பம்

**ஸாதிக் ஷிஹான்**

ரமழான் மாதத்திற்கான தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு கொழும்பு பெரியபள்ளிவாசலில் நேற்று மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து பிறைக் குழு தலைவர் மௌலவி எம்.பி.எம். ஹிஷாம் பத்தாஹி தலைமையில் இடம்பெற்றது. ஹிஜ்ரி 1444 புனித ரமழான் மாதத்திற்கான தலைப்பிறை நாட்டின் எந்த பாகங்களிலும் தென்பட்டதாக ஊர்ஜிதம் செய்யப்படாததால் ஷஃபான் மாதத்தை முப்பதாக பூர்த்தி செய்து ரமழான் முதல் நோன்பை நாளை (24) வெள்ளிக்கிழமை ஆரம்பிப்பது என கொழும்பு பெரியபள்ளிவாசல் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

Your Bank Is Wherever You Are

ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 23-24 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.49 |
| ஸுபஹ் | 04.59 |
| சூரிய உதயம் | 06.14 |
| ழுஹர் | 12.19 |
| அஸர் | 03.31 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.31 |

Call 0117 756 756
www.amanabank.lk
It's Your Bank



### குவைத்தில் எஜமானர்களினால் தொல்லை

## தொழிலுக்குச் சென்ற 48 இலங்கையர் நாடு திரும்பினர்

03

## வடக்கில் 103 பாடசாலைகள் தற்காலிகமாக மூடிய நிலையில்

### மாணவர்கள் இன்மையே காரணம்



வடக்கு மாகாணத்தில் போர் முடிவடைந்த பின்னரான 14 ஆண்டுகள் காலப்பகுதியில் மாணவர்கள் இன்மையால் 103 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதென்று

06

## இந்திய நிதி அமைச்சருடன் மிலிந்த மொரகொட பேச்சு

### பொருளாதார ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடல்



இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை நேற்று சந்தித்துள்ளார்.

இந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இலங்கைக்கான உதவிகள் தொடர்பாக 2021 நவம்பர் முதல் அமைச்சர் சீதாராமனுடன் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட நடத்தி வரும் தொடர்ச்சியான சந்திப்புகளின்

06

## மஹிந்த, பசில் மீதான பயணத்தடை நீக்கம்

### உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானம்



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிரதிவாதிகளாக

06



# இப்போதாவது ஆதரவு தாருங்கள்

01ஆம் பக்கத் தொடர்....



பாலத்தைக் கடக்க தான் பணியாற்றியதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தான் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்ற நேசத்துக்குரிய நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் தனக்கு நம்பிக்கை இருப்பதாக மேலும் தெரிவித்த ஜனாதிபதி, கடந்த கால அனுபவங்கள் பலவும் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வது தாய் நாட்டை மீண்டும் உயர்த்துவதற்கான சந்தர்ப்பம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதன் ஊடாக நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப புதிய பாதை திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பணவீக்கம் காரணமாக முழு சமூகமும் எதிர்கொண்டுள்ள அழுத்தங்கள் தொடர்பில் தமக்கு சரியான புரிதல் இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த சிரமங்கள் தற்காலிகமானவை என்றும், தற்போதைய முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்கான பலன்களை மக்கள் விரைவில் பெறுவார்கள் என்றும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வதற்காக அனைத்து சிரமங்களையும் அழுத்தங்களையும் தாங்கிய நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதி இந்த சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் முழுமையான உரை பின்வருமாறு:

“சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை எங்களால் பெற முடிந்தது என்பதை இந்த கௌரவ சபைக்கு உத்தியோகபூர்வமாக தெரிவித்துக் கொள்கிறேன். அரச நிதியின் அனைத்து அதிகாரங்களும் அரசியலமைப்பின் மூலம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே, இன்று IMF உடன்படிக்கை ஆவணத்தை சமர்ப்பித்து, இந்த பாராளுமன்றத்தில் நாம் பெற்றுள்ள நீடிக்கப்பட்ட கடன் வசதி பற்றிய முதல் உத்தியோகபூர்வ அறிக்கையை இந்த சபையில் சமர்ப்பிக்கிறேன்.

பற்றி எரிந்துகொண்டிருந்த ஒரு நாட்டையே ஜூலை 9 ஆம் திகதி நான் பொறுப்பேற்றேன். குழப்பத்தில் இருந்த நாடு. நாளைய தினம் குறித்து கடுகளவும் நம்பிக்கை இல்லாதிருந்த நாடு. வங்குரோத்தடைந்துவிட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவித்த நாடு. பணவீக்கம் 73 சதவீதமாக உயர்ந்திருந்த நாடு. எரிபொருள், எரிவாயு வரிசையில் மக்கள் பல நாட்கள் அவதிப்பட்ட நாடு. பாடசாலைகள் மூடப்பட்ட நாடு. ஒரு நாளைக்கு பத்து பன்னிரெண்டு மணி நேரம் மின்சாரம் தடைப்பட்டிருந்த நாடு.

விவசாயிகளுக்கு உரம் கிடைக்காமலிருந்த நாடு. சட்டம் ஒழுங்கு பின்பற்றப்படாத நாடு. அரச அலுவலகங்கள் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டு, வெளியாட்கள் அதில் குடியேறியிருந்த நாடு. ஒவ்வொரு இடத்திலும் குண்டர்கள் தாக்குதல் நடத்திய நாடு. எதிர்தரப்பினரின் வீடுகளை எரிக்கும் நாடு. நெடுஞ்சாலையில் மக்கள் கொல்லப்பட்ட நாடு.

இவ்வாறான பின்னணியில் பொறுப்பை ஏற்க எவரும் விரும்பவில்லை. சிலர் பின்வாங்கினார்கள். சிலர் ஜாதகம் பார்க்க நேரம் கேட்டார்கள். சிலர் நழுவிச் சென்றனர். சிலர் பயந்தார்கள். அவர்களில் யாரும் பொறுப்பை ஏற்க முன்வராத நிலையில் என்னிடம் பொறுப்பேற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எந்த நிபந்தனையுமின்றி இந்த சவாலை ஏற்றுக்கொண்டேன். பாராளுமன்றத்தில் எனக்கு அதிகாரம் இருக்கவில்லை. எனக்கென்று எம்.பிகள் யாரும் இருக்கவில்லை. ஆனால் இவை எதுவும் இல்லாவிட்டாலும், எனக்கு ஒரே ஒரு பலம் இருந்தது. நான் பிறந்து, வளர்ந்து, படித்த எனது நேசத்துக்குரிய நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை மட்டுமே இருந்தது. அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் எனக்கு பல கடந்தகால அனுபவங்கள் இருந்தன.

2001இல், நாட்டின் பொருளாதாரம் மறைப் பெறுமானமாக வீழ்ச்சியடைந்திருந்தது. ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 2 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்திலேயே நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டுவர என்னால் முடிந்தது. அதுமட்டுமல்லாமல், டோக்கியோ உதவி மாநாட்டின் மூலம் 4 பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை என்னால் பெற முடிந்தது.

துரதிர்ஷ்டவசமாக, அதன் பின்னர் ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள் அந்தப் பணத்தை சரியாகப் பயன்படுத்தவில்லை. 2015இல் நான் பொருளாதாரத்தை பொறுப்பேற்ற போது அது பலவீனமான நிலையில் இருந்தது. ஆனால், 2018இல், பட்ஜெட்டில் முதன்மையான மேலதிகத்தை எட்ட முடிந்தது. பல்வேறு சலுகைகளை வழங்கியும் சுமார் 106% சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தோம்.

இந்த கடுமையான சவாலை ஏற்கும்போது, கடந்த கால அனுபவங்கள் மூலம் பெற்ற நம்பிக்கை மட்டுமே எனக்கு இருந்தது. நான் வீழ்ந்தாலும் நாடு வீழாது என்ற எண்ணத்தில் சவாலை ஏற்றுக்கொண்டேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையுடன், இளைஞர்களின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப எங்களுக்கு ஒரு பாதை திறக்கப்பட்டுள்ளது. மீண்டும் எமது தாய்நாட்டை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

இந்த கடன் வசதியின் கீழ், 4 ஆண்டுகளில் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவியைப் பெறுவோம். அதன்முதல் தவணையின் கீழ் 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கிறது. உலக வங்கி மற்றும் ஏனைய கடன் வழங்குபவர்களிடமிருந்து மேலும் 7 பில்லியன் டொலர் துரித கடன் உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

IMF நீடிக்கப்பட்ட கடன் வசதியை நெருப்பு வட்டியுடன் கூடிய மற்றொரு கடன் என்று சிலர் விபரிக்கிறார்கள். இந்தப் பணத்தில் நாட்டின் முழுக் கடனையும் அடைக்க முடியாது என்று கூக்குரலிடுபவர்களும் இருக்கிறார்கள். இத்தகைய கருத்துக்கள் அவர்களின் அறியாமையையே காட்டுகிறது. அல்லது அப்பாவி மக்களை பொய் சொல்லி ஏமாற்றி அரசியல் ஆதாயங்களை பெற்றுக்கொள்ள அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

IMF நீடிக்கப்பட்ட கடன் என்பது வீழ்ந்த நாட்டை மீட்டெடுக்க வழங்கப்படும் வசதியாகும். அதற்கான தளமும் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி மூலம் மீண்டும் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. இலங்கை இனி வங்குரோத்தடைந்த நாடாக இருக்காது என்பதற்கு உத்தரவாதம் கிடைத்துள்ளது. எமது உள்நாட்டு வங்கிகளுக்கு சர்வதேசத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சர்வதேச நிதி நிறுவனங்கள் எங்கள் கடன் பத்திரங்களை மதிக்கின்றன. ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து மிகக் குறைந்த வட்டியில் கடன் உதவி பெறுவதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீண்டும் இலங்கை மீது நம்பிக்கை வைப்பர். பரந்த அளவிலான சர்வதேச வாய்ப்புகளுக்கான கதவுகள் எங்களுக்காக திறக்கப்படும். வலுவான புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் தயாராகி வருகிறது.

அது மட்டுமின்றி, இந்த உடன்படிக்கையின் மூலம் நமது நாட்டின் நிதி ஒழுங்குச் சட்டமாக்கப்படும். ஊழலைத் தடுக்க புதிய கடுமையான சட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் இலங்கையில் இதுவரை இல்லாத புதிய நிதிக் கலாசாரம் மற்றும் ஊழல் அற்ற சூழல் உருவாக்கப்படும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

எமது நாட்டைப் பற்றி சர்வதேச நாணய நிதியம் முடிவெடுக்கும் முன்னரே நாட்டை முழுமையாக முடக்க சிலர் முயற்சித்தனர். இடைவிடா வேலை நிறுத்தத்தை முன்னெடுத்து, பொருளாதாரத்தை சீரழித்து நாட்டை அராஜகமாக்க திட்டமிட்டனர். நாசவேலை மூலம் IMFஒத்துழைப்பை தடுக்கலாம் என்று நினைத்தனர். சில அரசியல் குழுக்கள், சில தொழிற்சங்கங்கள், சில ஊடகங்கள் இதற்காக கடினமாக உழைத்தன. நாடு ஸ்திர நிலையில் இல்லை என்பதால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காது என்றும் கூறினர்.

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாததால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காது என்று கூறினர். இப்படியான பொய்களைப் பரப்பி நாட்டு மக்களை வீதிக்கு இறக்க முயற்சித்தனர்.

எனினும், இந்த நாசகார செயற்பாடுகளை பெரும்பான்மையான மக்கள் ஆதரிக்கவில்லை, தனிப்பட்ட அரசியல் அதிகார நோக்கங்களுக்காக நாட்டின் முன்னேற்றத்திற்கு குந்தகம் விளைவிக்க பெரும்பான்மையான மக்கள் விரும்பவில்லை, அவர்கள் நாட்டுக்காக பொறுப்புணர்வோடு செயற்பட்டனர். பல்வேறு சிரமங்களுக்கும் அழுத்தங்களுக்கும் மத்தியில், அவை அனைத்தையும் சகித்துக்கொண்டு, துன்ப, துயரங்களைத் தாங்கிக் கொண்டு நிதானமாகவும், பொறுமையாகவும் பெரும்பான்மையான மக்கள் செயற்பட்டனர். சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு அவர்களின் அர்ப்பணிப்பு பெரும் பலமாக இருந்தது. எனவே முதலில் இந்நாட்டு மக்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விடயத்தில் எங்கள் அதிகாரிகள் இரவு பகலாக கடுமையாக உழைத்தனர். சிலர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டனர். அமைச்சர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டனர். இச்சபையின் உறுப்பினர்கள் பலர் அதற்கு ஆதரவளித்தனர். சிலர் பகிரங்கமாகவும் பலர் இரகசியமாகவும் ஆதரவளித்தனர். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெறுவதற்கு எங்களின் முக்கிய கடன் வழங்குநர்கள் எங்களுக்கு ஆதரவளித்தனர். வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புகளும் எங்களுக்கு ஆதரவளித்தன. வெளிநாட்டு அரச தலைவர்கள், அமைச்சர்கள், சர்வதேச அமைப்புகளின் அதிகாரிகள், பிரதிநிதிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், அதிகாரிகள் என பலரும் எங்களுக்கு உதவினார்கள். அவர்கள் அனைவருக்கும் இலங்கையின் மரியாதைக்குரிய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

நாம் ஒரு புதிய பயணத்தைத் தொடங்குகிறோம், மேலும் பல பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இங்குதான் நமது வெற்றிக்கான அடிப்படை இருக்கிறது.

இவற்றில் சில மறுசீரமைப்புகளை, 2022 இடைக்கால வரவுசெலவுத்திட்டம் மற்றும் 2023 வரவுசெலவுத்திட்டங்களில் முன்மொழிந்து ஏற்கனவே செயல்படுத்தி வருகிறோம். நாங்கள் இன்னும் பல மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவோம். அவற்றுள், சில முக்கியமான விடயங்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மேலும், நாம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றதும், எதிர்காலத்தில் அமுல்படுத்த எதிர்பார்த்துள்ள மறுசீரமைப்பு செயற்பாடுகள் குறித்தும் இந்த கௌரவ சபைக்கு தெரிவிக்க எதிர்பார்க்கின்றேன்.

அரச வருமானத்தை அதிகரிக்கும் திட்டம்

.

★ 2025 ஆம் ஆண்டுக்குள் முதன்மை பற்றாக்குறையை மொத்தத் தேசிய உற்பத்தியில் 2.3% ஆக மாற்றுவதே எமது இலக்காகும்.

★ இலங்கை அரசாங்கத்தின் வருமானம் தற்போது மொத்தத் தேசிய உற்பத்தியில் 8.3% ஆகும். உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், நமது அரசின் வருமானம் மிகக் குறைந்த அளவில் உள்ளது. இதனால்தான் 2026 ஆம் ஆண்டுக்குள் அரச வருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தியில் 15% ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளோம்.

★ துறைவாரி வரிச் சலுகைகள் இல்லாமல் கூட்டிணைக்கப்பட்ட வருமான வரி விகிதம் இப்போது 30% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ வட் வரியை 8% சதவீதத்தில் இருந்து 15% சதவீதமாக உயர்த்த நாம் நடவடிக்கை எடுத்தோம். வட் வரிக்கு அளிக்கப்பட்டுள்ள விலக்குகளை படிப்படியாக குறைக்கவும், வட் வரி திரும்ப செலுத்துவதை துரிதப்படுத்தவும், எஸ் வட் முறையை இரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ 2025 இல், குறைந்தபட்ச வரி விலக்குடன், சொத்து வரி முறைக்குப் பதிலாக செல்வ வரியொன்றை விதிக்கவும், பரிசு மற்றும் பரம்பரை சொத்து வரியொன்றை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச செலவு முகாமைத்துவம்

.

★ முறையான செலவு முகாமைத்துவம் மூலம் அரச செலவினங்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

★ பணவீக்கத்திற்கு ஏற்ப, ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களை சமநிலை செய்யும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் முதன்மை வரவு செலவுத்திட்டக் கையிருப்பு வரம்பிற்குள் இந்த மாற்றங்கள் செய்யப்படும்.

அரச நிறுவனங்கள் மற்றும் வலுசக்தி விலை நிர்ணயம்

★ எரிபொருளின் விலை நிர்ணயம் செய்வதை, அரசியல் அதிகார மட்டத்தில் இருந்து முற்றாக நீக்கப்படும். 2018 விலை சூத்திரத்தின் படியே எரிபொருள் விலை தீர்மானிக்கப்படுகிறது.

★ எதிர்கால செலவு மதிப்பீட்டை கணக்கில் கொண்டு, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மின்சார விலையை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பாரியளவில் நஷ்டத்தை சந்தித்து வரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, ஸ்ரீலங்கா விமான சேவை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை போன்ற நிறுவனங்களின் இருப்பு நிலைகள் மறுசீரமைக்கப்படும். காலாவதியான இறையாண்மை பிணைகளின் பேரில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகையை இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய கடன் தொகையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

விலை நிலைத் தன்மை மற்றும் நிதிக் கொள்கை

☐ பணவீக்க விகிதத்தை மீண்டும் 4% மற்றும் 6%க்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். இதுவரை பணவீக்கத்தை கணிசமான அளவில் குறைக்க முடிந்துள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், பணவீக்க விகிதத்தை ஒற்றை இலக்க மதிப்பிற்குக் குறைப்பது எங்கள் இலக்கு.

★ இந்த திட்டங்களை செயல்படுத்தும் போது, பணம் அச்சிடுவது படிப்படியாக குறைந்துவிடும். இதனால் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடு செய்ய, கடன் பெற்றுக்கொள்ளாமல் வருமானத்தை ஈட்டிக்கொள்ள திறைசேரிக்கு நேரிடும்.

★ தற்போதுள்ள அந்நியச் செலாவணி, கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகள் படிப்படியாக நீக்கப்பட்டு, அந்நியச் செலாவணி சந்தையின் செயல்பாடுகள், சந்தை அளவுகோல்களின் அடிப்படையில் தீர்மானிக்க அனுமதிக்கப்படும்.

★ தீர்மானிக்கப்பட்ட இலக்குகளின் படி, மத்திய வங்கி வெளிநாட்டு கையிருப்புகளை அதிகரிக்க வெளிநாட்டு நாணயம் கொள்வனவு செய்யப்படும்.

நல்லாட்சி

உள்ளூர் நிபுணர்களின் கருத்துக்களை உள்வாங்கி, அரசாங்கத்தின் பலவீனங்கள் குறித்த IMF அறிக்கை ஒன்றைத் தயாரிக்கிறது. ஊழலைத் தடுப்பது தொடர்பாக அரசு மற்றும் நிறுவன கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய இதனால் வாய்ப்பு ஏற்படும்.

★ ஐ.நா சாசனத்தின் பிரகாரம் ஊழல் எதிர்ப்பு சட்டம் தயாரிக்கப்படும்.

★ இழந்த சொத்துக்களை மீட்பதற்கான ஏற்பாடுகள் 2024 ஆண்டு மார்ச் மாத்ததிற்குள் சட்டக் கட்டமைப்பில் சேர்க்க எதிர்பார்க்கிறோம்.

★ வலுவான நிதிக் கொள்கைகளின் அடிப்படையில் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டம் உருவாக்கப்படும்.

★ சலுகை வரி அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி பெற்ற நபர்கள், வரிச்சலுகை, வரித் தீர்வைப் பெறும் நிறுவனங்களின் பட்டியல் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் பகிரங்கப்படுத்தப்படும். பாரியளவிலான பொது கொள்முதல் ஒப்பந்தங்களின் விவரங்களும் பகிரங்கப் படுத்தப்படும்.

வளர்ச்சி

★ சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புடைய திட்டங்களிலுள்ள சீர்திருத்தங்கள் மூலம் நடுத்தர மற்றும் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் வர்த்தக சீர்திருத்தங்கள் தொடர்பான செயற்பாடுகள், பெண்களின் தொழிலாளர் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், திறன் மேம்பாடு, எரிசக்தி துறை மறுசீரமைப்பு ஊடாக செயல்திறனின்மையையும் செலவினங்களையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பிலும் இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

எதிர்கால நடவடிக்கை

★ IMF திட்டத்தைத்திற்கு அப்பால் சென்ற, பல் பொருளாதார சீர்திருத்தங்களை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். பொருளாதாரத்தைத் திறப்பதன் மூலமும், டிஜிட்டல் மயமாக்குவதன் மூலமும் நிலையான மறுமலர்ச்சியை அடைவதும், நடுத்தர மற்றும் நீண்ட கால உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதும் இதன் நோக்கமாகும்.

★ அதே நேரத்தில், இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும். நாங்கள் இதுவரை கடைப்பிடித்து வந்த அதே நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களுடன் திறந்த மற்றும் வெளிப்படைத் தன்மையுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம்.

★ கடனைத் திருப்பிச் செலுத்துதல் தொடர்பில் ஏற்படுத்திக்கொண்ட விதிமுறைகள் குறித்து இறுதி முடிவுகளை எடுப்பதற்கு முன்னர், அனைத்து இருதரப்புக் கடன் வழங்குநர்கள் அதைப் பற்றி தெரிந்துகொள்ளக் கூடிய வகையில் திறந்த முறையொன்றை பின்பற்றுகிறோம். ஏனைய வெளிநாட்டு கடன் வழங்குநர்களின் விடயத்திலும் இதே நடைமுறை பின்பற்றப்படும். அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் நியாயமான முறையில் மறுசீரமைப்பை மேற்கொள்வது எமது எதிர்பார்ப்பாகும்.

★ எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுக்கு ஒரு பகிரங்க கடிதத்தை அனுப்பியதன் மூலம் நான் தெரிவித்தது போல், எந்தவொரு வழங்குநர்களுக்கும் கூடுதல் கரிசனை செலுத்துவதில்லை. அவர்கள் அனைவரையும் சமமாக நடத்துகின்றோம். நாங்கள் இதுவரை அவர்கள் அனைவருடனும் வெளிப்படையாகவும் நட்பாகவும் பணியாற்றுவோம். எதிர்காலத்திலும் அவ்வாறே தொடர்ந்து பணியாற்றுவோம்.

எங்கள் கடன் நிலை குறித்து தொடர்ந்து அறிக்கைகள் வெளியிடப்படும். நாட்டின் கடன் பற்றி எந்த தகவலும் மறைக்கப்பட மாட்டாது.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

நாங்கள் கடினமான காலத்தைக் கடந்து வருகிறோம், வரிச்சுமையால் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதை நாம் அறிகின்றோம். பணவீக்கத்தால் ஒட்டுமொத்த சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளதையும் நாம் அறிவோம். ஆனால் இந்த நேரத்தில் நாம் தற்போது செயல்படுத்தி வரும் கொள்கைகளில் இருந்து விலகிச் செல்ல முடியாது. நாம் எதிர்கொள்ளும் கசப்பான உண்மை இதுவாகும்.

ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எங்கள் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய நாங்களும் சர்வதேச நாணய நிதியமும் நடவடிக்கை எடுப்போம். முதல் பரிசீலனை வரும் ஜூன் மாதம் நடைபெறும். தற்போதைய வரி முறையை திருத்துவது குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட முன்மொழிவுகளை திறைசேரி தயாரித்து வருகிறது. மேலும், பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் இது தொடர்பான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர். அவர்கள் அனைவருடனும் கலந்துரையாட நாம் எதிர்பார்க்கின்றோம். அதன் பின்னரே பொதுவான உடன்பாட்டை நாம் எட்ட முடியும்.

ஜூன் மாத மதிப்பாய்வின் போது இந்த வரி திருத்தங்களை எங்கள் திட்டத்தில் சேர்க்க IMF உடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். அதுமட்டுமல்லாமல், காலத்திற்கேற்ப ஏனைய கொள்கை ரீதியிலான திருத்தங்கள் குறித்தும் நாம் ஆலோசிப்போம்.

இவை உணர்ச்சிகளாலும் போராட்டங்களாலும் தீர்க்கப்படக்கூடியவை அல்ல. இப்பிரச்சினைகள் விழிப்புணர்வோடு, அக்கறையோடும், புத்திசாலித்தனத்துடன் தீர்க்கப்பட வேண்டும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

நாம் கடினமான காலங்களை கடந்து வருகிறோம். ஆனால் எங்களின் சிரமங்களும், துன்பங்களும் தற்காலிகமானவை. தற்போதைய முயற்சி மற்றும் அர்ப்பணிப்பின் பலனை விரைவில் நாம் பெறுவோம். நாளை நாட்டைக் கையேற்கும் இளைஞர்களுக்காக, நமது எதிர்கால சந்ததியினருக்காக இந்த அர்ப்பணிப்பை நாம் செய்ய வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தின்படி அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு முறையான நிதி ஒழுக்கத்துடன் பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்தினால், நாட்டின் எதிர்காலத்துக்கு வலுவான பொருளாதார அடித்தளம் உருவாகும். நாம் இந்தப் பாதையை விட்டு விலகினால், கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்ததைவிட மோசமான நிலைக்கு நாடு தள்ளப்படும்.

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் மீதான பாராளுமன்ற விவாதத்திற்கான திகதியை மார்ச் மூன்றாவது வாரத்தில் நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்போது உங்கள் கருத்துக்களையும் உங்கள் அனைவரின் ஆதரவு தருமாறு கௌரவ சபையில் கேட்டுக்கொள்கிறோம்.

மற்றுமொரு முக்கியமான விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். IMF உடன்படிக்கையில் மாத்திரம் நாங்கள் திருப்தி அடைய முடியாது. இது பயணத்தின் முடிவு அல்ல. இது மற்றொரு நீண்ட பயணத்தின் ஆரம்பம் ஆகும். இப்போது நாம் நமது முயற்சியுடன் அந்த வழியில் செல்ல வேண்டும்.

நாங்கள் நமது கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி கடனை மறுசீரமைக்க வேண்டும். அத்துடன் நாட்டின் வருமானத்தையும் அதிகரிக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் வழிகளை உருவாக்க வேண்டும்.

உலக சந்தையில் மட்டுமின்றி நமது பிராந்திய சந்தையிலும் நமது பங்கை விஸ்தரிக்க வேண்டும். பாரிய பொருளாதார சீர்திருத்த செயல்முறையை அச்சமின்றி, தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்.

இவை அனைத்தும் எளிதான இலக்குகள் அல்ல. ஆனால் நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் இந்தப் பயணத்தைத் தொடர வேண்டும். இது கடினமானதொரு பயணம். அந்த கடினமான பயணத்தில் நாம் கவனமாக பயணிக்க வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது முதன்மையான குறிக்கோளாக இருக்க வேண்டும். முதலாவதாக, இரண்டாவது, மூன்றாவதாக, நாட்டைக் கட்டியெழுப்புவது மட்டுமே எங்களின் இலக்கு. அப்படிச் சிந்தித்தால் இந்தப் பாதையில் வேகமாகவும் வெற்றிகரமாகவும் பயணிக்கலாம்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

IMF உடன் நாங்கள் செய்த திட்டத்தை நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தி முடிக்க வேண்டும். ஆனால் நமது பலம் மற்றும் உறுதியைப் பொறுத்து மூன்றிலிருந்து மூன்றரை வருடங்களில் அதனை செய்து முடிக்கலாம். நாம் அதற்கு முயற்சிக்கலாம். இதற்காக கடினமாக உழைப்போம்.

இங்கே நாம் குறிப்பிட்ட சில விடயங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். முதலாவதாக, சமூகத்தின் கீழ்மட்டத்தில் உள்ள மக்களுக்கு வலுவான சமூகப் பாதுகாப்பு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, ரூபாயை வலுப்படுத்துவதற்கான உத்திகள் மற்றும் முறையான திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

மூன்றாவதாக, ஊழலுக்கு எதிரான சட்டங்களை உடனடியாக இயற்றி செயல்படுத்த வேண்டும். நீதியமைச்சர் இதற்கான சட்டமூலத்தை விரைவில் சமர்ப்பிப்பார்.

நான்காவதாக, சமூகத்தில் ஏற்படுத்த வேண்டிய ஏனைய கட்டமைப்பு சீர்திருத்தங்களில் கவனம் செலுத்த வேண்டும். அவற்றைக் கண்டறிந்து சீர்திருத்தங்களை ஆரம்பிக்க வேண்டும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

டி.எஸ்.சேனநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் எமது நாடு வெளிநாட்டு கடன்கள் எதுவும் பெறவில்லை. பிற்காலத்தில் நம் நாட்டின் வருமானத்தில் செலவுகளை செய்யாமல், வெளிநாடுகளில் இருந்து கடன் வாங்கி நாட்டின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஒரு பாரம்பரியம் உருவானது.

அந்த பாரம்பரியம், புற்று நோயாக மாறியதால் இன்று நாம் அனைவரும் அவதிப்பட்டு வருகிறோம். நாம் எல்லா நேரத்திலும் கடன் வாங்க முடியாது. கடன் பெறாத தேசமாக மாற நாம் பாடுபட வேண்டும். அதற்காகவே, இந்த இக்கட்டான காலத்திலிருந்து மீள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் இதுவரை நாம் எடுத்துள்ள அனைத்து கடன்களையும் நாம் செலுத்தி முடிக்க வேண்டும். இந்தப் பாதையில் நாம் சரியாகத் தொடர்ந்தால், அந்த நிலையை அடைய முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அந்தக் கடனைச் செலுத்திய பின்னர், நாட்டின் செலவினங்களைச் சமாளிக்கும் வருமானத்தை உருவாக்கும் வலிமையைப் பெற வேண்டும். முயன்றால் அதனை நம்மால் செய்ய முடியும். அந்த வழியை நாம் பின்பற்றினால், சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் 2048 இல் நம் நாட்டை உலகில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற முடியும்.

இங்கு இன்னுமொரு விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தேரவாத பௌத்த நாடுகள் எப்போதும் பொருளாதாரத்தில் ஏழ்மை நிலையில் உள்ளதாக சமீபத்தில், ஒரு கருத்து வெளியிடப்பட்டது.

இப்போது தாய்லாந்து இந்த கருத்தை உடைக்க போராடுகிறது. உலகின் தேரவாத மையமாகக் கருதப்படும் நாமும் அந்தக் கருத்தை தகர்த்தெறிய பாடுபட வேண்டும். ஒரு தாயின் பிள்ளைகளாகிய நாம் ஒருமனதாக முயற்சி செய்தால் அந்தக் கருத்தை உடைக்க முடியும். உலகின் பொருளாதார மையமாக இலங்கையை மீண்டும் பிரபலமாக்க முடியும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

நான் முதலில், பிரதமராக பதவியேற்றபோது, நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கோரினேன். ஆனால் எனக்கு அந்த ஆதரவு கிடைக்கவில்லை. அதன் பின்னர் நான் ஜனாதிபதியாக பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதும், எதிர்க்கட்சிகளின் ஆதரவை கோரினேன். ஆனால் கிடைக்கவில்லை. வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது எதிர்க்கட்சிகளின் ஆதரவையும் கேட்டேன். எந்த ஆதரவும் கிடைக்கவில்லை.

தற்போதைய பாராளுமன்ற அமர்வின் தொடக்கத்தில் எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கேட்டேன். ஆனால் எந்த ஆதரவும் கிடைக்கவில்லை.

அந்த சந்தர்ப்பங்களில், அவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி ஆதரவளிக்க மறுத்துவிட்டனர். எனது நியமனம் அரசியலமைப்புக்கு எதிரானது என்றார்கள். தேசிய பட்டியலிலிருந்து பிரதமரை நியமிக்க முடியாது எனக் கூறினார்கள். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதல்ல, ராஜபக்ஷாக்களைக் காப்பாற்றுவதே எனது நோக்கம் என்றார்கள். கடினமான தடையை கடக்கப்போவது இலங்கை அன்னை அல்ல நாமல் ராஜபக்ஷ தான் என்றார்கள்.

ஆனால், இலங்கை அன்னையை பொருளாதார தொங்கு பாலத்தைக் கடக்கச் செய்ய நான் பாடுபட்டுள்ளதை சர்வதேச சமூகம் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது. எதிர்க்கட்சிகளின்குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

எதிர் தரப்பு குற்றச்சாட்டுகளுக்கு நான் பதில் சொல்லப் போவதில்லை. கடந்த காலத்தை விமர்சிப்பது என் வேலையல்ல. எதிர்காலத்தை உருவாக்குவதே எனது பணி. கடந்த கால தவறுகள் மீண்டும் நிகழாத வகையில் சட்டங்களையும் விதிகளையும் மற்றும் பின்னணியையும் ஏற்படுத்தி, எதிர்காலத்தை உருவாக்கவே முயற்சிக்கின்றேன். இதற்காக அர்ப்பணிப்பேன். செயற்படுவேன்.

இந்த நாட்டை கட்டியெழுப்பும் பணிகளில் இணைந்து கொள்ளுமாறு இன்றும் எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடன் நான் வாதிடவில்லை. என்னை விமர்சித்தபோது அதற்கு பதிலளிக்க முயற்சிக்கவில்லை. எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவை என்பதால் அப்படிச் செய்யவில்லை. உங்கள் அரசியல் கருத்துக்களை ஒதுக்கி வைக்கவும். உங்கள் அதிகாரம் குறித்து சிந்திக்கும் முன், நாட்டைப் பலப்படுத்துவது பற்றி சிந்தியுங்கள். ஏனைய அரசியல் கருத்துக்களில் சம்பிரதாயமான முறையில் செயற்படுங்கள். ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முயற்சியில், நிலையான அரசியல் கட்டமைப்பிலிருந்து வெளியே வாருங்கள். பொருளாதாரத்தை உயர்த்த இந்த முயற்சிக்கு ஆதரவு தாருங்கள். ஏனைய விடயங்களின் போது நாம் எதிரணியில் நிற்கலாம். ஆனால் இந்தப் பணிகளின் போது, நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

மீண்டும் அந்தக் கோரிக்கையை வைக்கிறேன். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப IMF உடன்படிக்கையை செயல்படுத்த தற்போதேனும் உங்கள் ஆதரவை வழங்கவும். இந்தப் பணியில் அனைவரும் கைகோர்ப்போம்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 மார்ச் 23 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்



தொழுகை நேரம்
சுபஹ் - 04.59
லுஹர் - 12.19
அஸர் - 03.31
மஃரிப் - 06.21
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் பங்குனி 09
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

## தவக்கால சிந்தனை



### நம்பிக்கையை சிதைக்கும் தடைகள்

யோவான் 5: 31 47

தவக்காலத்தின் நான்காம் வாரத்தில் பயணிக்கின்றோம்.

இன்றைய நற்செய்தி வாசகம் எமக்கு சிறந்த சவால் ஒன்றை முன்வைக்கின்றது.இயேசுவை மெசியாவாக ஏற்று வாழ நம்பிக்கையாளர்களான எம்மை தடுப்பவை எவை? அதற்குள் நாம் அகப்பட்டு விடுகின்றோமா? என்பதே அந்த சவால் மிகுந்த கேள்வி

யோவான் நற்செய்தியின் ஐந்தாம் பிரிவின் இறுதிப்பகுதியினை இன்றைய நற்செய்தியாகப் பார்க்கின்றோம்.

ஏற்கனவே இயேவுக்கும் யூதத்தலைமைகளுக்குமிடையிலான ஓய்வுநாள், தேவநிந்தனை தொடர்பிலான பிணக்குகள் முற்றியிலிருந்த நிலையில், இயேசு தாம் கடவுளிமிருந்து வந்தவர்தான் என்பதற்கான ஐந்து சான்றுகளை இன்றைய நற்செய்திப் பகுதியினூடாக முன்வைக்கின்றார்.

அவற்றுள் திருமுழுக்கு யோவான், இயேசுவின் செயல்கள், தந்தையாம் கடவுள், திருமறை நூல் மற்றும் மோசே முதலானவை குறிப்பிடப்படுகின்றன.

இயேசு உண்மையாக கடவுளிடமிருந்து வந்தவர் என்பதற்கு இத்தகைய வலுவான சாட்சியங்கள் இருந்தபோதிலும் யூதத்தலைமைகள் அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன.

ஆயினும் இயேசு அவர்களிடம் மனிதப்பெருமையோ அல்லது மனித சாட்சியமோ தனக்கு தேவையில்லையென எடுத்துரைத்து தந்தையின் பெயரால் தாம் வந்தவரென்பதை மீண்டுமாக எடுத்துரைக்கின்றார்.

யூதர்களிடமும், யூதத்தலைமைகளிடமும் இருந்த மிகமுக்கியமான பிரச்சனை யாதெனில் இயேசுவை உண்மையாகவே மெசியாவென ஏற்றுக்கொண்டால் தங்களது இருப்புக்கும் தலைமைத்துவத்திற்கும் ஆபத்து வந்துவிடும் என்பதே.

அத்துடன் மக்களிடத்தில் தங்கள்மீதான செல்வாக்கு அற்றுப்போய் விடுமென்கின்ற பயத்தினாலும் அவரைப் புறக்கணித்தார்கள்.

இன்று இயேசுவை மெசியாவாக ஏற்றுவாழ நம்பிக்கையாளர்களைத் தடுப்பவை யாவை? தவக்காலத்தில் அது தொடர்பில் சிந்திக்க முற்படுவோம். தெளிவு பெற்றுக் கொள்வோம்.

அருட்தந்தை நவாஜி...

# மே மாதத்தில் 33,000 ஆசிரியர் நியமனங்கள் வழங்க நடவடிக்கை

**26,000 பட்டதாரி ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி பரீட்சை**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

26,000 பட்டதாரி ஆசிரியர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடளாவிய 141 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள இந்த பரீட்சையில் 53,000 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு முறைமைகளுக்கு இணங்க எதிர்வரும் மே மாதத்தில் 33,000 பேருக்கு ஆசிரிய நியமனங்களை




வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் வசந்த யாப்பா பண்டார எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் 06

## "லிஸ்திரியா" நோயின் அச்சுறுத்தல் இல்லை

தொற்று நோய் தடுப்பு பிரிவு அறிவிப்பு



லிஸ்ட்டியோரிஸிஸ் அல்லது லிஸ்திரியா எனப்படும் நோய் தொற்று தொடர்பில் மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என தொற்று நோய் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது. நாட்டில் இந்த நோய்த் தொற்று பரவுகை அபாயம் கிடையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிவனொளிபாத மலைக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள கடையொன்றில் பெண் ஒருவர் லிஸ்திரியா நோய் அறிகுறியுடன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. 06

## சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு;
# நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான முதற்படி

**சபையில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கான முதற்படியாக அமைந்துள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கு குறுகிய அரசியல் நோக்கங்களை கைவிட்டு அனைவரும்

ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டியது அவசியம் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அந்த வகையில் பாராளுமன்றத்தின் ஊடாக சிறந்த தீர்மானத்தை மேற்கொள்வதற்கு ஆளும் கட்சி மற்றும் சகல எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பு நாட்டின் பொருளாதார நெருக்கடி தீர்வுக்கு ஆரம்ப படிக்கல்லாக அமைந்துள்ளது.

நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இத்தகைய நிலையில் ஒரு சிறந்த தீர்மானத்தை பாராளுமன்றத்தின் ஊடாக மேற்கொள்வது அவசியமாகும். அதற்காக எதிர்க்கட்சிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

பாரிய போராட்டத்தின் மத்தியிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தற்போது நாட்டுக்கு கிடைத்துள்ளது.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் வரிச்சலுகை வழங்கியமை,உர இறக்குமதியை தடை செய்தமை உள்ளிட்ட செயற்பாடுகளினால் நாட்டின் பொருளாதார பாதிப்பு குறுகிய காலத்திற்குள் தீவிரமடைந்துள்ளது.

உண்மையை மறைக்க முடியாது.

கடந்த காலத்தை பற்றி மட்டுமே தொடர்ந்தும் பேசிக் கொண்டிருந்தால் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

அந்த வகையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு தூரநோக்குக் கொள்கையுடன் செயற்பட.வேண்டியது அவசியமாகும். 06

## தினேஷ் ஷாப்டரின் மரணம்;
# மேலதிக நீதவான் விசாரணைகள் 04ஆம் திகதி வரை ஒத்திவைப்பு



ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான மேலதிக நீதவான் விசாரணையை எதிர்வரும் 4ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேலதிக நீதவான் டி. என். இளங்கசிங்க உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணை மீண்டும் நீதிமன்றில் அழைக்கப்பட்டபோதே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டது. இந்த மரணம் தற்செயலானதா அல்லது கொலையா என்பதை தீர்மானிக்க ஐவரடங்கிய விசேட வைத்திய சபையொன்று நியமிக்கப் பட்டுள்ளதாகவும் இது நீண்டகால விசாரணையாக மாறியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன தெரிவித்தார். 06

# எல்லேவல நீர்வீழ்ச்சியில் பலியான நான்கு இளைஞர்களது உடல்கள் மீட்பு

**கல்முனை மையவாடியில் நேற்று நல்லடக்கம்**

*கல்முனை குறூப் நிருபர்*

வெல்லவாய எல்லேவல நீர்வீழ்ச்சியில் நீராடிக்கொண்டிருந்த போது, நீரில் மூழ்கிக் காணாமல் போன நான்கு இளைஞர்களினதும் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கல்முனைப் பிரசேத்தைச் சேர்ந்த இவர்களில் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) மாலை மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏனைய மூவரின் சடலங்களும் நேற்று (22) மீட்கப்பட்டுள்ளன. கல்முனையிலுள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றில் கல்வி கற்கும் 10 பேரைக் கொண்ட மாணவர்கள் குழுவினர், நேற்று முன்தினம் கல்முனையிலிருந்து சுற்றுலாச் சென்றுள்ளனர். இந்நிலையில்,



வெல்லவாய எல்லேவல நீர்வீழ்ச்சியில் இவர்கள் நீராடிய போது, இவர்களில் நால்வர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கிக் காணாமல் போயிருந்தனர். இதனைத் தொடர்ந்து, பொதுமக்களும் சுழியோடிகளும் இணைந்து இவர்களைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது, இவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். 06

## மகரகம கபூரிய்யா கல்லூரி விவகாரம்;
# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு தீர்வுகாண வேண்டும்

*லோரன்ஸ் செல்வநாயகம்*



மஹரகம கபூரிய்யா அரபுக் கல்லூரி எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிதியமைச்சு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹரகம கபூரிய்யா அரபுக்கல்லூரி இந்நாட்டில் இருக்கும் அரபுக்கல்லூரிகளில் 90 வருடங்களுக்கும் அதிக பழைமைவாய்ந்த முன்னணியில் உள்ள கல்லூரியாகும்.

சுமார் 17 ஏக்கர் நிலப்பரப்பைக்கொண்ட இந்த கல்லூரி அண்மைக்காலமாக மிகவும் கவலைக்குரிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. இந்த கல்லூரி என்.டீ.எச். அப்துல் கபூர் ஹாஜியார் என்ற தனவந்தரால், ஏழை மாணவர்கள் கல்வியைப் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் வழங்கப்பட்டதாகும். கபூரிய்யா அரபுக்கல்லூரிக்கு வருமானம் கிடைக்கும் வகையில், கொழும்பு 06

## சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் ;
# எதிர்க்கட்சி ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கியதில்லை

*லோரன்ஸ் செல்வநாயகம்*



சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கம் பெற்றுக் கொள்ளும் கடன் தொடர்பில் ஒருபோதும் எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்பு கிடைத்ததில்லை என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தியதன் பின்னர் அதனைப் பாராட்டி குமார வெல்கம எம்பி சபையில் முன் வைத்த கூற்றுக்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அமைச்சர்: சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கம் பெற்றுக் கொள்ளவுள்ள கடன் விவகாரம் தொடர்பில் ஒருபோதும் எதிர்க்கட்சி தனது ஒத்துழைப்பை வழங்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக் கொண்டாலும் அதனை அரசாங்கத்தினால் மீள செலுத்த முடியாது என்றும் எதிர்க்கட்சியின் சிலர் மேடைகளில் பேசி வந்தனர்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் முன்வரிசையில் உள்ளவர்கள் சிலரும் கூட சர்வதேச நாணய நிதியம் ஒருபோதும் கடன் வழங்கப் போவதில்லை என்றும் தெரிவித்து வந்தனர். 06

# குவைத்தில் எஜமானர்களினால் தொல்லை; தொழிலுக்குச் சென்ற 48 இலங்கையர் நாடு திரும்பினர்

தொழிலுக்காக குவைத்துக்கு சென்று பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிய 48 இலங்கையர்கள் நேற்றைய தினம் நாடு திரும்பியுள்ளனர். ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு சொந்தமான யு எல் 230 என்ற விமானத்தில் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர். குவைத்துக்கு தொழிலுக்காக சென்று பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட இலங்கையர்கள் குவைத்தின் இலங்கை தூதரகத்திற்கு 06



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.03.21
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

| மஹஜன சம்பத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 5066 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 21,870,373.00 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 8 2 1 4 4 6 |

| கொவிசெத (Govisetha) | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 3308 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 88,807,244.80 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 06 07 32 34 |

| ராசி சுப பலன் (Handahana) | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 375 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 2,821,934.80 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 51 54 57 |
| விசேட இலக்கினம் | விருச்சிகம் |

| ஜாதிக சம்பத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1521 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 11,076,932.40 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 0 1 2 0 3 0 |

| தன நிதானய | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1096 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 82,258,519.60 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 01 62 75 80 |

| மெகா பவர் | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1414 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 309,372,838.00 |
| அடுத்த பவர் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கங்கள் | 10 34 37 59 |



மலையக கலை கலாசார சங்கம் (இரத்தின தீபம் அமைப்பு) ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு கண்டி வீர கெப்பட்டிப்பொல மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்றது. இதன்போது வீரகேசரி பத்திரிகையின் உதவி செய்தி ஆசிரியர் ஜே.ஜி. ஸ்டீபன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில்
# இனப்பிரச்சினைக்கான தீர்வும் உள்ளடக்கப்பட வேண்டும்

*லோரன்ஸ் செல்வநாயகம்*



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் நாட்டில் நீண்ட காலம் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வும் உள்ளடக்கப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பி செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில்தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே செல்வம் அடைக்கலநாதன் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், சர்வதேச நாணய நிதியம் நாட்டுக்கு கடன் உதவியை வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இந்த நிதி எமது ஏழை மக்களின் வாழ்க்கையை முன்னேற்றும் நடவடிக்கைகளுக்கும் அத்துடன் வைத்தியசாலைகள், பாடசாலைகளின் 06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 09ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 30

### குறள் தரும் சிந்தனை



வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை

படைக்கலன்களை உடைய வீரர்களிடம் கூடப் பகை கொள்ளலாம். ஆனால் சொல்லாற்றல் மிக்க அறிஞர் பெருமக்களுடன் பகை கொள்ளக் கூடாது.

# சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கை தரும் அங்கீகாரம்

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதற்கு உதவி, ஒத்துழைப்பும் நல்கும் வகையில் சர்வதேச நாணயம் இலங்கைக்கு கடனுதவி வழங்க முடிவு செய்துள்ளது. இதற்கான அங்கீகாரத்தை அந்நிதியத்தின் நிறைவேற்று சபை கடந்த 20 ஆம் திகதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் 'இந்த அங்கீகாரம் சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து 07 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான நிதியுதவியை இலங்கை பெற்றுக்கொள்ள உதவும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்றுவரும் நாட்டில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் சர்வதேச நாணய நிதியத்தின் இந்த அங்கீகாரமானது மேலும் வலுப்படுத்தி உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் இந்நாடு முன்னொருபோதும் முகம்கொடுத்திராத பொருளாதார நெருக்கடியைக் கடந்த வருடம் எதிர்கொண்டது. இந்நெருக்கடியினால் நாடும் மக்களும் மிகவும் மோசமான பாதிப்புக்களையும் நெருக்கடிகளையும் மாத்திரமல்லாமல் அசௌகரியங்களையும் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. முழுநாடும் வங்குரோத்து நிலைக்கு உள்ளானது. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசியல் கொதிநிலையும் தீவிரமடைந்ததோடு, அன்றைய ஆட்சியாளர்கள் தம் பதவிகளையும் இராஜிநாமா செய்தனர்.

இந்நிலையில் நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுக்க எவரும் முன்வரவும் இல்லை. இந்த இக்கட்டான சூழலில் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான பொறுப்பையும் தலைமையையும் வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார். அதற்கமைய அவர் ஜனாதிபதிப் பதவியை ஏற்றது முதல் நாட்டையும் மக்களையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளித்து வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கலானார். அவற்றில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளும் நகர்வுகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்த நாடொன்றை மீளக்கட்டியெழுப்புவதற்குரிய உதவி ஒத்துழைப்புகளை நல்கக்கூடிய உலகளாவிய நிறுவனங்களில் சர்வதேச நாணய நிதியம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அதனால் ஜனாதிபதி பதவி ஏற்றதும் இந்நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்துடன் பல மட்டப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கலானார். அப்பேச்சுவார்த்தைகளிலும் நகர்வுகளிலும் கட்டம் கட்டமாக முன்னேற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ள நிலையில், கடந்த வருடம் செப்டம்பர் மாதம் அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடொன்று சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டது. ஆனாலும் அந்நிதியத்துடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பேச்சுவார்த்தைகள் மற்றும் நகர்வுகளின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இலங்கைக்கு உதவி வழங்கும் இந்தியா, சீனா உள்ளிட்ட கடன் வழங்குநர்கள் கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவு நல்கும் வகையில் எழுத்து மூலம் சர்வதேச நாணய நிதியத்திற்கு அறிவித்தனர்.

இவ்வாறான நிலையில் கடந்த 20 ஆம் திகதி கூடிய சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபைதான் இலங்கைக்கு கடன் வழங்க அங்கீகாரம் அளித்துள்ளது. நாட்டையும் பொருளாதாரத்தையும் மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 07 மாதங்களாக முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள பாரிய வெற்றியே இது.

சர்வதேச நாணய நிதியத்தின் இவ்வறிவிப்பைத் தொடர்ந்து ஆளும்கட்சியினர் மாத்திரமல்லாமல் எதிர்க்கட்சியினரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சிகளைப் பாராட்டியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி விடுத்துள்ள செய்தியில், 'சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவினால் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. இது கடனை மறுசீரமைக்கும் வலிமை கொண்ட நாடு என்ற சர்வதேச அங்கீகாரத்தை எம்மால் பெற்றுக்கொள்ள வழிவகுத்துள்ளது. அதற்கேற்ப இலங்கை வங்குரோத்தான நாடல்ல. அத்தோடு வழமையான கொடுக்கல் வாங்கல்களை இனிமேல் ஆரம்பிக்கும் திறன் எமக்குக் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் நாட்டின் அந்நிய செலாவணியை அதிகரித்துக் கொள்வதோடு, அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள் மற்றும் சுற்றுலாவுக்குத் தேவையான பொருட்கள் மீதான இறக்குமதித் தடைகளும் படிப்படியாக நீக்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் மற்றும் ஜனாதிபதியின் அறிவிப்பை நாட்டு மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். ஆகவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுவரும் நாட்டை வலுவான தேசமாகக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் தரப்பினரும் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதுவே நாட்டு மக்களின் விருப்பமாகும்.

editor.tkn@lakehouse.lk

# ரமழானை பயனுள்ளதாக்குவோம்!

நாம் செய்யும் அனைத்துச் செயல்களும் நமது எண்ணத்தைப் பொறுத்தே அமைகின்றன. நமது செயல்கள் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படுவதற்கும் அதற்கு நன்மை கொடுக்கப்படுவதற்கும் எண்ணம் (நிய்யத்) தான் அடிப்படை. அதன் அடிப்படையில் ரமழானை நாம் பயனுள்ளதாக கழிப்பதற்கு நமது எண்ணத்தை சீராக்கிக் கொள்ள வேண்டும். கடந்த கால ரமழானை நாம் சரியான முறையில் பயன்படுத்தினோமா? அப்படி பயன்படுத்த தவறியிருந்தால் அதற்குக் காரணம் நிய்யத்தை நாம் சரியான முறையில் அமைத்துக் கொள்ளவில்லையென்பதுதான்.



இமாம் இப்னுல் முபாரக் (ரஹ்) அவர்கள் ஒரு தடவை, 'எத்தனையோ அற்பமான செயல்களைக் கூட நிய்யத் மிகப்பெரியதாக மற்றி விடுகிறது. எத்தனையோ மிகப்பெரிய செயல்களைக்கூட நிய்யத் அற்பமானதாக மாற்றிவிடுகிறது' என்று கூறியுள்ளார்கள்.

சரியான நிய்யத்தான் அச்செயலை நன்மையானதாக மாற்றும். எனவே நாம் எண்ணத்தை (நிய்யத்) சீராக்குவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இமாம் சுஃப்யானுஸ் ஸவ்ரி(ரஹ்) அவர்கள், 'என்னுடைய நிய்யத்திற்கு நான் சிகிச்சை அளிப்பதற்கு சிரமப்பட்டதைப் போன்று வேறு எதற்கும் நான் சிரமப்பட்டதில்லை. ஏனெனில் எனது நிய்யத் அடிக்கடி புரண்டுகொண்டே இருக்கிறது' என்றுள்ளார்கள்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், 'நிய்யத்தேயே எல்லா செயல்களுக்கும் அடிப்படை' என்று கூறியுள்ளார்கள். செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கிறது. ஒருவரின் ஹிஜ்ரத் உலகத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் அதை அவர் அடைவார். ஒரு பெண்ணை நோக்கமாகக் கொண்டால் அவளை மணப்பார். எனவே, ஒருவரின் ஹிஜ்ரத் எதை நோக்கமாகக் கொண்டதோ அதுவாகவே அமையும்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்புஹாரி)

நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ் கூறுகிறான் எனது அடியான் நன்மை செய்யவேண்டுமென்று எண்ணினால் நான் அவனுக்கு நன்மையை எழுதிவிடுகிறேன் என்று குறிப்பிடுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்கள். (ஆதாரம் முஸ்லிம்)

அதனால் ரமழானில் இறையச்சத்தை (தக்வா) அடைய வேண்டுமென்று நிய்யத் கொள்ளவேண்டும். நோன்பின் நோக்கமே இறையச்சம்தான்.

'நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் இறையச்சமுடையவர்களாக ஆகக்கூடும்' (அல் குர்ஆன்: 2:183) என்று அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

அல்லாஹ் இவ்வசனத்தில் இறையச்சமுடையவர்களாக ஆவீர்கள் என்று கூறாமல் ஆகக்கூடுமென்று கூறுகிறான். எனவே நமது நிய்யத்தான் நாம் உண்மையான இறைச்சமுடையவரா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும். பாவங்களை விட்டொழித்து எல்லா நிலையிலும் அல்லாஹ் நம்மை கண்காணிக்கிறான் என்ற இறையச்ச உணர்வு நம்மில் வளர வழிவகுக்கும்.

அதேநேரம் அருள்மறையாம் அல் குர்ஆன், 'ரமழான் மாதம் எத்தகையதென்றால், அம்மாதத்தில்தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும், மேலும் நேர்வழியை தெளிவுபடுத்தக்கூடியதும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக்கூடியதுமான அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டது. எனவே இனி உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும்' (02:185) என்று குறிப்பிட்டுள்ளது.

நபி(ஸல்) அவர்கள் மனிதர்களில் மிகப்பெரும் கொடையாளியாகத் திகழ்ந்தார்கள். ஜிப்ரீல்(அலை) அவர்கள், நபி(ஸல்) அவர்களை ரமழான் மாதத்தில் சந்திக்கும்போது நபி(ஸல்) மிக அதிகமாக வாரி வழங்கும் (சாதாரண நாள்களை விட) கொடையாளியாகத் திகழ்ந்தார்கள். ஜிப்ரீல்(அலை) அவர்கள் ரமழான் மாதத்தின் ஒவ்வொரு இரவிலும் நபி(ஸல்) அவர்களைச் சந்தித்து (அது வரை அருளப்பட்டிருந்த) குர்ஆனை நினைவுபடுத்துவார்கள். இருவருமாக அல் குர்ஆனை ஓதும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். தொடர்ந்து வீசும் காற்றை விட (வேகமாக) நபி(ஸல்) அவர்கள் நல்ல காரியங்களில் மிக அதிகமாக வாரி வழங்கும் கொடையாளியாகவே திகழ்ந்தார்கள்.

(ஆதாரம் புஹாரி).

மேலும் ரமழானை பாவங்களிலிருந்து விலகி பாவமன்னிபுக் கோருவதற்கான சிறந்ததோர் மாதமாக அல்லாஹ் ஆக்கியுள்ளான்.

'நம்பிக்கை கொண்டு, நன்மையை எதிர்பார்த்து ரமழான் மாதம் நோன்பு நோற்பவரின் முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம் புஹாரி)

இம்மாதத்தை அடைந்த பின்னரும் யார் தமது பாவங்களுக்கான மன்னிப்பை பெறவில்லையோ அவன்தான் மனிதர்களில் மிகப்பெரிய நஷ்டவாளியாவார். அதனால் ரமழான் மாதம் நன்மையின் மாதம். அதனை சரியாகப் பயன்படுத்தி நோன்பு நோற்றல், ஃபர்ளான, உபரியான தொழுகைகளில் ஈடுபடுதல், குர்ஆன் ஓதுதல், அதிகம் திக்ருகளைச் செய்தல், பிரார்த்தனை (துஆ) செய்தல், தர்மம் செய்தல் போன்ற காரியங்களில் ஈடுபட வேண்டும். அத்தோடு இம்மாதத்தில் ஆயிரம் மாதங்களை விடவும் மகத்துவம் மிக்க இரவு (லைலத்துல் கத்ர்) அமைந்துள்ளது. அந்த இரவையும் உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளவும் தவறக்கூடாது. இவை அனைத்துக்காகவும் தூய எண்ணம் (நிய்யத்) கொள்ள வேண்டும்.

நோன்பு என்பது பசியும் தாகமுமல்ல இறையச்சத்தை வளர்த்துக் கொள்வதற்கானது. அவ்வாறு இறையச்சத்தை வளர்த்துக்கொள்ள முயற்சிக்கும் நாம் நமது குணத்தை அழகாக்க வேண்டும். இப்படிப்பட்ட எண்ணமில்லாமல் நோன்பு நோற்பதனால் அந்நோம்பினால் எவ்வித பயனுமில்லை என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆகவே இந்த புனித மாதத்தை நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டு உச்சளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காக உறுதியான எண்ணம் (நிய்யத்) கொள்வோம்.

**அப்துல்லாஹ்...**

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாட்டில் மகளிர்தின நிகழ்வு

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள்தின நிகழ்வு அண்மையில் கொழும்பு_7, லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்ஹான் பீபி இப்திக்கார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வு 'கிழக்கு மற்றும் மேற்கில் பெண்களின் உரிமைகளும் ,மதிப்புக்களும்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவி கலாநிதி தீபிஹா உடகம, சட்டத்தரணி சிவஸ்திகார அருலிங்கம், ஈரான் நாட்டில் இருந்து வருகை தந்த தெஹ்ரான் பெண்கள் கல்வி பற்றிய கலாநிதி ஸ்ஹேரேஹ் மிப்ராஜி, கொழும்பு பொதுவைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி நசிகா அமீர் ஆகியோர் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

எக்ஸ்பிரஸ் நியூஸ் ஆங்கிலப் பத்திரிகையின் பிரதம ஆசிரியை ஹனா இப்ராஹிம் இந்நிகழ்வினை நெறிப்படுத்தினார். வரவேற்புரையை மீடியா போரத்தின் செயலாளர் சிஹார் அனீஸ், மீடியா போரத்தின் ஆலோசகர் என்.எம். அமீன் ஆகியோர் ஆற்றினர்.

இந்நிகழ்வின்போது முஸ்லிம் பெண்களின் கலைகலாசாரம் மற்றும் முஸ்லிம் பெண்களின் உரிமைகள் பற்றி இஸ்லாம் மதத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகள், பெண்கள் இஸ்லாமிய வாழ்க்கை முறையில் எவ்வாறு வாழ வேண்டும் என்ற விடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. இஸ்லாம் மார்க்கமே பெண்களுக்கு சகல உரிமைகளையும் வழங்கியுள்ளது எனவும் டொக்ர் நசிஹா அமீர் உரை நிகழ்த்தினார்.



மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவி தீபிஹா உடகம இங்கு உரைநிகழ்த்துகையில், "அல் குர்ஆனில் சூறா நிசாவில் பெண்களுக்கான உரிமை பற்றி மிகத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சகல உரிமைகளும் பெண்களுக்கும் உள்ளன. இது எத்தனை முஸ்லிம்களுக்கு தெரியுமோ தெரியாது.

எனது சட்டக்கல்லூரியின் சட்டவகுப்பில் பயில்வோரில் 95 வீதமானவர்கள் பெண்கள். ஆண்கள் 5 வீதம் மட்டுமே உள்ளார்கள். பொறியியல் பீடம் மற்றும் கணினி தொழில்நுட்பப் பிரிவில் ஆண்கள் 75 வீதமும் பெண்கள் 25 வீதமுமே உள்ளனர்.

உலகில் உள்ள சகல மதங்களும் பெண்களுக்கான உரிமைகளை சமமாக வழங்கியுள்ளன. இலங்கை அரசியலமைப்பில் உள்ளூராட்சித் தேர்தலின்போது கட்டாயம் 25 வீதம் பெண் உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அரசியலமைப்பினை உருவாக்கும் ஆணைக் குழுவில், அமைப்புக்களில் பெண்கள் அங்கத்தவர்களாக இல்லை. பெண்களுக்கு தொழில், சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு போன்ற சகல உரிமைகளும் ஆண்களுக்கு உள்ளது போன்றே சமமாக உள்ளன. இலங்கையில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலேயே 1931 இல் வழங்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின்போது முஸ்லிம் மீடியா போரத்தின் வெளியீடான 'முஸ்லிம் ஊடகவியலாளர்கள்' மற்றும் இலங்கை பொது தகவல்கள் அடங்கிய டயரிகளும் அதிதிகளுக்கு கையளிக்கப்பட்டன. மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினர்கள், பெண் ஊடகவியலாளர்கள், பெண்கள் அமைப்பின் உறுப்பினர்கள், சட்டக் கல்லூரி மாணவிகள், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் பௌசி, ஈரான் நாட்டின் கலாசாரப் பணிப்பாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





**அஷ்ரப் ஏ சமத்...**

# வெலிகம பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் அஸ்மி காலமானார்

வெலிகம கப்புவத்தையைச் சேர்ந்த வெலிகம பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.எம். அஸ்மி தனது 73 ஆம் வயதில் அண்மையில் காலமானார். 1950.03.12 அன்று பிறந்த இவர், 1970 ஆம் வருடத்திலிருந்தே அன்றைய வெலிகம தேர்தல் தொகுதி அரசியல்வாதியான காலஞ்சென்ற பானி இலங்கக்கோனுடன் இணைந்து அரசியல் பயணத்தில் காலடி வைத்தார்.

அன்னார் இப்பகுதி அரசியல்வாதிகளுடன் நட்புறவைப் பேணி சமூகத்துக்காக பல்வேறு சேவைகளை செய்து சகலரதும் நன்மதிப்பைப் பெற்றவர். அரசியல்வாதிகளான றொனி டி மெல், மஹிந்த விஜேசேகர, சந்திரசிறி கஜதீர, துடாவை, மங்கள சமரவீர, எச்.ஜி சிறிசேன, சமன் வீரமன், ஹுஸைன் மற்றும் மஹிந்த யாப்பா அபேவர்தன , கஞ்சன விஜேசேகர, டலஸ் அழகப்பெரும போன்றோருடன் நெருக்கமாக பழகி பல்வேறு பணிகளை சமூகத்துக்காக செய்துள்ளார்.

குறிப்பாக அவரது பகுதிக்கு மின்சாரம், குடிநீர் பெற்றுக் கொடுத்தல், வீதி அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளல், கப்புவத்தை அந்நூர் மகாவித்தியாலயத்துக்கு மதில் அமைத்துக் கொடுத்தல், பாடசாலை ஆசிரியர் விடுதிக்கு மின் இணைப்பை பெற்றுக் கொடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டவர்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவரது புதல்வியொருவர் தற்போது லேக்ஹவுஸ் நிறுவன தினகரன் விளம்பர பகுதியில் பணியாற்றுகிறார். மற்றைய புதல்வியொருவர் ஏற்கனவே லேக்ஹவுஸில் கடமை புரிந்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெலிகம பிரதேச சபைக்கு பொது ஜன பெரமுன சார்பில் போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்திருந்த அன்னார், தனது பிறந்த நாளாகிய 2023.03.12 ம் திகதி 73ஆம் வயதில் காலமானார். இவரது ஜனாஸா நல்லடக்கத்தில் அரசியல் பிரமுகர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.



**மௌலவி வாலிஹ்...**
(வெலிகம தினகரன் நிருபர்)

# விசேட தேவையுடைய பெண்கள் சமூகத்தில் தலைநிமிர்ந்து நிற்பதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம்!

மகளிர் தினம் ஒருநாள் மாத்திரம் கொண்டாடப்பட வேண்டிய ஒன்றல்ல. 365 நாட்களும் பெண்களின் சமத்துவம் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இத்தினமானது விசேட தேவைகளையுடைய மாற்றுத்திறனாளி பெண்களை விசேடமாக பாராட்ட மற்றும் ஊக்குவிக்கும் தினமாக அமைய வேண்டும்.



குறைபாடு அல்லது பலவீனம் காணப்படும் போதும் விசேட தேவையுடைய பெண்கள் தைரியமான பெண்களே. அந்த தைரியத்தை மேலும் மிளிரச் செய்து நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களின் பங்களிப்பைப் பெறுவது எமது கடமையாகும்.

உலகம் முன்னேற்றம் அடைந்து வருவதுடன் பெண்கள் ஆண்களோடு சமஉரிமையுடன் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். தற்போது பெண்கள் உலகில் பலம் வாய்ந்த தலைவிகளாகவும் உள்ளார்கள்.

அவ்வாறான சமூகத்தில் விசேட தேவைகளையுடைய மாற்றுத்திறனாளி பெண்கள் முக்கியமானவர்களாவர்.

குறைபாடுகளைத் தாண்டி, அதனை தடையாகக் கொள்ளாது பலர் முன்னேறிச் செல்வதை காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான சூழலின் கீழ் விஷேட தேவைகளையுடைய பெண்கள், பலவீனமான பெண்கள் மற்றும் நவீன உற்பத்திமுறைகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்வது? இது மிகவும் முக்கியமான விடயமாகும்.

தற்போது எமது நாட்டில் விசேடதேவைகளையுடை நபர்களில் பெண்களின் கல்வித்தரம் உயர்மட்டத்தில் காணப்பட்டாலும், செவிப்புலனற்ற பெண்கள் கல்வியில் மிகக்குறைந்த மட்டத்திலேயே உள்ளார்கள். இவ்வாறான சூழலில் அவர்கள் ஆடைக் கைத்தொழிலிலேயே அதிகமாக ஈடுபடுகின்றார்கள். அத்துடன் சுயதொழிலிலும் ஈடுபடுகின்றார்கள். ஆனால் மிகக் குறைந்த அளவினரே கல்விக்கற்று உயர்பதவிகளை வகிக்கின்றார்கள். இதற்குக் காரணம் அவர்களுக்கான கல்விமுறையில் காணப்படும் குறைபாடுகளாகும்.

சமிக்ஞை மொழிபெயர்ப்பாளர்கள் குறைவு. இவ்வாறான நிலைமையில் தற்போதைய விசேட தேவையுடைய பெண்களை நாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்பு செய்வதற்காக திட்டங்களை தயாரிப்பது அவசியமாகும். மேலும் அவர்களுக்காக மேலும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களை பயன்படுத்தும் விதம் குறித்த இணையதளஅறிவை பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களும் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யக் கூடியதாக இருக்கும்.

நாட்டில் விசேடதேவைகளுடையவர்கள் 17 இலட்சம் பேர் காணப்படுகின்றார்கள். அவர்களில் விசேட தேவைகளையுடைய பெண்களுக்கு புதிய பயிற்சிகளை மேற்குறித்த தொனிப்பொருளின் கீழ் தயாரித்து முன்வைக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். அதற்காக நிறுவனங்களுக்குச் செல்ல முடியாத பெண்களுக்கு வீடுகளில் இருந்தே இணையதள வசதிகளின் கீழ் நாட்டின் அபிவிருத்திக்காக பங்களிப்பு செய்வதற்காக முறைகளை அறிமுகம் செய்து அவர்களை இணைத்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

விழிப்புலனற்ற பெண்களின் கல்வித்திறமை உயர்மட்டத்தில் காணப்படுவதோடு, அவர்கள் உயர்பதவிகளையும் வகிக்கின்றார்கள். அவர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

அதேபோன்று விசேட தேவைகளையுடைய மூதாட்டிகளுக்கும் இணையதள வசதிகளை அறிமுகம் செய்து அவர்களையும் இத்துறையில் இணைத்துக் கொள்ளலாம்.

வர்த்தக நிலையங்களுக்கு செல்வதற்கு மாற்றுத்திறனாளிகளுக்கு பாதைகளை அமைத்தல், புதிய தொழில்நுட்ப வங்கி செயல்பாடுகளை அறிமுகம் செய்தல், நிதி பரிமாற்றங்களுக்கு இணையதளம் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான புதிய முறையை அறிமுகம் செய்து அதனை புதுப்பித்தல் போன்றனவும் அவசியம்.

வெளிநாட்டு நடவடிக்கை தொடர்பான புரிந்துணர்வை பெற்றுக் கொடுத்து நிதியை சம்பாதிக்கும் முறையை கற்பித்து காலத்தோடு இணைந்து செயல் படக்கூடிய இலகுவான முறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் அரசு நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்காக விசேட தேவைகளையுடைய பெண்களை வலுப்படுத்துவதற்கான பயிற்சிகளை உருவாக்குவதும் அத்தியாவசியமாகும். விசேட தேவைகளையுடைய பெண்களின் தேவைகளுக்காக தகவல்களை பெற்றுக் கொடுத்தல், பாதுகாப்பை பெற்றுக் கொடுப்பதற்காக விசேட திட்டங்களை திட்டமிட்டு அதனை மேம்படுத்தவும் வேண்டும். விசேடதேவைகளையுடைய இளம் பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகாதிருப்பதற்காக அவர்களுக்கு வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்கும் மத்திய நிலையங்களை ஆரம்பிப்பது முக்கியமாகும்.

அத்துடன் அந்த மத்திய நிலையங்களுக்கு செல்ல, பதிவு செய்ய புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்ய வேண்டியதும் அவசியமாகும். மேலும் விசேட தேவைகளையுடைய பெண்களிடையே நகர மற்றும் கிராம பெண்களிடையே மிக பெரிய இடைவெளி உண்டு.

அதனை குறைப்பதற்கான முறைகளை தயாரிப்பது மிகவும் முக்கியமாகும். தற்போது ஆண் பெண் சமத்துவம் பற்றி பேசும் போது விசேட தேவைகளையுடைய பெண்களை மறந்து விடக்கூடாது. அவளும் சாதாரண பெண்தானே! அவளுக்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டியது எமது பொறுப்பாகும்.



வாருங்கள் எம்மோடு இணைந்து விசேட தேவைகளுடைய தைரியமான பெண்களை நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதற்கு இணைந்து கொள்ளுங்கள்.

கலாநிதி
**ஆஷாதி பெரேரா...**
(கல்வியலாளர் மற்றும் மனநல ஆலோசகர்) விசேட தேவையுடையவர்களுக்கான அமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி
தமிழில்: **வீ.ஆர். வயலட்**

# மூவாயிரம் ஆண்டுகள் கடந்தும் கொண்டாடப்படும் பாரசீக புத்தாண்டு

நவ்ரூஸ் என்பது ஈரானிய புத்தாண்டு ஆகும். இது பாரசீக புத்தாண்டு என்று அழைக்கப்படுகிறது. பல்வேறு இன மொழியியல் மக்கள் குழுக்களால் உலகளவில் இப்புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. நவ்ரூஸ் எனும் பாரசீக புதுவருடம் வசந்த உத்தராயணத்தைக் குறிக்கிறது. இது வழக்கமாக மார்ச் 20 அல்லது 21 அன்று நிகழும். வடக்கு அரைக்கோளத்தில் குளிர்காலம் வசந்தமாக மாறும் நாள், அது ஒரு புதிய தொடக்கமாக உணரப்படுகிறது.



ஈரானில் அதைத் தொடர்ந்து நான்கு நாட்கள் பொதுவிடுமுறையாகும். அதனால் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இரண்டு வாரங்களுக்கு மூடப்படும்.

பாரசீகம் என்பது ஒரு பெரும் சாம்ராஜ்யத்தை கட்டியாண்டது ஆகும். அதற்கென சில பண்பாட்டு நாகரிக பழக்கவழக்கங்கள் இருந்தன. அதிலொன்றுதான் வசந்த காலத்தின் முதல் நாளைக் கொண்டாடும் நவ்ரூஸ் பண்டிகையாகும். பாரசீக சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டிருந்த அனைத்து பிரதேசங்களிலும் இன்றுவரை இப்பண்டிகை அதன் தனித்துவமான ஈரானிய பாரம்பரியங்களுடன் குறைந்தது 3,000 ஆண்டுகளாகக் கொண்டாடப்படுகிறது.

வசந்த காலத்தின் முதல் நாளை சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே மிகத்துல்லியமாக கணிப்பிட்டு வைத்துள்ள ஈரானியர்களின் ஆற்றல், விண்ணியலாளர்களை இன்றளவிலும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. இத்தினத்திற்காக மக்கள் தங்கள் வீடுகளில் ஒரு சிறப்பு அட்டவணையை தயார் செய்கிறார்கள். அங்கு அவர்கள் ஏழு அடையாள உணவுகளையும் மசாலாப் பொருட்களையும் சிறிய உணவுகளையும் வைக்கிறார்கள். இந்த உணவுகளின் பெயர்கள் அனைத்தும் பாரசீக மொழியில் 'சீன்' என்ற எழுத்தில் தொடங்குகின்றன,



எனவே அட்டவணை 'ஏழு சீன்கள்' (ஹஃப்ட்சீன்) என்று அழைக்கப்படுகிறது. உணவுகளில் பொதுவாக கோதுமை அல்லது பீன்ஸ் முளைகள் (சப்ஸே), வினிகர் (செர்கே), அப்பிள்கள் (சிப்), பூண்டு (சர்), கோதுமை சார்ந்த பிட்டு எனப்படும் சமனு, சுமாக் எனப்படும் சிவப்பு மசாலா மற்றும் சென்ஜெட், ஒரு வகையான காட்டு ஒலிவ் ஆகியவை அடங்கும்.

இந்நிலையில் 2010 ஆம் ஆண்டின் A / RES / 64/253 என்ற தீர்மானத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையால் இத்தினம் சர்வதேச நவ்ரூஸ் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஈரானியர்கள் தங்கள் குடும்பத்துடன் நவ்ரூஸ் இரவைக் கழிக்கிறார்கள். பாரம்பரிய புத்தாண்டு இரவு உணவு அரிசி மற்றும் மூலிகைகள் கொண்ட மற்றும் அதில் வெண்சதை கொண்ட மீனும் அடங்கியிருக்கும். பல குடும்பங்களில் புத்தாண்டைக் குறிக்க குழந்தைகளுக்கு பணப்பரிசு வழங்குவது வழக்கம். மக்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீட்டிற்குச் சென்று பாரம்பரிய பரிசுகளை வழங்குவார்கள். இந்தப் பரந்த பிராந்தியத்தில் பல்வேறு மதங்களையும் கலாசாரங்களையும் சேர்ந்த மக்களால் கொண்டாடப்படும் நவ்ருஸ் பண்டிகையின் ஆரம்பகால தோற்றங்கள் சில ஜோராஸ்ட்ரியனிசத்தில் இருந்து ஆரம்பிக்கின்றன. இது பண்டைய ஜோராஸ்ட்ரியன் காலண்டரில் புனிதமான நாட்களில் ஒன்றாக உள்ளது.

ஈரான் இஸ்லாமிய குடியரசுடன் ஆப்கானிஸ்தான், அல்பேனியா, அஜர்பைஜான், முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசு மாசிடோனியா, இந்தியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், துருக்கி மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகளும் இப்பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடுகின்றன. நவ்ரூஸ் உலகம் முழுவதும் சுமார் 300 மில்லியன் மக்களால் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் பாரம்பரிய கவிதை, பாடல் மற்றும் நடனம் என்பன கொண்டாட்டங்களில் முக்கிய பங்கு வகிக்கின்றன, மேலும் நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் பங்கேற்கவும் மக்கள் தெருக்களில் நிரம்பி வழிகிறார்கள். குதிரை சவாரி, மல்யுத்தம் போன்ற பாரம்பரிய விளையாட்டுகளும் இடம்பெறும்.

இப்பண்டிகை குறித்து ஐ.நா, 'குடும்பங்களுக்கு இடையிலான ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்திற்கும் நாடுகளுக்கு இடையிலான சமாதானம், கலாசாரம், பாரம்பரியம் மற்றும் பல்வேறு சமூகங்களுக்கிடையேயான நட்புறவு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது' என்றுள்ளது.

ஜோராஸ்ட்ரிய பாரம்பரியத்தின்படி, வசந்தத்தின் வருகை மிகுந்த ஆன்மிக முக்கியத்துவத்தைக் கொண்ட ஒன்றாகும். இது தீமைக்கு எதிரான போராட்டத்தில் நன்மையின் வெற்றியைக் குறிக்கிறது. துக்கம் களைந்து மகிழ்ச்சி பொங்கச் செய்வதைக் குறிக்கிறது. பாரசீக புத்தாண்டு நவ்ருஸைக் கொண்டாட உலகெங்கிலும் உள்ள ஈரானியர்கள் தங்கள் வீடுகளை முழுமையாக சுத்தம் செய்கிறார்கள். இது 'தூசி துடைத்தல் வைபவம் என்று அழைக்கப்படுகிறது, மேலும் பழையன கழிந்து, பழைய வருடத்திற்கு விடை சொல்லி, புத்தாண்டை வரவேற்பதை இது குறிக்கிறது.

அவர்கள் தங்கள் கவலைகளையும் சிக்கல்களையும் போக்கும்படி இறைவனிடம் பிரார்த்தனை செய்து கடைசி நாள் நிறைவு பெற்று, புத்தாண்டு ஆரம்பிக்கையில் எல்லோரும் தங்கள் குடும்பத்தினருடனும் அன்பானவர்களுடனும் ஒன்றாக இருப்பதற்காக தத்தம் வீடுகளுக்கு விரைந்து செல்வர்.

**தாஹா முஸம்மில்...**

# அட்டாளைச்சேனை அந்நூர் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கும், மாணவருக்கும் பாராட்டுவிழா

அட்டாளைச்சேனை அந்நூர் மகாவித்தியாலயத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சாதாரண தராத்தில் 9A, 8A சித்தி பெற்ற மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.

'சிறகு விரித்த சிட்டுக்களுக்கு ஆரம் சூடும் மகிழ்ச்சிப் பெருவிழா' 2022 எனும் தொனிப்பொருளில் பாடசாலை அதிபர் அஸ்மி தலைமையில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது குறித்த மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் வலய கல்விப் பணிப்பாளர் A.M. ரஹ்மத்துல்லா பிரதம அதிதியாகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.றஸ்மி ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், ஆசிரிய ஆலோசகர்களான எஸ்.எல்.மன்சூர் உட்பட்டோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள், பாடசாலையில் பல்வேறு துறைகளிலும் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.





அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர் என பெருந்திரளானோர் கலந்து கொண்ட குறித்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**றிசாத் ஏ. காதர்...**
*(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)*

# இந்தியாவில் 24 மணிநேரத்தில் 1,134 பேருக்கு கொவிட் தொற்று!

இந்தியாவில் நேற்றுக்காலை வரையான 24 மணிநேரத்தில் 1,134 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் கடந்த சில நாட்களாக கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கி உள்ளது.



இதன்படி இந்தியாவில் கொரோனா பரவல் வீதம் 0.7% இல் இருந்து 1.9% ஆக அதிகரித்துள்ளது. டெல்லியிலேயே கொரோனா பரவல் மிக அதிகமாக உள்ளது. டெல்லியில் நேற்றுக்காலை வரையான 24 மணிநேரத்தில் 83 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகி உள்ளது. டெல்லியில் கொரோனா பரவல் வீதம் 5.83% ஆக உள்ளது.

இந்தியாவில் மாத்திரமன்றி உலகின் பல நாடுகளில் கொரோனா பரவுவது அதிகரித்து வருகின்றது. இதேவேளை இந்தியாவில் நேற்று காலை 8 மணிவரையான 24 மணி நேரத்தில் 435 பேர் கொவிட் பாதிப்பிலிருந்து மீண்டுள்ளனர்.

# அம்பலந்துவை மக்களின் நலன் கருதி புதிய பஸ் சேவையொன்று ஆரம்பம்

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிராமிய போக்குவரத்துச் சேவைகளை வலுவூட்டும் வேலைத் திட்டத்தின் கீழ் பாணந்துறை இ.போ.ச டிப்போவுக்கு கிடைத்த முதலாவது புதிய பஸ் வண்டி அம்பலந்துவை கிராமத்துக்கு டிப்போ முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்டுள்ளது.



அம்பலந்துவை கிராமம் முஸ்லிம்கள் வாழ்கின்ற கிராமம் ஆகும். அம்மக்களின் நலனைக் கருத்திற் கொண்டே இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாணந்துறை_ அம்பலந்துவை சேவையில் ஈடுபட்ட பஸ் வண்டிக்குப் பதிலாக புதிய பஸ் வண்டியின் சேவை அங்குரார்ப்பண நிகழ்வில் அம்பலந்துவை ஜும்ஆ பள்ளிவாசல் தர்மகர்த்தா சபை செயலாளரும் பாடசாலை அதிபருமான ரிஸ்மி மஹ்ரூப், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எம்.எஸ். எம்.சிறாஜ் மற்றும் ஊர்மக்கள், டிப்போ முகாமையாளர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



பாணந்துறை இ.போ.ச டிப்போவின் அம்பலந்துவை பஸ் சேவை சிறந்த வருமானத்தை பெற்றுத் தரும் சேவையொன்றாக இருப்பதுடன் பிரதேச மக்களும் இந்தச் சேவையில் கரிசனையுடன் செயல்பட்டு வருகின்றனர். இதனை மையமாக் கொண்டு டிப்போவுக்கு கிடைத்த புதிய பஸ் வண்டியை இந்தக் கிராமத்தின் சேவைக்கு ஒதுக்கியதாகவும் இந்த பஸ் வண்டியை வேறு பிரதேச சேவைகளுக்கு மாற்றுவதில்லை எனவும் நிகழ்வில் உரையாற்றிய முகாமையாளர் தெரிவித்தார்.

"எமது கிராம மக்கள் மீது நம்பிக்கை வைத்து புதிய பஸ்வண்டியை எமது மக்களின் சேவைக்காக ஒதுக்கியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. எமக்கு பாணந்துறை தனியான பஸ்சேவை இல்லை. இந்த பஸ் வண்டியையும் சேவையையும் பாதுகாத்துக் கொள்வது மக்களின் முக்கிய பொறுப்பாகும்" என நன்றியுரை நிகழ்த்திய அதிபர் ரிஸ்மி மஹ்ரூப் தெரிவித்தார்.

பள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.எஸ்.எம். செயித் துஆப் பிரார்த்தனை நடத்தினார். இந்த பஸ் வண்டியானது சேவையின் பின்னர் டிப்போவில் நிறுத்தி வைக்கப்படுவதில்லை. டிப்போ முகாமைத்துவத்தின் அனுமதியுடன் இரவில் பள்ளிவாசல் வளவில் நிறுத்தி வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சாரதியும் நடத்துனரும் இங்கு வந்து கடமையை ஆரம்பிக்கின்றனர்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
*(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)*

## நாட்டை பொருளாதார... (3 ஆம் பக்கத் தொடர்)

இலங்கையானது பல்வேறு காலகட்டங்களிலும் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டுள்ளது,

2020 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்ததன் பின்னர்நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னரே சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.இதற்கு பல்வேறு காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது தொடர்பான அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இவ்வாறான அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

வங்குரோத்து நிலையை அடைந்துள்ள பின்னணியில் வெளிப்படை த்தன்மையுடன் செயற்பட வேண்டும் என்பதற்காகவே அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு முழுமையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை முழுமையாக பெற்றுக்கொள்ள அனைத்து தரப்பினரும் அரசியல் நோக்கமற்ற வகையில் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எல்லேவல நீர்வீழ்ச்சியில்... (3 ஆம் பக்கத் தொடர்)

வெல்லவாய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து சடலங்கள் இவர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நான்கு இளைஞர்களின் ஜனாஸாக்களும் நேற்றிரவு பெரும் திரளானோரின் பங்குபற்றலுடன் நல்லடக்கம் செய்யப்பட்டன.

கல்முனைக்குடி பள்ளி வீதியைச் சேர்ந்த முஹம்மட் சுஹ்ரி லாபிர், ஹனீபா வீதியைச் சேர்ந்த அபூபக்கர் ஹனாப், சாய்ந்தமருது 16ஆம் பிரிவைச் சேர்ந்த முகம்மட் முக்தார் முகம்மட் நௌபீஸ், சம்மாந்துறையைச் சேர்ந்த அஹ்மட் லெப்பை அப்ஸால் ஆகியோரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் கல்முனைப் பிரதேசத்தை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வெல்லவாய பொலிஸார் விரிவான விசாரணை முன்னெடுத்துள்ளனர்.

# 42 ரூபா முட்டையை 52க்கு விற்ற வர்த்தகர்

## நீதிமன்றால் 12 இலட்சம் அபராதம்

கட்டுப்பாட்டு விலையைக் கருத்திற்கொள்ளாமல, முட்டையை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு 12 இலட்சம் ரூபா அபராதத்தை விதிக்க கெஸ்பேவ நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

42 ரூபா என்ற கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ள வெள்ளை முட்டையை, 52 ரூபாவுக்கு நான்கு வர்த்தகர்கள் விற்பனை செய்துள்ளனர்.

பொரலஸ்கமுவ, போகுந்தர மற்றும் பிலியந்தலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வர்த்தகர்களே அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்துள்ளனர்.

அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே கெஸ்பேவ நீதவான் நீதிமன்றம் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

## "லிஸ்திரியா" நோயின்... (3 ஆம் பக்கத் தொடர்)

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்ற இரண்டு யாத்ரீகர்கள் உயிரிழந்த போது அவர்களுக்கு லிஸ்திரியா தொற்று பரவியிருக்கலாம் என கூறப்பட்ட போதிலும் இதுவரையில் அது உறுதிப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாகவும், அந்தப் பகுதிகளுக்கு சென்று உணவு மற்றும் நீர் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு பரிசோதனை நடத்தப்படும் எனவும் தொற்று நோய்த் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது.

### ஆணைக்குழுக்கள் பற்றிய அனுபவம் பெற

# விஜேயதாச, அலி சப்ரி தென்னாபிரிக்கா பயணம்!



நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் அடங்கிய இலங்கைக் குழுவொன்று நேற்று தென்னாபிரிக்கா பயணமாகியுள்ளது.

இலங்கை அரசாங்கம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ள 'உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின்' பணியை, முறையாகவும் வெற்றிகரமாகவும் மேற்கொள்வதற்கான அனுபவத்தைப் பெறுவதே இந்த பயணத்தின் நோக்கம் என்று நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக, இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் எஸ்.ஈ. ஷால்க், தென்னாபிரிக்காவிற்கு சென்று அங்கு ஸ்தாபிக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் அனுபவத்தைப் பெறுமாறு விசேட இராஜதந்திர அழைப்பொன்றை விடுத்திருந்தார்.

இதேவேளை தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, தேசிய ஒற்றுமை அரசாங்கத்தால், இனவெறி ஆட்சியின் போது கடத்தல்கள், கொலைகள் மற்றும் சித்திரவதைகள் உட்பட ஒட்டுமொத்த மனித உரிமை மீறல்களை விசாரிக்க அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணில்... (3 ஆம் பக்கத் தொடர்)

கிரேண்பாஸில் சுலைமான் வைத்தியசாலை அமைக்கப்பட்டது.

என்றாலும் தற்போது அந்த வைத்தியசாலை இல்லை. அந்த இடம் ஆயிரத்தி 180 மில்லியன் ரூபாவுக்கு 20 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

என்றாலும் இந்த பணம் கபூரிய்யா அரபுக்கல்லூரிக்கு செலவிடப்படாமல், என்.டீ.எச். அப்துல் கபூர் ஹாஜியாரின் மூன்று பரம்பரையினர் இந்த கல்லூரியின் விடயத்தில் முறையாக செயற்பட்டு வந்தபோதும் தற்போது 4ஆவது பரம்பரையில் வந்த ஒருவர் இந்த கல்லூரியை முற்றாக அழித்துவிடும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நடவடிக்கைகள் தொடர்பாக மஹரகம பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

என்றாலும் இந்த நபர் பொலிஸ் அதிகாரிகளையும் தன்பக்கம் வலைத்துக்கொண்டு, தற்போது கல்லூரியில் கல்வி கற்றுவரும் மாணவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்.

நாட்டில் இவ்வாறு பல நூறு வருடங்களுக்கு முன்னர் முஸ்லிம் தனவந்தர்கள் வக்பு செய்துவந்த சொத்துக்களை, அவர்களின் பரம்பரையினர் அந்த சொத்துக்களை தங்கள் பக்கம் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதனால் இந்த நிலை தொடர்ந்தால் வக்பு செய்யப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் தங்களின் குடும்ப சொத்து என அபகரித்துக்கொள்ளும் நிலை எதிர்காலத்தில் ஏற்படும்.

அதனால் கபூரிய்யா கல்லூரி பிரச்சினையை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி, இதற்கு தீர்வொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## மே மாதத்தில்... (3 ஆம் பக்கத் தொடர்)

தற்போது நாடளாவிய ரீதியில் ஆசிரிய இடமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, 7500 கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களின் பெறுபேறுகள் பரீட்சை திணைக்களத்தினால் தேசிய கல்வி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கு மீளாய்வு மேற்கொண்டதன் பின்னர் இந்த மாத இறுதிக்குள் பெறுபேறுகள் உத்தியோகபூர்மாக வெளியிடப்படும்.

அவர்கள் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். அதன் மூலம் மாகாண பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்கள் பிரச்சனை முடிவுக்கு வரும்.

அதற்கு மேலதிகமாக 26 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை அவர்களுக்கான பரீட்சை நடைபெறவுள்ளது. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 53,000 பட்டதாரிகள் அந்த பரீட்சையில் தோற்றவுள்ளதுடன் நாடளாவிய 141 பரீட்சை நிலையங்களில் இந்த பரீட்சை நடைபெறவுள்ளது. அதன் பெறுபேறுகளை விரைவில் வெளியிட எதிர்பார்த்துள்ளோம்.

கல்விப் பொது தரதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் முன்னெடுக்கப்படவுள்ளது. அதனை யடுத்து நாம் பெறுபேறுகளை மாகாணங்களுக்கு அனுப்பவுள்ளோம். அங்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு மாகாண அடிப்படையில் அந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த இரு முறைமையின் கீழ் 33,000 ஆசிரியர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மே மாத நடுப்பகுதியில் இவர்களுக்கு நியமனங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் நாம் கண்காணிப்பு ஒன்றை மேற்கொண்டு வருகின்றோம் விஞ்ஞானம் கணிதம் ஆங்கிலம் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு உயர் தரத்திற்காக ஆசிரியர்களை நியமித்து அதில் ஏற்படும் பற்றாக்குறையை நாம் தனியாக மாகாண ரீதியில் நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில் அண்மையில் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியான பட்டதாரிகளுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும். அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் கல்வியமைச்சு முன்னெடுத்து வருகிறது.

## இனப்பிரச்சினைக்கான... (3 ஆம் பக்கத் தொடர்)

தேவைகளுக்காக பயன்படுத்தப்படவும் வேண்டும். அதேவேளை, நாட்டில் நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்ச்சியாக ஏமாற்றமாகவே காணப்படுகிறது. அதன் முக்கியத்துவம் உணரப்பட்டு சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைகளில் அதுவும் ஒரு அம்சமாக அமைய வேண்டியது அவசியம்.

இந்த எமது கோரிக்கையையும் அதில் உள்ளடக்குமாறு நாம் சர்வதேச நாணய நிதியத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை, ஊழல் மோசடிகளை தடுப்பது தொடர்பிலும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. ஆட்சியாளர்கள் ஊழல்களுக்கு முக்கியம் கொடுத்து செயற்பட்டமையே நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டமைக்கான காரணமாகும்.

ஊழல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த விடயத்தில் நீதியாக நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊழலுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். அப்போதுதான் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைகிறேன் நாடு செழிப்புள்ளதாக மாறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எதிர்க்கட்சி ஒருபோதும்... (3 ஆம் பக்கத் தொடர்)

ஆனால் தற்போது அந்த நிதியத்தின் கடன் எமக்கு கிடைத்துள்ளது.

இப்போது பாராளுமன்றத்தில் குமார வெல்கம போன்றவர்கள் அதற்காக ஜனாதிபதியைப் பாராட்டும் நிலை உருவாகியுள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## குவைத்தில்;... (3 ஆம் பக்கத் தொடர்)

அறிவித்துள்ளனர். இந்நிலையில் இலங்கைக்கான தூதரகத்தின் நடவடிக்கையால் 48 இலங்கையர்களும் நேற்று நாடு திரும்பியுள்ளனர். 38 பெண்களும் 10 ஆண்களுமே இவ்வாறு நாடு திரும்பியுள்ளதாக எமது செய்தியாளர் குறிப்பிட்டார்.

## மேலதிக நீதவான்... (3 ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையிலேயே வழக்கை எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

## அரசின் நடவடிக்கைகளுக்கு...

பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பு, எதிர் தரப்பு என இரு பக்கத்திலுமே திருடர்கள் உள்ளனர். அதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த வகையில் திருடரைப் பிடிக்க வேண்டும் என விமர்சிப்பதை விடுத்து நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்திப்பதே சிறந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

மோசடிகளுக்கு உட்பட்டுள்ள நிதி தற்போது நாட்டில் கிடையாது. அந்த வகையில் திருடர்களைப் பற்றி பேசுவது, விமர்சிப்பது பயனற்றது என தெரிவித்த அவர், நாட்டின் எதிர்காலத்தையும் இளம் தலைமுறையினரின் எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில் நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரையையடுத்து கருத்துக்களை முன்வைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளமை தொடர்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாடு வங்குரோத்து நிலைய அடைந்துள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடுமையான உழைப்பிற்கிணங்கவே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

அது தொடர்பில் எதிர்க்கட்சி என்ற வகையிலும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

தற்போதைய நிலையில் அதற்கான முழுமையான ஒத்துழைப்பை நான் வழங்குவேன். நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. எல்லாக் காலங்களிலும் திருடன், திருடன் என இருதரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் எந்த திருடனும் இதுவரை பிடிபடவில்லை.பிடிக்கப்பட்ட திருடனும் இல்லை. பாராளுமன்றத்தில் இரு புறமுமே திருடர்கள் உள்ளார்கள் என்பதே உண்மை.

பாராளுமன்றத்தில் 30 வருடகால அனுபவத்தைக் கொண்டவன் என்ற அடிப்படையில், ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் திருடர்கள் உள்ளனர் அவர்கள் பிடிப்பட்டால் அனைவரும் நெருக்கடிக்குள்ளாவார்கள் என்பதால் திருடர்கள் ஒருபோதும் அகப்படமாட்டர்கள்.

ஜனாதிபதியால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியாது என ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியினர் குறிப்பிட்டார்கள்.

ஆனால் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் அதன் பயனை முழுமையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாட்டின் எதிர்காலத்தையும் இளம் தலைமுறையினரின் எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கில் 103 பாடசாலைகள்...

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 49 பாடசாலைகளும், கிளிநொச்சியில் 8 பாட சாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 10 பாடசாலைகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பாடசாலைகளும் வவுனியா மாவட்டத்தில் 34 பாடசாலைகளுமே இவ்வாறு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. வவுனியாவில் வவுனியா வடக்கு கல்வி வலயத்திலேயே இந்த எண்ணிக்கை உயர்வாகப் பதிவாகியுள்ளது என்றார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் அ.உமாமகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கில் எந்தவொரு பாடசாலையும் நிரந்தரமாக மூடப்படவில்லை. வடக்கு மாகாண கல்விப்

பணிப்பாளர் கூறிய 103 பாடசாலைகளும் தற்காலிகமாகவே மூடப்பட்டுள்ளன. மாணவர் பற்றாக்குறை காரணமாகவே இவை மூடப்பட்டுள்ளன. இதற்கு இடப்பெயர்வுகள், நகர்ப்புற பாடசாலைகளின் வளர்ச்சி, நகரமயமாக்கல், சனத் தொகைப் பற்றாக்குறை எனப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பால் இன்று சில பாடசாலைகளில் புதிதாகக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. மறுபுறம் சில பாடசாலைகள் மூடப்படுகின்றன. நகர்ப்புற பாடசாலைகளின் வளர்ச்சியும் இதற்குக் காரணம். பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சில இடங்களில் மக்கள் இல்லை.

சில இடங்களில் நகரமயமாக்கல் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது. இது குறித்து நாம் அவதானம் செலுத்துகின்றோம். முறைப்படியான விழிப்புணர்வு நடவடிக்கைகளை எமது தரப்பில் நாமும் முன்னெடுப்பதற்குத் தயாராக உள்ளோம். தற்காலிகமாகப் பாடசாலைகளை மூடுவது எமது விருப்பு அல்ல.

போதிய எண்ணிக்கையான மாணவர்கள் வருகை தருவார்களாயின் நிச்சயமாக பாடசாலைகள் மீள ஆரம்பமாகும் என்றார்.

## வீதி கட்டமைப்பிலுள்ள...

என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திருமதி முதிதா பிரசாந்தி எம்பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகளுக்கு காபர்ட் போடும் திட்டத்தின் கீழ் இதுவரை 6,385 கிலோ மீற்றர் வீதிகளுக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதுடன் மேலும் 453 கிலோ மீற்றருக்கான செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் விளக்கமளித்த அமைச்சர்,

நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலை, பொருளாதார நெருக்கடி, ஒப்பந்தக்காரர்களுக்கு நிலுவைப் பணம் செலுத்தாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் பல வீதி அபிவிருத்தி நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன.

இவ்வாறு நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களின் பணிகளை முழுமையாக நிறைவு செய்து இந்த வருட இறுதிக்குள் மக்கள் அதனை உபயோகப்படுத்துவதற்காக வழங்க முடியும்.

அரசாங்கத்திடமிருந்து நிதி கிடைக்காததால் தற்கொலை செய்து கொண்ட ஒப்பந்தக்காரர்களும் உள்ளனர்.

அந்த வகையில் எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டுக்கு முன்பதாக ஒப்பந்தக்காரர்களுக்காக வழங்கப்பட வேண்டிய நிலுவைப் பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அவர்கள் தமது நிலுவைப் பணத்தை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சுக்கு வந்து அலைய வேண்டிய அவசியம் கிடையாது. அந்த ஒப்பந்தக் காரர்களின் வங்கிக் கணக்கில் நாம் அந்த அந்த நிதியை வைப்பிலிட தீர்மானித்துள்ளோம்.

எந்த மேலதிக அறவீடும் அதற்காக பெற்றுக் கொள்ளப் போவதில்லை. முறையான வகையில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஞானக்கா வீட்டில்...

பெண்ணின் வீட்டில் சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் மற்றும் பணம் திருடப்பட்டமை தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஞானக்காவின் மகளின் கணவர் இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து அநுராதபுரம் தலைமையகப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

திருடப்பட்ட பணம் மற்றும் தங்க நகைகளின் பெறுமதி சுமார் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா என அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இன்று 23ஆம் திகதி நடைபெறவுள்ள நண்பரின் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கொழும்பு செல்வதாக தெரிவித்த அவர், மனைவியின் அலுமாரியில் இருந்த தங்க நகைகளை சோதனையிட்டபோது பணத்துடன் தங்க நகைகளும் காணாமல் போனதை அவதானித்ததாக அவர் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

## இந்திய நிதி அமைச்சருடன்...

அடிப்படையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டை நனவாக்குவதற்கு இந்திய அரசாங்கம் வகித்த தலைமைத்துவத்திற்காக இந்திய நிதியமைச்சர் சீதாராமனுக்கு இலங்கை உயர்ஸ்தானிகர் நன்றி தெரிவித்தார்.

இந்தநிலையில் அமைச்சர் சீதாராமன் மற்றும் உயர்ஸ்தானிகர் மொரகொட ஆகியோர், இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பில் முன்னோக்கி செல்லும் வழி குறித்தும் விவாதித்தனர்.

இந்திய முதலீடுகளை இலங்கைக்கு ஈர்ப்பது, இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவது, குறிப்பாக இந்திய ரூபாய் வர்த்தக விரிவாக்கம் மற்றும் இலங்கைக்கு இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கான வழிமுறைகளும் இதன்போது ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 10,000 ரூபாவால்...

தரப்பட்டுள்ளது.

தங்க அவுன்ஸ் – ரூ. 625,882.00

24 காரட் 1 கிராம் – ரூ. 22,080.00

24 காரட் 8 கிராம் (1 பவுண்) – ரூ. 176,650.00

22 காரட் 1 கிராம் – ரூ. 20,240.00

22 காரட் 8 கிராம் (1 பவுண்) – ரூ. 161,950.00

21 காரட் 1 கிராம் – ரூ. 19,320.00

21 காரட் 8 கிராம் (1 பவுண்) – ரூ. 154,600.00

## மாணவர்களுக்கான...

விடுமுறைக்கு முன்னர் இந்த விநியோக நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

முதல் கட்டத்தில் சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சீருடைகள் 70 வீதமான மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. இதனிடையே, பாடசாலை பாடப்புத்தக விநியோகம் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## தமிழ் கடற்றொழிலாளர்களது...

கொள்ளாமல் இருப்பது வருத்தமளிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் ஜேகப் உடனான சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற குறித்த சந்திப்பு தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

இலங்கையின் கடல் வளத்தினையும், வட பகுதி தமிழ் பேசும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினையும் பாதுகாக்கும் நோக்குடன் இலங்கை கடற்படையினர் மேற்கொள்ளும் சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக இந்தியாவில் வெளிப்படுத்தப்படும் தவறான கருத்துக்கள் இரண்டு நாடுகளுக்கும் இராஜதந்திர நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடியவை எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்ட விரோத தொழிலை கட்டுப்படுத்துவது தொடர்பாக முன்னெடுக்கப்படும் இராஜதந்திர அணுகுமுறைகளின் தொடர்ச்சியாக நேற்று பிரதி உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு இடம்பெற்றதாகவும், இதன்போது இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்தில் இரண்டு நாடுகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## மஹிந்த, பசில் மீதான...

குறிப்பிடப்பட்டிருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை தொடர்ந்து நீடிப்பதில்லை என உயர் நீதிமன்றம் நேற்று (22) தீர்மானித்துள்ளது.

நேற்று இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நவீன் மாரப்பன, இது தொடர்பான தனது வாதங்களை முன்வைத்தார்.

மேலும், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு இதனை அறிவிக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறும் ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தை கோரினார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம், பிரதிவாதிகள் இருவருக்கும் விதிக்கப்பட்ட பயணத்தடை இனி இல்லை என்பதை குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்குமாறு உயர் நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிட்டது.




# அமைச்சர் டக்ளஸ் - எகிப்து தூதுவருக்கிடையில் சந்திப்பு



## வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நிதியுதவி தொடர்பில் கலந்துரையாடல்

இலங்கை கடற்றொழில் சார்ந்த அபிவிருத்தியில் எகிப்தின் அனுபவங்களையும் ஒத்துழைப்புக்களையும் பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான எகிப்து தூதுவர் மாகட் மொஷ்லே மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. இதன்போது, கடற்றொழிலாளர்கள், கடலுணவு உற்பத்தியாளர்கள் போன்றோருக்கு உதவுவதற்கு தாம் விருப்பமாக இருப்பதாகத் தெரிவித்த எகிப்து தூதுவர், தமது நாட்டின் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள தயாராகவிருப்பதாக தெரிவித்ததுடன் விரைவில் வட மாகாணத்திற்கு தான் வருகைதர எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எகிப்து தூதுவரின் வடக்குக்கான விஜயத்தை ஆர்வமுடன் எதிர்பார்த்திருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது தெரிவித்தார். மேலும் கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை சார்ந்து மேற்கொள்ளப்படுகின்ற திட்டங்களை எடுத்துரைத்ததுடன், வெளிநாடு முதலீட்டாளர்களின் நிதியுதவியை எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# முகமாலையில் கண்ணிவெடி அகற்றப்பட்ட நிலங்களில் விவசாய நடவடிக்கை

கிளிநொச்சி குறூப் நிருபர்



முகமாலையில் கண்ணிவெடி முழுமையாக அகற்றப்பட்ட நிலங்களில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யுத்தக்காலத்தில் அதிகளவில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட முகமாலையில் தற்போது படிப்படியாக அவை அகற்றப்பட்டு பாதுகாப்பான பகுதியாக பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டுவருகின்றன. இதனால் பொதுமக்கள் அவ்வாறு கையளிக்கப்பட்ட பிரதேசங்களில் பாரியளவிலான முந்திரி தோட்டங்கள், தென்னை செய்கை உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். டாஸ் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் அமைப்பு முகமாலை மற்றும் மணலாறு பகுதிகளில் இதுவரை 357 இடங்களில் முழுமையாக கண்ணிவெடிகளை அகற்றியுள்ளதோடு, 13 இடங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர். யப்பான் நாட்டு பொது மக்களின் நிதியுதவியில் வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.



யாழ்ப்பாணத்தில் 'தண்ணீர் நெருக்கடியை வெற்றிகொள்வது எப்படி?' என்ற தொனிப்பொருளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று உலக நீர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் எந்திரி ச. சர்வராஜா கலந்துகொண்டிருந்தார்.

# மந்திரிமனை புனரமைப்பு பணிகளுக்கு பொதுமக்கள் ஆதரவு தேவை

யாழ்.விசேட நிருபர்

சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு பணிகள் இரண்டு வாரத்துக்குள் முடிவடைந்து விடும். அதன்பின்னர் மந்திரிமனை புனரமைப்பு பணிகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதால் அதற்கான நிதியுதவிகளை மக்களிடம் கோருவதாக தொல்லியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் பரமு.புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

மந்திரிமனை வளாகத்தினுள் உள்நுழைய தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் 86 இடங்கள் மரவுரிமை இடங்களாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. அதில் முதலாவதாக மந்திரிமனை, சங்கிலியன் தோரண வாசல், ஜமுனா ஏரி மற்றும் சங்கிலியன் அரண்மனை ஆகிய இடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு அவற்றுக்கான பெயர்ப்பலகையும் அங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அவை வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டுள்ளன. தொல்லியல் திணைக்களம் மரவுரிமை இடங்களாக அடையாளப்படுத்தி அதனை வர்த்தமானியில் பிரசுரம் செய்தால் நில உரிமையாளர் அங்கு புதிதாக எதையும் மாற்றி அமைக்க முடியாது.



அதேசமயம் தொல்லியல் திணைக்களமும் நில உரிமையாளரின் அனுமதியின்றி எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளமுடியாது. இதனால் தான் மந்திரிமனை உரிய காலத்தில் பேணப்படவில்லை. அதேசமயம் மந்திரிமனை அமைந்துள்ள நிலத்தைப் பெற்று அதனை புனரமைக்கும் வசதிகள் தொல்லியல் திணைக்களத்திடமில்லை.

அதனால் தான் நாம் யாழ்ப்பாணத்தில் மரவுரிமை மையமொன்றினை உருவாக்கினோம். அதன் முதற்பணியாக சங்கிலியன் தோரண வாசலை புனரமைத்தோம். அது முடிவடையும் தருவாயில் உள்ளது. அதற்கு மருத்துவபீட பேராசிரியர் மருத்துவர் ரவிராஜ் 2.2 மில்லியன் ரூபாவை கொடுத்து உதவினார்.

மந்திரி மனை புனரமைக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது அதனுடைய உரிமையாளர் எங்களோடு தொடர்பு கொண்டு சில நிபந்தனைகளை விதித்தார். அது முழுமையாக வெற்றியளிக்கவில்லை. பின்னர் நாங்கள் அந்த நிலத்தை விலை கொடுத்து வாங்குவதற்கு முயற்சி எடுத்தோம். அதனை அவர் தவணை முறையில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டார்.

நாங்கள் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள தொல்லியல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே சங்கிலியன் தோரண வாசல் வேலைகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் மந்திரிமனை பணிகள் ஆரம்பிக்கப்படும். பல மில்லியன் கணக்கான பணம் அதை புனரமைப்பதற்கு தேவைப்படுகின்றது. எனவே அவற்றை மீள் உருவாக்கம் செய்வதற்கு நிதியுதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

# ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, இறம்பைக்குளம் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 10 கிராம் 470 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இறம்பைக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு விசேட சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேகநபரின் உடமையிலிருந்து 10 கிராம் 470 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார்.

வவுனியா தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை வவுனியா நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஊர்காவற்துறையில் இடிந்து வீழ்ந்த இறங்குதுறை

யாழ்.விசேட நிருபர்



காரைநகர் ஊர்காவற்றுறை இடையே பயணிகள் கடல் போக்குவரத்துச்சேவையில் ஈடுபடும் படகுகள் கரையொதுங்கும் ஊர்காவற்றுறை இறங்குதுறை இடிந்து வீழ்ந்துள்ளது.

இத்துறைமுகம் நீண்டகாலமாக சேதமடைந்த நிலையிலேயே காணப்பட்டது. நிதி பற்றாக்குறை என கூறி வீதி அபிவிருத்தி அதிகாரசபை இதனை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையில் இறங்குதுறை இடிந்து விழுந்துள்ளது. அதனால் படகு சேவையில் பயணிக்கும் பயணிகள் இடிந்து விழுந்துள்ள ஆபத்தான இறங்குதுறையிலேயே படகுகளில் ஏறி பயணத்தை மேற்கொள்கின்றனர். எனவே விரைவாக இதை புனரமைத்து போக்குவரத்தை உறுதிப்படுத்துமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மிளகாய் அரைக்கும் ஆலைக்குள் புகுந்து காட்டு யானை அட்டகாசம்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

மான்னுருவி பகுதியில் மிளகாய் அரைக்கும் ஆலையை யானை புகுந்து துவம்சம் செய்துள்ளது. முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மான்னுருவி பகுதியில் நாகரத்தினம் பாஸ்கரன் என்பவரின் அரைக்கும் ஆலைக்குள்ளே இவ்வாறு யானை புகுந்து துவம்சம் செய்துள்ளது.

இப்பகுதியில் வாழ்வாதாரத்துக்காக அரைக்கும் ஆலையொன்றை நடாத்தியுள்ளார்.

இந்நிலையில் அரைக்கும் இயந்திரம் மற்றும் மின்சார இணைப்புக்களை யானை சேதப்படுத்தியுள்ளது.

சுமார் 5 இலட்சம் பெறுமதியான சொத்துக்களுக்கே இவ்வாறு சேதம் விளைவித்துள்ளதாக பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.



கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமாரின் நினைவுப் பகிர்வும் புத்த(க)ன் நூல் வெளியீடும் நேற்று முன்தினம் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. கவிஞரும் எழுத்தாளருமான இளையதம்பி தயானந்தா தலைமை தாங்கிய இந்நிகழ்வில், கவிஞர் சோ.பத்மநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் முருகேசு சந்திரகுமார் ஆகியோரும், தோழர் சுகு சிறிதரன், யாழ். மாநகரசபை ஆணையாளர் த. ஜெயசீலன், ஊடகவியலாளர்களான பரமேஸ்வரன் மற்றும் கணேசலிங்கம் ஆகியோரும், இலங்கை வானொலி யாழ். சேவை கட்டுப்பாட்டாளர் முருகேசு ரவீந்திரன் மற்றும் எழுத்தாளர் சி. கருணாகரன், ஞானசக்தி சிறிதரன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். புத்த(க)ன் நூலை சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி ராஜநாயகம் வெளியிட்டார். நடராசா கமலாகரன் நன்றியுரையாற்றினார்.

# முத்தையன்கட்டு குளத்தின் கீழ் 3320.5 ஏக்கரில் சிறுபோக பயிர்செய்கை!

(புதுக்குடியிருப்பு விசேட, மாங்குளம் குறூப் நிருபர்கள் )

முத்தையன்கட்டு குளத்தின் கீழ் மேற்கொள்ளவுள்ள சிறுபோக செய்கை தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்தையன்கட்டு குளத்தின் கீழான சிறுபோக செய்கை தொடர்பான கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு ஒட்டுசுட்டான் நீர்பாசன திணைக்களத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கையில் முத்தையன்கட்டு குளத்தின் கீழ் 3320.5 ஏக்கர் அளவிலும், உப உணவு பயிர்ச்செய்கைக்கு 739 ஏக்கர் அளவிலும் பயிர்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வருகின்ற 03.04.2023 அன்று முத்தையன்கட்டு குளத்து நீர் திறந்துவிடப்படவுள்ளது. பயிர்ச்செய்கைக்கான காலம் மூன்றரை மாதங்களாகும். தற்போது குளத்தின் நீர்மட்டம் 20அடியாக காணப்படுகின்றது. இக் கூட்டத்தில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் (காணி), ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், முத்தையன்கட்டு குள பொறியியலாளர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலகர்கள், நெக்டா நிறுவனத்தின் அதிகாரிகள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிகள் விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் பெருந்தொகை பணம் திருட்டு!

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்துக்கு சொந்தமான சுமார் 30 இலட்ச ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலய குருக்கள் வீட்டிலிருந்தே இப்பணம் திருடப்பட்டுள்ளது. ஆலய பணத்தை குருக்கள் வீட்டில் பாதுகாப்பாக வைத்திருந்துள்ளார். எனினும் குருக்கள் மருத்துவ சிகிச்சைக்காக அண்மையில் கொழும்பு சென்றிருந்த போதே இத்திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. குருக்களில் வீட்டின் கூரையை பிரித்து உள் இறங்கிய கும்பலொன்று வீட்டிலிருந்த பணத்தை திருடிச் சென்றுள்ளது.

குருக்கள் கொழும்பிலிருந்து நேற்றைய தினம் வீடு திரும்பிய போதே வீட்டின் கூரை பிரித்து வீட்டிலிருந்த ஆலய பணம் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

# மாத்தளை, கவுடுபெலல்ல கலைமகள் மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிப் பாதையின் வரலாறு




## பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி



மாத்தளை மண்ணில் நிலைகொண்டிலங்கும் எமது கலைமகள் மகா வித்தியாலயத்தின் கடந்தகால நினைவலைகள் தேசிய நாளிதழான தினகரனில் வெளிவருதையிட்டு அளவிலா ஆனந்தமடைகின்றேன். அரசப் பரீட்சைகளிலும், தேசிய மட்ட போட்டி நிகழ்வுகளிலும் இப்பாடசாலை எட்டிவரும் சாதனைகளை வாயார வாழ்த்திப் போற்றுகின்றேன். இவ்விண்ணகமும், மண்ணகமும் உள்ள வரை எம்கலைமகள் மகா வித்தியாலயம் நிலைத்தோங்கி வான்புகழ் பரப்ப வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

திரு.மு.ராஜேந்திரன்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## பழைய மாணவர் சங்கச் செயலாளரின் செய்தி



எமது கலைமகள் மகா வித்தியாலயத்தின் வரலாற்றுப் பதிவுகள் தேசிய நாளிதழான தினகரனில் மலர்ந்து மனம் பரப்பி வருவதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். எமது கல்விக் கூடம் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுடன் புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் தேசிய மட்டத்தில் சாதனை படைத்து வருவது கண்டு பேருவகை அடைகின்றேன். தொடர்ந்தும் இக்கலையகம் வெற்றிப்பாதையில் தடங்கள் பல பதிக்க வாழ்த்துகின்றேன்.

திருமதி. சு.புனிதமலர்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

## உதவி அதிபரின் ஆசிச் செய்தி



மாத்தளை கலைமகள் மகா வித்தியாலயம்.வளர்ந்து வரும் ஒரு முதற்தர பாடசாலையாகும்.அந்த வகையில் அண்மைக்காலமாக வேகமான வளர்ச்சிப் பாதையில் வளர்ந்து பயணிக்கின்றது.இதற்கு இப்பாடசாலையின் தற்போதைய அதிபர் S.பாலசுப்ரமணியத்தின் அர்ப்பணிப்பான சேவையும் ஆசிரியர்களினது அயராத பங்களிப்பு என்றால் மிகையாகாது. மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சியின் இரு கண்களாக திகழ்வது பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்,பழைய மாணவர் சங்கமுமாகும்.இச்சங்கங்கள் இப்பாடசாலையினது ஒவ்வொரு வளர்ச்சிக்கும் உறுதுணையாக செயற்படுகின்றமை கண்கூடு.வருடம் தோறும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி,பல்கலைக்கழக அனுமதி பெறுவதும் இப்பாடசாலையின் வளர்ச்சியை கோடிட்டு காட்டுகிறது.இப்பாடசாலை மென்மேலும் பல்துறையிலும் வளர்ச்சி கண்டு தன்னிகரற்று திகழ உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

திருமதி. P.அருளானந்தம்
உதவி அதிபர்

## அதிபரின் சில வரிகள்...



வளர்ச்சி, வெற்றி, முன்னேற்றம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் காரணமாகவே அனைவரது கவனமும் கல்வியில் அதிக செல்வாக்கை பெற ஏதுவாக அமைகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வி மாணவர்களை சென்றடைந்து அவர்களை 'சீறும் சிறப்போடும்' சமூகத்தில் வாழ உதவ வேண்டும் என்பதே எனது பெரும் விருப்பாகும்.

இப்பாடசாலையானது கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு, கலை, கலாசாரம் உட்பட்ட இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தொடர்ந்து அபிவிருத்தியை காட்டி வருகின்றது. இவ்வளர்ச்சியிலே பங்களிப்புச் செய்துவருகின்ற பெற்றார்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள், மதிப்பிற்க்குரிய ஆசிரிய பெருந்தகைகள், கல்விப் பணிப்பாளர்கள் இவர்களோடு நானும் ஒரு பங்காளி என்பதையிட்டு அகமகிழ்வடைகின்றேன்.

தற்போதைய புதிய சவால்களுக்கு முகங்கொடுத்து கலைமகள் மகா வித்தியாலயம் எதிர்காலத்தில் சகல துறைகளிலும் சாதனை படைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

தேசகீர்த்தி
S.பாலசுப்பிரமணியம்
SLPS 1
( B.Sc (mgt), PGDE , PGDEM )

## பாடசாலை வரலாறு

மாத்தளை நகரிலிருந்து தம்புள்ள நகருக்குச் செல்லும் பிரதான பாதையில், மாத்தளையிலிருந்து சுமார் 12km தூரத்தில் கவுடுபெலல்ல என்னும் இயற்கை எழில்மிகு ஊரில் இப்பாடசாலை அமைந்துள்ளது.

ஆரம்பத்தில் சுமார் 30 மாணவர்களைக் கொண்டு 'கவுடுபெலல்ல தமிழ் வித்தியாலயம்' என்ற பெயரிலேயே பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலையில் கிடைக்கப்பெறும் தகவல்களின் படி இப்பாடசாலையின் முதல் அதிபராக திரு.G.S.ஜோசப் என்பவர் கடமையாற்றியதாக அறிய முடிகிறது. இருப்பினும் 1940 களில் இருந்து இயங்குவதாக நம்பப்படுகிறது.

1963 டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி இப்பாடாலையில் பெற்றோர் தின விழாவொன்றும், விளையாட்டுப் போட்டியும் B.M.பெலகெதர வித்தியாதிகாரி தலைமையில் நடைபெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. 1967 மே மாதம் 30 ஆம் திகதி மாத்தளை வட்டாரத்தில் நடைபெற்ற நாடகப்போட்டியில் இப்பாடசாலை பங்குபற்றியதோடு வழிகாட்டி, பூங்கொடி என்ற இரு நாடகங்களும் இறுதி போட்டிக்குத் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் ஒரு ஆசிரியையும் ஒரு கட்டடத்தையும் கொண்டே இப்பாடசாலை இயங்கியது. காலப்போக்கில் கட்டடங்களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்தது. அதிபர் திரு. G.S.ஜோசப்பிடமிருந்து 08041961 இல் பரமானந்தன் என்பவர் தலைமைப் பொறுப்பை ஏற்றதாகவும், அவருக்குப் பின் 01 091961 K.T.V.பெரேரா என்பவர் பாடசாலையின் தலைமைப் பொறுப்பை ஏற்றதாகவும் அறிய முடிகிறது.

14.01.1968ல் K..முருகையா என்பவர் நிர்வாகப்பொறுப்பை ஏற்றதாகவும் அவரிடமிருந்து 01021968 ல் க.தம்பிராஜா என்பவர் நிர்வாகப் பொறுப்பைப் பெற்றுக்கொண்டதாகவும் அறிய முடிகிறது. அவரைத் தொடர்ந்து 10111975 ல் புதிய அதிபர் விஸ்வலிங்கம் நிர்வாகப் பொறுப்பைப் பெற்றுக் கொண்டதாகவும் அறிய முடிகிறது.

18061976 ஆம் ஆண்டளவில் 187 மாணவர்களும் 11 ஆசிரியர்களும் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. 15.07. 1976 ல் M.வீரபுத்திரன் என்பவர் நிர்வாகப் பொறுப்பை ஏற்றதாகவும், அவரிடமிருந்து 01.09.1976ல் R.S.பத்மநாதன் என்பவர் பொறுப்பேற்றதாகவும் பாடசாலை சம்பவத்திரட்டு புத்தகத்தினூடாக அறியமுடிகிறது. M.தங்கவேல் செட்டியார் அவர்களால் கட்டிக்கொடுக்கப்பட்ட முதலாம் தர வகுப்பறை 18.11.1976ல் S.B.விஜயரத்தின அவர்களால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

05.09.1977 M. விரபுத்திரன் மீண்டும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றதாகவும், 16.09.1977 ல் M பரமானந்தம் பொறுப்பேற்றதாகவும் கூறப்படுகிறது. 1979 ஆம் ஆண்டில் 209 மாணவர்கள் கல்வி கற்றதாகவும் 11 ஆசிரியர்கள் கடமையாற்றியதாகவும் கூறப்படுகிறது.

15.07.1983 ல் M.பரமானந்தம் என்பவரும் 25.07.1983 K.M.புகார்தீன் என்பவரும் அதிபராக பணியாற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது. இக்காலப்பகுதியில் மாணவர் எண்ணிக்கை 212 ஆகவும், ஆசிரியர் எண்ணிக்கை 08 ஆகவும் இருந்திருக்கின்றது. 01.03.1988 C.கனகராஜா என்பவர் பாடசாலை நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 18.01.1994 ல் ஆசிரியர் எண்ணிக்கை 18 ஆக இருந்தது.

இவரது காலத்தில் இப்பாடசாலைக்கு பல வளங்கள் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக 21.10.1992 கவுடுபெலல்ல தமிழ் வித்தியாலயம், மா/கலைமகள் தமிழ் வித்தியாலயமாக பெயர் மாற்றம் பெற்றது. 18.03.1993 ல் இலவச சீருடை வழங்கும் வைபவம் இடம் பெற்றதோடு. இவ்வித்தியாலயத்தின் புதிய பெயர்ப்பலகை ரஞ்சித் அலுவிகார அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. மத்திய மாகாண கல்வி அமைச்சின் ஊடாக நிலையமொன்றும், 17.05.2001 கட்டிமுடிக்கப்பட்டது. 17.05.2001 நூல் நிலைய திறப்புவிழாவும், உயர்தர வகுப்பு ஆரம்ப நிகழ்வும் நடைபெற்றது.


09.06.2003 ல் புதிய அதிபராக C.இரத்தின சபாபதி நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டமை, நீர்த்தாங்கி அமைக்கப்பட்டமை போன்ற செயற்பாடுகள் இக்காலங்களில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. 14.08. 2009 ம் ஆண்டு அதிபர் C.இரத்தின சபாபதி அவர்கள் ஓய்வு பெற, உதவி அதிபராகவிருந்த R..சிவசாந்தகுமார் புதிய அதிபர் வரும் வரை இடைக்காலப்பொறுப்பை ஏற்றார். 20091001 ம் திகதி தொடக்கம் மா/கணேஸ்வரா வித்தியாலத்தில் சுமார் 10 வருட காலம் ஆசிரியராகவும், சுமார் 10 வருடகாலம் அதிபராகவும் கடமையாற்றி, அப் பாடசாலையை வளர்ச்சி பெறச் செய்த S.பாலசுப்ரமணியம் இப்பாடசாலையின் அதிபர் பொறுப்பினை ஏற்றார். அதன் பின் 2010 ம் ஆண்டில் புதிய கணினி பிரிவு, பேண்ட் வாத்திய கருவிகள், புதிய தண்ணீர் இணைப்பு, மின்சார வசதி போன்ற வளங்கள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கல்வியமைச்சினால் 2016 – 2020 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் 90' ★ 25' இரண்டு மாடி ஆரம்பபிரிவு வளநிலையமும் 74' ★ 48' மாடியைக் கொண்ட தொழினுட்பகூடமும் 2022 ம் ஆண்டு ஆரம்பத்தில் மாணவர்களின் பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட்ட போதும் 90' ★ 25' இரண்டு மாடிக் கட்டடம் இன்னும் பூரணப்படுத்தப்படாமல் உள்ளது. ஒப்படைக்கப்பட்ட கட்டட தொகுதிக்கு 2022 ஆம் ஆண்டு வழிகாட்டல் ஆலோசனை அலகும்,புதிய தொழிநுட்ப கட்டடத்திற்கான தளபாடங்கள் T.ஹரிராஜ், B.தினேஸ்குமார் ஆகிய பழைய மாணவர்களாலும் செல்வி.சிவாந்தி சேனாநாயக்க என்ற நலன் விரும்பியினாலும் ஏறக்குறைய ரூ.400,000 செலவில் பெற்றுக்கொடுக்கப்பட்டது. அத்தோடு இவ்வேலைத்திட்டத்தின் கீழ் 2 மில்லியன் ரூபா செலவில் Washroom தொகுதி ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது. மேலும் 2 மில்லியன் ரூபா செலவில் சுற்றாடல் வடிவமைப்பின் கீழ் Wiremesh வேலி, பிரதான நுழைவாயில் படலை மற்றும் உள்வீதி கொங்கிறீட் மூலம் செப்பனிடல் வேலைகள் செய்யப்பட்டன. மேலும் பாடசாலை வளாகத்தில் மாணவர்களுக்காக சிறுவர் பூங்கா ஒன்றும் அமைக்கப்பட்டது. எமது பாடசாலையில் வளர்ச்சி பாதையின் பங்காளிகளான பழைய மாணவர்களால் 22.12.2019 இல் பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்குறுகிய காலப்பகுதியில் இவர்களால் பாடசாலை வளாகத்தினுள் Waiting Hall ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டதோடு மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பரிசளிப்பு விழா மற்றும் விளையாட்டு உட்பட ஏனைய இணைப் பாட விதானங்களை மேம்படுத்த பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

அண்மைய காலங்களில் எமது மாணவர்களில் S.திருசெல்வி, A.அர்ஜுன், K.சங்கீத்தா, மு.மலர்வழி ஆகியோர் பல்கலைகழகம் சென்றுள்ளனர்.மேலும் வருடாவருடம் கல்வியற்கல்லூரி மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்கு பல மாணவர்கள் செல்கிறார்கள். க.பொ.த (சாதாரண) தர பரீட்சை, தரம் 5 புலமை பரீட்சையின் சித்தி வீதமும் அதிகரித்து வருகின்றது.

அகில இலங்கை தமிழ்மொழி தினவிழா போட்டியில், வாசிப்பு போட்டியில் 3ம் இடம் பெற்றதோடு, 2022(2023) ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டியில் அகில இலங்கை ரீதியாக குழு இசையில் 2ம் இடத்தையும், நாட்டார்பாடல் போட்டியில் 3ம் இடத்தையும் பெற்றனர். விளையாட்டுதுறையிலும் மாகாண, வலய மட்ட போட்டிகளில் தமது திறமையை பரைசாற்றி வருகின்றனர்.

எமது பாடசாலையில் மேலும் CADET படையணி, St.John Ambulance படையணி, சாரணியம் போன்ற அமைப்புகள் வினைத்திறனாக செயற்பட்டு வருகின்றது. மேலும் 2018, 2019 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாக 'Best Dengue Free Model School Competition" யில் 2ம் இடம் பெற்றுக் கொண்டதோடு BEST ANNUAL REPORT COMPETITION of National & Provincial Schools 2019 போட்டியில் மாத்தளை மாவட்டத்தில் 1000 மாணவர்களுக்கு குறைந்த பாடசாலைகளில் 2ம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. தற்போது தரம் 01 தொடக்கம் 13 வரையான வகுப்புகளைக் கொண்ட, 1C தர பாடசாலையாக விளங்குவதோடு நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடம், பல்லூடக அறை, கணினியறை , திறன் வகுப்பறைகள், பாட ரீதியான வள நிலையங்களை கொண்டுள்ளது.



வாழ்க கலைமகள் ! வாழ்க வையகம் !
தகவல் உதவி அதிபர் மற்றும் ஆசிரியர்கள்
மாத்தளை சுழற்சி நிருபர்

தொகுப்பு – எம். சதுர்தீன்



தரம் 1, 2, 3



தரம் 4,5



தரம் 6,7















தரம் 8,9



தரம் 10,11



தரம் 12,13









# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பில் ரணவிரு சேவாவின் ஒருங்கிணைந்த இடம்பெயர் சேவை

மட்டக்களப்பு விசேட, பெரியபோர தீவு தினகரன் நிருபர்கள்



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாதுகாப்புத் தரப்புக் குடும்பங்களின் நலன் பேணும் அமைப்பான ரணவிரு சேவா குடும்பங்களின் நன்மை கருதி 'ரணவிரு பிரஜைகள் அபிவிருத்தித் திட்டம்' எனும் ஒருங்கிணைந்த இடம்பெயர் சேவை மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ரணவிரு சேவா குடும்பங்கள், கொழும்பில் செய்ய வேண்டிய விடயங்கள் மேற்படி ஒருங்கிணைந்த இடம்பெயர் சேவை மூலமாக நிறைவேற்றப்பட்டன.

இதன்போது ஓய்வூதியம், சம்பளப் பிரச்சினை, அவர்களது பிள்ளைகளின் புலமைப்பரிசில் விடயம், கல்விக்கான வசதிகள், கடன் உதவிகள், நலன்புரி அலுவல்கள் உட்பட ஏனைய நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்களானவை, இந்தச் சேவையின் மூலம் செய்து கொடுக்கப்பட்டதாக, ரணவிரு சேவாவின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவரும் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தருமான எஸ்.ஏ.சி.அப்துல் வஹாப் தெரிவித்தார். இந்தச் சேவையின் போது, சகல திணைக்களங்களினதும் அலுவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருந்த நிலையில், ரணவிரு சேவா குடும்பங்கள், தமது தேவைகளை அதிகாரிகளிடம் முன்வைத்தனர்.

## கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்களுக்கான கூட்டம்

தம்பலகாமம் குறூப் நிருபர்



உள்ளூராட்சிமன்றங்களின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடைந்தமையினால் கலைக்கப்பட்ட கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கான விசேட கூட்டமொன்று,

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தலைமையில் திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 3 மாவட்டங்களிலுமுள்ள 45 உள்ளூராட்சிமன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடந்த 19ஆம் திகதி நள்ளிரவு உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டதால், அவற்றின் அனைத்து நிர்வாக விவகாரங்களும் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களின் பொறுப்பில் உள்ளன. ஆகையினால், உள்ளூராட்சிமன்றங்கள் மக்களுக்குச் செய்யும் பணிகளைத் தொடர்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, ஆளுநர் பணித்துள்ளார்.

அத்துடன், அந்த நிறுவனங்களின் நடவடிக்கையை பாதிக்கும் சட்ட விதிமுறைகள் மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

பொதுமக்களுக்குச் சேவை செய்யும் போது பெற்றுக்கொள்ளும் சம்பளத்துக்கு மேலதிகமாகச் சேவைகளை செய்ய வேண்டுமெனவும், ஆளுநர் தெரிவித்தார்.

## மூத்த கவிஞர் ஆசுகவி அன்புடீன் காலமானார்

மருதமுனை தினகரன் நிருபர்



மூத்த கவிஞரும் பன்னூலாசிரியரும் இலக்கியச் செயற்பாட்டாளருமான கலாபூஷணம் ஆசுகவி அன்புடீன் தனது 72ஆவது வயதில் நேற்று புதன்கிழமை (22) காலமானார்.

பாலமுனையை பிறப்பிடமாகவும் அட்டாளைச்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், 25.08.1951 இல் பிறந்தவராவர். கலை, இலக்கியச் செயற்பாட்டில் இலக்கிய ஆளுமையான ஆசுகவி அன்புடீன் பொன்விழாக் கண்டதுடன், கலை, இலக்கியத் துறைகளுடன் மிகவும் ஈடுபாடு கொண்ட எழுத்தாளர்களுடனும் நெருக்கமான உறவைக் கொண்டவராவர். இவரது மறைவு இலக்கிய உலகுக்கு பேரிழப்பாகும். எல்லோருடனும் அன்பான நட்பைப் பேணி வந்த இவரது மறைவையொட்டி, துயரும் குடும்பத்தினருக்கு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது.

## பெரியநீலாவணையில் வடிகான் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை



திராய்க்கேணி தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணையில் இஸ்லாமிக் ரிலீப் தொடர்மாடி குடியிருப்புகளைச் சேர்ந்த மக்கள் எதிர்நோக்கி வரும் வடிகான் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் நோக்கில் மேற்படி தொடர்மாடி இடத்துக்கு கல்முனை அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம்.முஷாரப், கடந்த திங்கட்கிழமை (20) நேரடி விஜயம் மேற்கொண்டு நிலைமையை அவதானித்துள்ளார்.

அத்துடன், மேற்படி தொடர்மாடிக் குடியிருப்பு மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அம்மக்களிடம் அவர் கேட்டறிந்து கொண்டார்.

முஷாரப் எம்.பி.யின் இந்த விஜயத்தின் போது, கல்முனைப் பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலியும் கலந்துகொண்டார்.

## கல்முனையில் பாரிய மரம் விழுந்ததில் தடைப்பட்ட போக்குவரத்து சீராகியது



மருதமுனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியை அண்டி அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு முன்பாக இருந்த பாரிய மரமொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) வேரோடு சரிந்து விழுந்ததில் தொலைத்தொடர்பு வயர்கள் துண்டிக்கப்பட்டதுடன், போக்குவரத்தும் சிறிதுநேரம் தடைப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, வீதியில் சரிந்து விழுந்த காயா எனும் இந்த மரத்தை வெட்டித் துண்டுகளாக்கி வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் அகற்றினர்.

அத்துடன், கல்முனை மாநகர தீயணைப்புப் பிரிவினரும் இந்த மரத்தை அகற்றுவதற்கு உதவியதுடன், போக்குவரத்தையும் சீர்செய்தனர்.

இதற்கிடையில், இந்த மரம் வீதியில் விழுந்தமையினால், அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியானது இரு வழிப் பாதையாக மாற்றப்பட்டு போக்குவரத்தைக் கல்முனைப் போக்குவரத்து பொலிஸார் சீர்செய்தனர்.

## 159ஆவது பொலிஸ் தினம்; மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு



மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 159ஆவது பொலிஸ் தினம் நேற்று செவ்வாய்க்கிழமை (21) அனுஷ்டிக்கப்பட்டதுடன், இதன்போது, உயிரிழந்த பொலிஸார் நினைவுகூரப்பட்டனர். மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை முன்றலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொலிஸ் நினைவுத்தூபியில் உறவினர்கள் மலரஞ்சலி செலுத்தி, உயிரிழந்த பொலிஸாரை நினைவுகூர்ந்தனர்.

## நான்கு இளைஞர்கள் உயிரிழப்பு; ஹரீஸ் எம்.பி. ஆழ்ந்த அனுதாபம்

கல்முனை குறூப் நிருபர்



வெல்லவாய எல்லேவல நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்குச் சென்ற கல்முனையின் சாய்ந்தமருது மற்றும் சம்மாந்துறைப் பிரதேசங்களைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் உயிரிழந்த சம்பவம் தன்னை மிகவும் கவலையடையச் செய்வதாக, திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் நேற்று புதன்கிழமை (22) வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"மிகுந்த துடிப்புள்ள இந்த நான்கு இளைஞர்களின் அகால மரணச் செய்தி கல்முனைத் தொகுதியை மிகவும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவர்களில் ஒருவர், எனது அயல் வீட்டுக்காரரும் உறவினருமாக உள்ளார்.

இந்த நான்கு இளைஞர்களின் நற்காரியங்களை எல்லாம் வல்ல இறைவன் ஏற்று, உயர்ந்த ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவனத்தை வழங்க பிரார்த்திக்கின்றேன்" என்றார்.

அத்துடன், இந்த இளைஞர்களின் மறைவினால் துயரமடைந்துள்ள இவர்களின் குடும்பத்தினர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கு ஹரீஸ் எம்.பி. ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

## அறுகம்பைக்கு சுற்றுலா பயணிகள் வருகை ஆரம்பம்

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், அறுகம்பைக்குடாவுக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தற்போது முதல்

வருகை தருவதற்கு ஆரம்பித்துள்ளனர். இந்நிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தரவுள்ள நிலையில், ஹோட்டல்களில்

முற்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஹோட்டல்களின் உரிமையாளர்கள் நேற்று (22) தெரிவித்தனர்.

கடலலை நீர்சறுக்கல் விளையாட்டுக்கு சர்வதேச ரீதியில் பெயர் போன இடமாக பொத்துவில், அறுகம்பைக்குடா விளங்குவதுடன், ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை அறுகம்பைக்குடாவுக்கு அதிகளவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றமை வழமையாகும்.

## திருமலையில் காணாமல் போனோர் உறவினர்கள் சங்கம் ஊடக சந்திப்பு

ரொட்டவெவ குறூப் நிருபர்

'திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர் சங்கம்' அமைப்பைச் சேர்ந்தவர்கள் நேற்று புதன்கிழமை (22) திருகோணமலையில் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை நடத்தினர்.

தமக்கு நிதி வேண்டாமென்றும், நீதியே வேண்டுமென்றும் அவர்கள் அங்கு தெரிவித்தனர்.

திருகோணமலை கப்பல்துறை பகுதியில் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த மேற்படி அமைப்



பின் தலைவி செபஸ்டின் தேவி, ஐ.நா.வில் 52ஆவது கூட்டத்தொடர் இடம்பெற்று வருகின்ற போதிலும், இம்முறை அங்கு சென்று குரல் எழுப்ப முடியாத நிலையில், இங்கிருந்து தாங்கள் சர்வதேச சமூகத்திடம் இந்த வேண்டுகோளை முன்வைப்பதாகத் தெரிவித்தார்.

"13, 14 வருடங்களாக எமது பிள்ளைகளைத் தேடிக் கொண்டிருக்கிறோம். இவர்கள் தொடர்பாக எதுவித தீர்வும் ஏற்படவில்லை. இரண்டு தடவைகள் நாங்கள் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு சென்று, எமது பிரச்சினைகளை கூறினோம். ஆனாலும், இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. இம்முறையாவது எமக்கு தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம்" என்று சங்கத்தின் தலைவி தெரிவித்தார்.

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

பட்டிருப்பு கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவும் களுதாவளை சமூக பொருளாதார கல்வி அபிவிருத்திச் சங்கமும் இணைந்து மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அண்மையில் வழங்கி வைத்துள்ளது.

முறைசாராக் கல்விப் பிரிவின் ஆசிரிய ஆலோசகர் றீட்டா கலைச்செல்வன் ஒழுங்கமைப்பில் போரதீவுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரி.அருள்ராஜா தலைமையில் வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன.

போரதீவுக் கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 470 பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## நாவிதன்வெளி பிரதேசத்தில் கலாசார நல்லிணக்க நிகழ்வு



பெரியநீலாவணை விசேட நிருபர்

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கமைய, நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் இரண்டாம் மொழி சிங்களக் கற்கையை தொடரும் பயிலுனர்களின் ஏற்பாட்டில் கலாசார நல்லிணக்க நிகழ்வு நேற்று புதன்கிழமை (22) நடைபெற்றது.

பல்சமூக, சமய, கலாசாரப் பண்பாடுகளை வெளிக்கொண்டு வரும் வகையில் உணவுப் பழக்கவழக்கங்களை பரிமாறிக் கொள்ளும் வகையில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

தத்தமது தேவைகள் கருதி மொழிகளைக் கற்றுக்கொள்ளாமல், விருப்பத்துடன் மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் முழுக் கவனத்தையும் செலுத்தி மொழிகளைக் கற்றுக் கொண்டால், எதிர்காலம் சிறப்பாக அமையுமென, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தெரிவித்தார்.

## ரமழானை முன்னிட்டு உலர் உணவு வழங்கல்



கிண்ணியா தினகரன் நிருபர்

அஸீஸா பௌண்டேஷன் மற்றும் ஹெல்ப் பிரம் ஜேர்மனி நிறுவனங்களின் அனுசரணையுடன் அல் ஹஸனாத் நற்பணி மன்றத்தினால் புனித ரமழானை முன்னிட்டு 2,000 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) வழங்கி வைக்கப்பட்டன. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, இந்த உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

அல் ஹஸனாத் நற்பணி மன்ற வளாகத்தில் வைத்து நற்பணி மன்றத்தின் தலைவர் சாதிக் ஹஸனினால் இவை வழங்கப்பட்டன.

## சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை

மட்டு. அனர்த்த முகாமைத்துவ நிலையம்

வெல்லாவெளி தினகரன் நிருபர்



சுனாமி தொடர்பாக எந்தவித எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை என்பதுடன், வதந்திகளை நம்ப வேண்டாம் எனவும், மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் நேற்று (22) தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தம் ஏற்படப் போவதாக மட்டக்களப்பில் பரவும் தகவல் உண்மைக்குப் புறம்பானது என்பதுடன், அந்தத் தகவலில் எந்தவித உண்மையும் இல்லை எனவும், அவர் தெரிவித்தார்.

ஏதும் அனர்த்தங்கள் நிகழ்வதற்கு வாய்ப்பிருப்பின், மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்கூட்டி அறிவிக்கும் எனவும், அவர் தெரிவித்தார்.

## நகர்வலம்



# பாகிஸ்தான் தேசிய தின நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகள், பிரமுகர்கள் பங்கேற்பு









**(தெஹிவளை கல்கிசை விஷேட நிருபர்)**

பாகிஸ்தான் தேசிய தின நிகழ்வுகள் (22) கொழும்பில் இடம்பெற்றது.விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில்,முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜக்ஷ,மைத்திரிபாலசிறிசேன


சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தன,முப்படைகளின் தளபதிகள் மற்றும் ஏனைய நாடுகளின் ராஜதந்திரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் பரூக் பர்கி, இலங்கையின் தேசபிதா, டி.எஸ்.சேனாநாயக்கவின் காலந்தொட்டு இன்று 75 வருடங்களாக பாகிஸ்தானும் இலங்கையும் சிறந்த நட்பு நாடுகளாகத் திகழ்கின்றன.

இலங்கையில் பாதுகாப்பு உயர் கல்வி,சுகாதாரம் மற்றும் அனர்த்த உதவிகள் என்பவற்றுக்கும் பாகிஸ்தான் உதவுகிறது.

பௌத்தமத குருக்கள் அண்மையில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வதற்கும், அங்குள்ள பௌத்த சின்னங்களை தரிசிப்பதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வுறவுகள் நிலைப்பதற்கும், புரிந்துணர்வுகள் வளர்வதற்கும் பிரார்த்திப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# பாராளுமன்ற சிறப்புரிமையை மீறியோர் விசாரிக்கப்பட்டு எச்சரிக்கப்பட வேண்டும்



கொரோனாத் தொற்றில் உயிரிழந்தவர்களை கட்டாயம் எரிக்க வேண்டும் என்று வெளியிடப்பட்ட வர்த்தமானி, பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை மீறியிருந்ததை,அன்றே சுட்டிக்காட்டியதாக தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ,எல்,எம், அதாஉல்லா தெரிவித்தார். அமைச்சருக்கிருந்த அதிகாரத்தால், அவ்வாறான வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தா லும், பாராளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்பட்டு சகல எம்பிக்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர்,தெரிவித்தார்.

பாராளுமன்றத்தினதும், பாராளுமன்ற உறுப்பினர்களதும் சிறப்புரிமை மீறல்,பெற்றோலியச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் குறித்த விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். கடந்த (21) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இவ்விவாதத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஏ,எல்,எம்,அதா உல்லா தெரிவித்ததாவது.

நாட்டின் பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கப் பிரார்த்திக்கிறேன்.வாக்களித்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதியுதவிகள் கிடைக்கவுள்ளன. இந்தச் சபையில் காலத்தால் அழியாத விடயம் ஒன்றை ஞாபகமூட்டுகிறேன்.கொரோனாவால் உயிரிழந்தோரின் சடலங்களை எரிக்கவும், அடக்கவும் நாட்டின் சட்டத்தில் (chapter 553) இல், அனுமதிக்கப்பட்டிருந்தது.ஆனாலும்,அமைச்சர் ஒருவர், இதிலுள்ள 222 ஆம் பிரிவின் 02,03 ஆம் பிரிவுகளைத் திருத்தி கட்டாயம் எரிக்க வேண்டும் என்ற வர்த்தமானியை வெளியிட்டிருந்தார்.ஆனால், இது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இது,பாராளுமன்றத்தினதும்,எம்பிக்களதும் சிறப்புரிமைகளை மீறியுள்ளதாக அன்றே சுட்டிக்காட்டினேன்.இது குறித்து தனிநபர் பிரேரணை ஒன்றை எழுத்து மூலம் தருமாறு என்னிடம் கோரப்பட்டது.

சிலரோ,நீதிமன்றத்துக்கு இதைக் கொண்டு சென்றனர்.சட்டங்களை உருவாக்கும் இடம்தான் பாராளுமன்றம்.எனவே,இச்சபைக்குத் தெரியாமல் எவரும் சட்டங்களை உருவாக்க முடியாது.அவ்வாறு இயற்றினாலும் பாராளுமன்றத்துக்கும்,எம்பிக்களுக் கும் தெரியப்படுத்த வேண்டும்.உலகெங்கிலும் அடக்கவும்.எரிக்கவும் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, எமது நாட்டில் மட்டும்தான் சடலங்கள் எரிக்கப்பட்டன. கொடிய குரோதங்களின் வெளிப்பாடகவே இது நோக்கப்பட்டது. அரசியல் அதிகாரம்,சுதந்திரம் என்பவற்றை எல்லைக் கோடுகளுக்குள் மட்டுப்படுத்த முடியாது.மதத்தை பின்பற்றுதல்,விரும்பிய இடத்தில் வாழ்தல், பொருத்தமான தொழிலைச் செய்வதற்கு அனுமதித்தல் இவைகள் தான் உண்மையான சுதந்திரம்.இயற்கைக்கு கோடுபோட்டு,நிலங்களுக்கு எல்லை வகுப்பதால் எந்தத் தீர்வும் ஏற்படாது. எனவே,பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை மீறியோருக்கு எச்சரிக்கை விடுப்பது அல்லது தண்டிப்பதனூடாக இத்தவறு இடம் பெறுவதை தடுக்க முடியும்.ஆகக் குறைந்தது பாராளுமன்ற சிறப்புக் குழுவுக்காவது இவர்கள்,அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும். எதிர்காலத்திலும் இவ்வாறான சிறப்புரிமை மீறல்கள் இடம்பெறுவதற்கு ஏற்கனவே இடம்பெற்றிருந்த சிறப்புரிமை மீறல்கள் முன்னுதாரணமாக இருக்கக் கூடாது என்றும் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ,எல்,எம்,அதா உல்லா தெரிவித்தார். மிகப்பிரதானமாக பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்பட்டதாக முஸ்லிம்ளின் சடலங்களை எரிப்பதற்கும், அடக்கம் செய்வதற்கும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறியவர்களுக்கு தகுந்த நடவடிக்கை அல்லது எச்சரிக்கையாவது விடுக்கப்பட வேண்டுமென்றும்,இவ்வாறான மீறல்கள் இனியும் இடம்பெறாதிருக்க இவ்வகையான நடவடிக்கைகள் அவசியப்படும் என்றும் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ,எல்,எம், அதாஉல்லா தெரிவித்தார்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம் நிகழ்வு (.26) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க நிர்வாகக்குழு உறுப்பினர் திருமதி மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில்,. கொழும்புத் தமிழ்ச்சங்க தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் வாழ்த்துரை நிகழ்த்துவார்.

பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், சிறப்பு விருந்தினராக திறைசேரி பணிப்பாளர் நாயகம் திருமதி மலர்மதி கங்காதரன் ஆகியோர் ;கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.. "இலங்கைப் பொருளாதாரத்தில் பெண்களின் வகிபாகம் சமகால போக்குகள் மற்றும் எதிர்கால நோக்கு" எனும் தலைப்பில் மத்திய வங்கி பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த பொருளியலாளர் திருமதி பூங்கோதை வேணுகானன் சிறப்புரையை நிகழ்த்தவுள்ளார்.

மூத்த ஆளுமை பெண்மணிகள் பேராசிரியர் சித்ரலேகா மௌனகுரு, கலாசூரி திருமதி கோகிலத்வனி விஜயராகவன், இளம் பெண் ஆளுமைகள் இளம் முஸ்லிம் பெண்கள் அமைப்பின் தலைவி திருமதி பவசாதாஹா, எஸ்.கே.எம்.குழுமம் தொழிலதிபர் திருமதி சண்முகப்பிரியா கார்த்திக், ஊடகவியலாளர் திருமதி மாலினி அஜந்தன் ஆகியோர்,இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# மிஹிந்தலைப் பிரதேசத்தில் தொழில்முனைவோர் மன்றம்

**(திறப்பனை தினகரன் நிருபர்)**



மிஹிந்தலை பிரதேச செயலக பிரிவிலுள்ள சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில் முயற்சியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் அரச அதிகாரிகள், வங்கிகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து, தொழில் முனைவோர் மன்றம் என்ற பெயரில் சங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மிஹிந்தலை பிரதேச செயலாளர் திரு அனுருத்த நாயக்க பண்டார தலைமையில் மிஹிந்தலை பிரதேச செயலகத்தில் வைத்து இதற்கான ஒன்று கூடல் அண்மையில் இடம் பெற்றது.

இதன் போது கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த மிஹிந்தலை பிரதேச செயலாளர் திரு.அனுருத்த நாயக்க பண்டார, அனைத்து பிரதேசங்களிலும் உள்ள தொழில் முயற்சியாளர்களை ஒரே இடத்தில் ஒன்றிணைத்து, அவர்களின் வருமான நிலையை மேம்படுத்தி, வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதே இந்த வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். எத்தகைய இடையூறுகள் வந்தாலும் இவ்வாறான திட்டங்கள் இடை நிறுத்தப்படாமல் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றார். தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்டறிந்து, இவர்களுக்கு தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆலோசனைகளை வழங்குதல், சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அரச நிறுவனங்களுக்கும் இவர்களுக்கும் இடையே ஒருங்கிணைப்பையும் ஆதரவையும் உருவாக்க தேவையான உதவிகளை வழங்குதல் என்பன இவ்வமைப்பின் பிரதான வேலை திட்டங்களாகும்.





கனடா 'விழித்தெழு பெண்ணே' அமைப்பினர் ஒழுங்கு செய்த சர்வதேச தமிழ் பெண் ஆளுமைகளுக்கான விருது வழங்கும் விழா, செவ்வாய்க்கிழமை (21) மாலை கிங்ஸ் பெரி ஹோட்டலில் நடைபெற்றது. சர்வதேச பெண் ஆளுமைக்கான விருதை கனடா பிரதி தூதுவரிடம் நூர் சஹிரியா பஹார்தீன் பெற்றுக்கொள்வதையும் விருதுடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.



கொழும்பு மாநகர சபையின் பொறியியல் சேவைகள் பிரதி ஆணையாளராக உள்ளூராட்சி பொறியிலாளர்கள் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் பொறியியலாளர் ஏ.ஜீ. இர்ஷாத் பதவியேற்றுள்ளார். மாநகர ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# அல்ஹுமைஸராவில் குறைந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்களை ஊக்குவிக்கும் திட்டம்







அல்ஹுமைஸராவில் குறைந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்ளை வழிகாட்டும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.2022 இல், ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தற்போது வெற்றியளித்து வருவதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கங்கள் பாராட்டு தெரிவித்துள்ளன.பரீட்சைகளில் குறைந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களை கல்வியின்பால் ஊக்குவிக்கும் நோக்கில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.நான்கு மாதங்களில் இத்திட்டம் வெற்றியளித்துள்ளமை, சிறந்த முறையில் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுவதை வெளிப்படுத்துவதாகவும் ஊர்ப்பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர். இத்திட்டம், பாடசாலை ஆசிரியர் ஜனாப் பௌஸிகின் நேரடி வழிகாட்டலின் கீழ், 8ஆம், 09ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களுக்கு முன்னெடுக்கப்படுகிறது. குறைந்த புள்ளிகளைப் பெறும் மாணவர்களை ஊக்குவிக்கும் இத்திட்டத்தில் பங்கேற்று பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் ஐம்பதுக்கு மேல் மதிப்பெண்களைப் பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் வழங்கி வரும் பங்களிப்புக்கு மாணவர்கள் சார்பில் பொறுப்பாசிரியர் நன்றி தெரிவித்துள்ளார். மேலும் இவ்வகுப்பு எவ்வித கட்டணமுமின்றி நடைபெறுவதால் அதிகமான மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்கின்றனர்.




## நுவரெலியாவில் முறையற்ற விதத்தில் சைப்ரஸ் மரங்கள் அழிக்கப்படுவதாக புகார்

தலவாக்கலை குறூப் நிருபர்





நுவரெலியாவில் பெறுமதியான சைப்ரஸ் மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாகவும் இதற்கு யார் அனுமதி வழங்கியது என நுவரெலியா மாநகரசபையின் முன்னாள் முதல்வரும் நுவரெலியா சுற்றாடல் பாதுகாப்பு குழு தலைவருமான மஹிந்த தொடபேகமகே கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நுவரெலியாவில் கடந்த 150 வருடங்களுக்கு முன் நாட்டப்பட்ட மரங்கள் கடந்த பல வாரங்களாக அதிகளவில் வெட்டப்படுகின்றன. இதற்கு யார் அனுமதி வழங்கியது? என்பது தெரியாமல் உள்ளது. நுவரெலியாவிலுள்ள பாரிய சைப்ரஸ் மரங்களின் கிளைகள் வெட்டப்படுவதாக கூறி மரங்கள் அடியோடு வெட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு மரங்கள் வெட்டப்படுவதால் நுவரெலியாவின் இயற்கை அழகிற்கு பாதிப்பு ஏற்பட்டு வருகின்றன. அத்தோடு மரங்கள் வெட்டப்படுவதால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவதோடு கால நிலையிலும் மாற்றங்கள் ஏற்படும். நுவரெலியா நகரிலுள்ள "சைப்ரஸ்" மரங்களை விறகுக்காக வெட்ட அனுமதித்த பலசாலி யார்? கிளைகளை வெட்டுகிறோம் என்ற போர்வையில் பல வாரங்களாக மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் தர்மபால சுற்று வட்டாரத்திற்கு அருகிலுள்ள மரங்கள் வெட்டி அகற்றப்பட்டன. அந்த இடம் ஒரு தனியார் ஹோட்டல் உரிமையாளரின் வாகன தரிப்பிடமாக தற்பொழுது காட்சியளிக்கின்றது. நுவரெலியா நகரத்திற்கு செல்லும் பிரதான வீதியின் இருமருங்கிலும் விலை உயர்ந்த சைப்ரஸ் மரங்கள் காரணமின்றி வெட்டப்படுகின்றன. நுவரெலியா மாநகரசபையில் நகரை அழகுப்படுத்துவதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவில் நுவரெலியா நகரிலுள்ள சகல அரச திணைக்களங்களிலுள்ள உயர் அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர். அந்த குழுவிலும் அனுமதி பெறாமல் இவ்வாறு மரங்கள் வெட்டப்படுவது கவலையளிக்கின்றது. இது நுவரெலியா நகரத்திற்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது.

எனவே நகரிலுள்ள மரங்கள் வெட்டப்படுவதை நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கவரவில தமிழ் பாடசாலைக்கு சுத்தமான குடிநீர்த் திட்டம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்



மஸ்கெலியா பிரதேசசபைக்குட்பட்ட ஹற்றன் கல்வி திணைக்களத்தின் கீழ் இயங்கிக் வரும் கோட்டம் மூன்று சாமிமலை கவரவில தமிழ் தேசிய பாடசாலைக்கு சுத்தமான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பணிப்புரையின் பேரில் மஸ்கெலியா பிரதேச சபை முன்னாள் தலைவி கோவிந்தன் செம்பவள்ளியினால் நேற்று காலை வைபவரீதியாக இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஹற்றன் தேசிய நீர் வடிகால் திணைக்களத்தின் அதிகாரி வைத்தியர் துஷார பெர்ணான்டோ, நீர் திட்டமிடல் பொறியியல் அதிகாரி ஆர்.எம்.எஸ்.கே.ரனதுங்க, வித்தியாலய அதிபர் வி.ஜெயபால், உப அதிபர். என். நிரஞ்சன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் சாமிமலை பகுதிக்கு பொறுப்பான முன்னாள் பிரதேசசபை உறுப்பினர், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் முன்னாள் பிரதேசசபை தலைவர் கோவிந்தன் செம்பவள்ளி கருத்து தெரிவிக்கையில், இப்பாடசாலையில் சுமார் 600ற்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் தரம் ஆறு முதல் 13 வரை கல்வி பயின்று வருகின்றனர். கடந்த பல ஆண்டுகளாக சுத்தமான குடிநீர் இன்றி கடும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.



## மஸ்கெலியாவில் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு பற்சிகிச்சை முகாம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்



மஸ்கெலியாவில் ஆரம்ப பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் பற்சிகிச்சை முகாமொன்று இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 8 மணி முதல் மஸ்கெலியா சுகாதார அதிகாரி துரைசாமி பிள்ளை சந்தரராஜனின் பணிப்புரைக்கிணங்க மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள முன்பள்ளி சிறார்கள் 170 பேருக்கு பல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பற் பசை மற்றும் தூரிகை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மஸ்கெலியா சுகாதார அதிகார பிரிவிலுள்ள பல் மருத்துவர் ஹிரூஸி ஜானிக்கா கலந்து கொண்டு சிகிச்சையளித்தார். சிறார்கள் எதிர்காலத்தில் தங்களது பற்களை சுத்தம் செய்தல், பற்களை பாதுகாத்தல் பற்றி அவர் இதன் போது விளக்கமளித்தார்.

7 முன்பள்ளி பாடசாலைகளைச் சேர்ந்த 170 மாணவர்கள் மஸ்கெலியா மக்கள் வங்கி முன்பாக இருந்து பிரதான வீதி நான்காம் வீதி மற்றும் இரண்டாம் வீதியூடாக மஸ்கெலியா சென் ஜோசப் தமிழ் வித்தியாலய கீழ் பிரிவு பாடசாலைக்கு பதாகைகளை ஏந்திய வண்ணம் அழைத்து செல்லப்பட்டு அங்கு அவர்களுக்கு பல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சிறார்கள் ஊர் வலமாக செல்லும் வேளையில் எதிர்காலத்தில் புகைத்தல்,வெற்றிலை, பொலித்தீன், பிளாஸ்டிக் பொருட்கள் ஒழிப்போம் என்ற பதாகைகள் ஏந்தியவாறு சென்றமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய சிறார்களுக்கு சத்தான உணவுகளை அதிகம் வழங்க வேண்டும் என வைத்திய அதிகாரி அறிவுறுத்தல் வழங்கினார்.

## அடிக்கல் நடும் விழா

உலக நீர் தினத்தை முன்னிட்டு நீர் வழங்கல் மற்றும் சுகநல பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டத்தினூடாக நானுஓயா கெல்சி தமிழ் வித்தியாலயத்திற்கான குடிநீர் வழங்கள் திட்டத்தின் கீழ் அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.



உலக வங்கியின் கடனுதவியின் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. முன்னாள் நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜினால் கெல்சி தமிழ் வித்தியாலயத்தின் குடிநீர் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.



இந்நிகழ்வில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் நுவரெலிய பிராந்திய இயக்குனர், நிதியத்தின் பொறியியலாளர்கள் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள், ஓஸிப் நிறுவனர்கள், பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## புடவை வர்த்தகரின் மகன் கடத்தப்பட்டு விடுவிப்பு

### கண்டி பொலிஸார் விசாரணை

புடவை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர் ஒருவருடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடத்தல் சம்பவமொன்று கண்டியில் இடம்பெற்றுள்ளது.

வர்த்தகம் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கண்டி-ஹந்தான பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட புடவை வர்த்தகர் சுமார் 12 இலட்சம் ரூபாய் கடன் வாங்கியுள்ளார்.

இந்நிலையில் கடன் கொடுத்தவர்கள் கடனை தொடர்ச்சியாக கேட்டு தொந்தரவு செய்து வந்துள்ளனர்.

எனினும் கடன்தொகையை மீள வழங்குவதற்கு வர்த்தகர் மறுத்து வந்துள்ளார். இந்நிலையிலேயே அவரது மகன் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

பேராதனை வீதியிலுள்ள தனியார் வகுப்புக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தபோதே, வாகனமொன்றில் வந்த இனந்தெரியாத மூவர், மாணவனை, பலவந்தமாக வானுக்குள் ஏற்றுக்கொண்டு கடுகண்ணாவை பிரதேசத்துக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

அதன்பின்னர் மாணவனின் தந்தையான வர்த்தகருக்கு அழைப்பை எடுத்து, கடனை கொடுக்கும் வரையிலும் மகனை விடுவிக்கமாட்டோம் என எச்சரித்துள்ளனர்.

இதனை கேள்வியுற்ற மகனின் தாய், கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட பொலிஸ் பரிசோதகர், அழைப்பை ஏற்படுத்தியவரின் இலக்கத்துக்கு மீண்டும் அழைப்பை ஏற்படுத்தி, தற்போது இருக்கும் இடத்திலுள்ள பொலிஸ் நிலையத்தில் மாணவனுடன் சரணடையுமாறு பணித்துள்ளார்.

அதன்பின்னர், மாணவனை மட்டும் கட்டுகஸ்தோட்டையில் வைத்து பஸ்ஸொன்றில் ஏற்றிவிட்டு, சந்தேக நபர்கள் தப்பியோடி தலைமறைவாகிவிட்டதாக அறியமுடிகின்றது.

சந்தேகநபர்கள்

பொல்ஹாவலையைச் சேர்ந்தவர்கள் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. கண்டி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## கழிவறை வசதிகளின்மையால் கிளினியூஜ் தமிழ் வித்தியாலய மாணவர்கள் அசௌகரியம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்



சாமிமலை மல்லியப்பூ தோட்டத்தில் இயங்கும் கிளினியூஜ் தமிழ் வித்தியாலயத்தில் கழிவறை வசதிகளின்மையால் ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

தரம் ஒன்று முதல் ஐந்து வரை வரை சுமார் 249 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்விகற்கின்றனர். அத்துடன் 08 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரிடம் கேட்டபோது, பாடசாலைக்கு முறையான நீர்வசதி இல்லை. இதனால் பாடசாலையிலுள்ள அனைத்து கழிவறைகளையும் சுத்தம் செய்தல் என்பது சிரமமான வேலையாகவுள்ளது. இப்பாடசாலைக்கு சுத்தமான குடிநீர் வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் அதிபர் குடியிருப்பு பகுதியிலுள்ள கழிவறை குழி உடைந்த நிலையில் உள்ளது. அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி புனரமைக்க வேண்டும். இல்லையெனில் மாணவர்கள் தவறிவிழும் அபாயமுள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பெருநாள் முற்பணம் வழங்குமாறு பெருந்தோட்ட உத்தியோகஸ்தர்கள் கோரிக்கை

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பெருந்தோட்டங்களில் தொழில் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு ரூ.20000/= பெருநாள் முற்பணமாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரொபட் பிரான்சீஸ் சகல கம்பனி நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளுக்கும், இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, எல்கடுவ பிளாண்டேசன் கம்பனி ஆகிய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இம்மாதம் சம்பளத்துடன் முற்பணத்தை வழங்கும்படி கேட்டு கடிதம் எழுதியுள்ளார்.

## மாணிக்கக்கல் தோண்டிய ஐவரில் ஒருவர் பலி; நால்வர் கைது

ஆ.ரமேஸ்.

கந்தப்பளை ஹய்பொரஸ்ட் மாகுடுகலை பிரதேசத்தில் இயற்கை வனபகுதியில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹய்பொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

மாகுடுகலை பிரதேசத்தில் ஐவர் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட போது ஒருவர் மீது பாரிய கல் ஒன்று சரிந்து விழுந்துள்ளது. இதனையடுத்து அவர் பலத்த காயங்களுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஹைபொரஸ்ட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகுடுகலை அப்பில் பாம் பகுதியில் (சிரச வன பகுதி) என அழைக்கப்படும் இலக்கம் 03 இயற்கை வனத்தில் பொகவந்தலாவை பிரதேசத்திலிருந்து ஐவர் வருகை தந்து அங்கு மாணிக்கக்கல் அகழ்வில் நேற்றுமுன்தினம் இரவு ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது பாரிய குழியொன்றை தோண்டி அங்கு ஐவரில் இருவர் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடும் போது மண்மேடுடன் பாரிய கல் ஒன்று சரிந்து விழுந்துள்ளது. இதில் பொகவந்தலாவ குயினா தோட்டத்தை சேர்ந்த அம்மாசி விஜயகுமார் வயது (40) என்பவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். .

இவரை சுமந்து கொண்டு ஏனைய நான்கு பேரும் வனப்பகுதியிலிருந்து நேற்று (22) அதிகாலை ஹைபொரஸ்ட் பிரதான வீதிக்கு வருகை தந்துள்ளனர். அதேநேரத்தில் காட்டுக்குள் சிலர் மாணிக்கக்கல் அகழ்வதாக மாகுடுகலை வன காரியாலயத்திற்கு தகவல் கிடைத்துள்ளது. உடனே சம்பவ இடத்திற்கு வன பாதுகாப்பு அதிகாரிகள் சென்றுள்ளனர். இதன் போது அங்கு காயங்களுக்கு உள்ளான ஒருவரை சுமந்து கொண்டு நால்வர் வருவதை அவதானித்த அதிகாரிகள் இவர்களை கைது செய்ததுடன் காயங்களுக்குள்ளானவரை உடனடியாக ஹைபொரஸ்ட் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்துள்ளனர்.

# தினகரன் Business

# GREAT MINDSயின் உளவியல் ஆலோசகர்களுக்கான பயிற்சி நெறி





இலங்கையை மையப்படுத்தி செயற்பட்டு வரும் சமூக மேம்பாட்டு அமைப்பான கிரேட் மைன்ட்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச உளவியல் பயிற்றுவிப்பாளர் கலாநிதி ஹுசைன் பாஷா இலங்கை வாழ் உளவியல் மாணவர்கள், உளவியல் ஆலோசகர்களுக்கான 30 மணிநேர தொழில் பயிற்சி வெற்றிகரமாக நிறைவுபெற்றது. இதில் 80 இற்கு மேற்பட்ட பங்குபற்றுனர்கள் பங்குபற்றியதுடன் இந்நிகழ்வின் இறுதியில் IBNLP அங்கீகாரம் பெற்ற NLP MASTER PRACTITIONER சான்றிதழும் தொழில் பயிற்சி சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக இலங்கையின் மூத்த உளவியல் ஆலோசகர் அஸ்மியாஸ் ஷஹீத் கலந்து மாணவர்கள் மற்றும் ஏற்பாட்டுக்குழுவிற்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

கொழும்பு மாநகரில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிரேட் மைன்ட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் தரபீக் எம் தாஹா மற்றும் உளநல பகுதியின் நிர்வாக தலைவர் பஸ்லான் ஏ காதர் என்போர் கலாநிதி ஹுஸைன் பாஷாவின் சேவையையும், பணியையும் வாழ்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

# உலகின் முன்னணி தளபாடங்கள் (PDS) மூலம் இலங்கையில்



BLUM, உலகின் முன்னணி தளபாடங்கள், பொருத்துதல்கள் உற்பத்தியாளர், இலங்கையில் ப்ருடென்ஷியல் இன்டர்நேஷனலுடன் இணைந்து செயற்படவுள்ளனர்.

உயர்தர பொருத்துதல்களை தயாரிப்பதில் உலகளாவிய முன்னணி நிறுவனமான Blum, மார்ச் 2023 முதல் இலங்கையில் Blum தயாரிப்புகளை விநியோகிக்க ப்ருடென்ஷியல் இன்டர்நேஷனலுடன் பிரத்தியேக பங்காளித்துவத்தை அறிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டு ப்ருடென்ஷியல் இன்டர்நேஷனல் எங்கள் தலைவரான மறைந்த மொஹிதீன் கியாஸால் தொடங்கப்பட்டதில் இருந்து, உலகத் தரம் வாய்ந்த ரகங்களை போட்டி விலையில் கொண்டு வருவதாகும்.

உயர்தர பர்னிச்சர் பொருத்துதல்கள் மட்டுமன்றி, வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் எதிர்கால வாழ்க்கை வடிவமைப்புகளுக்கு விருது பெற்ற ப்ளூமுடன் கூட்டணியாக இருப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம் என்று ப்ருடென்ஷியல் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அஸ்லம் மொஹிதீன் தெரிவித்துள்ளார்.

ப்ருடென்ஷியல் டிசைன் ஸ்டுடியோ என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உங்களின் உட்புற வடிவமைப்புத் தேவைகளுக்கான வடிவமைப்பு முதல் சுற்றுச்சூழலுக்கு உகந்த பச்சை சான்றளிக்கப்பட்ட பொருட்கள் வரை ஒரே கூரையின் கீழ் தேர்வு செய்யக்கூடிய மிகப்பெரிய வண்ணத் தொகுப்புகளுடன், அனைத்தும் மலிவு விலையில் 360 டிகிரி தீர்வுடன் உள்ளது. உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்றவாறு.

உங்கள் கனவு சமையலறை அல்லது அலுமாரியை நனவாக்கும் உலகத் தரம் வாய்ந்த தயாரிப்புகளை உள்நாட்டில் உள்ள ஒரே விரிவான பொருள் விநியோக தீர்வு வழங்குநர் PDS ஆகும்.

### மாற்றத்தை ஏற்படுத்திய தலைவர் 2022”

# Brown & Company PLCயின் தாமோதரம்பிள்ளை சனகனுக்கு விருது




“புத்தாக்கத்திற்கும் புதுமைபடைக்கும் சிந்தனைக்கும் புகழ்பெற்ற Brown & Company PLCயின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி தாமோதரம்பிள்ளை சனகன் கொழும்பு, சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற கௌரவமிக்க CEO விருது வழங்கலில், '2022 ஆம் ஆண்டின் மாற்றத்தை ஏற்படுத்திய தலைவர்' என்ற பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டார். தமக்குரிய தொழிற்துறைகளில் உன்னதமான வெற்றியை எய்தியமை மட்டுமல்லாமல், தாம் வாழும் மற்றும் பணிபுரியும் சமூகங்களில் கணிசமான முன்னேற்றங்களைச் செய்து தாக்கத்தினை ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க தனிநபர்களை இவ்வைபவம் கௌரவிக்கின்றது. சனகன், 2013 ஆம் ஆண்டு பிரதம நிதி அலுவலராக Brown & Company PLC நிறுவனத்தில் இணைந்து கொண்டதுடன் பின்னர் 2020 இல் பிரதம தொழிற்படுத்தல் அலுவலராக இந்நிறுவனத்தின் தொழிற்பாடுகளை தலைமைதாங்கி நடாத்தும் வகிபாகம் பொறுப்பளிக்கப்பட்டது. இவர் தற்போது பணிப்பாளராக/பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றுவதுடன் கம்பனியை மாறுதலடையச் செய்வதில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

# பெண்களுக்கான மிகச்சிறந்த பணியிடங்களில் ஒன்றாகத் AIA இன்சூரன்ஸுக்கு கௌரவம்

பெண்களுக்கான இலங்கையின் மிகச்சிறந்த பணியிடங்களில் ஒன்றாகத் தொடர்ச்சியாக ஐந்து வருடங்களாக (20182022) கௌரவிக்கப்பட்டுள்ள AIA இன்சூரன்ஸ் தனது நிறுவனத்தினுள் மட்டுமன்றி நாடு முழுவதுமுள்ள அனைத்துத் தரப்புப் பெண்களின் பன்முகத்தன்மையை பாதுகாக்கிறது. இதில் நிறுவனம் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பிரதிபலித்தல், அதிக பாலினச் சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை வலியுறுத்தல் ஆகியவற்றில் மார்ச் மாதத்தினை முற்றிலுமாக அர்ப்பணித்துள்ளது. AIA சர்வதேச மகளிர் தினத்தை வழமை போன்று மார்ச் 08 ஆம் திகதியன்று மாத்திரம் கொண்டாடாமல் மிகவும் கவனமாக ஒழுங்கு செய்யப்பட்ட குதூகலமான மற்றும் ஊக்குவிக்கும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளின் தொடர்களுடன் பெண்களின் பங்கைக் கௌரவித்தல், கண்ணியப்படுத்தல் மற்றும் பாராட்டுதல் ஆகியவற்றுக்காக மார்ச் மாதத்தினை முழுவதுமாகவே அர்ப்பணித்திருந்தது.

நாடு முழுவதுமுள்ள பெண்களுக்கு அதிகாரமளிக்கும் பெண்களுக்கான IFCDFAT இன் பணியில் பெண்கள் திட்டமான 'அய சுரக்கின AIA' திட்டத்தினைக் கடந்த வருடம் AIA IFC உடன் ஒன்றிணைந்து ஆரம்பித்திருந்தது. பெண்கள் தைரியமாகவும், நம்பிக்கையுடனும், மதிப்புமிக்கவர்களாகவும் மற்றும் பாராட்டப்படுவதை உணரவும் அதேசமயம் பெண்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் அவர்களுக்கு நிதிப் பாதுகாப்பை வழங்குவதற்கும் நிறுவனம் தனது முயற்சியினைத் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.



பொதுவாக அனைத்து இடங்களிலுமுள்ள பெண்கள் சம உரிமையுடைய மற்றும் சமமான வாய்ப்புக்களைக் கொண்ட எவ்விதமான பாகுபாடுமற்ற தங்களை ஒரே மாதிரியாக நடத்தக்கூடிய எதிர்காலமொன்றையே வேண்டுவதோடு, அதற்கு மிகவும் தகுதியானவர்களாகவும் இருக்கின்றனர். இது AIA இன்ஷூரன்ஸில் மிகவும் கவனமான மற்றும் முக்கியமான திட்டமாகவே அமைந்திருக்கின்றது. AIA நிறுவனம் தனது பெண் ஊழியர்கள் மற்றும் முகவர்களுக்கு பல அனுகூலங்களையும் வழங்குகிறது. மேலும் அனைத்து ஊழியர்களுக்கும் நியாயமான மற்றும் சமமான வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன் அவர்களில் சிறந்ததை வெளிக்கொணரவும் மற்றும் அவர்களின் தொழில் அபிலாஷைகளை அடைவதற்கு அவர்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் தகுதிக்கான கலாசாரத்தைத் தொடர்ந்தும் ஊக்குவிக்கவும் செய்கின்றது.





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, யூனியன் வங்கி, பெண்களுக்கு வலுவூட்டும் ஊக்கமளிப்பு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. தலைமையகம் மற்றும் கிளைகளைச் சேர்ந்த ஊழியர்களின் பங்கேற்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது. லிலந்தி தெல்கொட (மனித வளங்கள் பிரிவின் உப தலைவர்), வாழ்த்து நினைவுச்சின்னத்தை, நயனா கருணாரட்ன (முகாமைத்துவ பணிப்பாளர், இமேஜ் கொன்சல்டன்ட்ஸ்) இடம் கையளிப்பதை காணலாம்.

# AIA இன்சூரன்ஸ் பணிப்பாளர் சபைக்கு உபுல் விஜேசிங்க நியமனம்



AIA ஸ்ரீலங்கா, இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டு பணிப்பாளர்கள் சபையின் (BOD) நிறைவேற்றுப் பணிப்பாளராக உபுல் விஜேசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். உபுல் AIA ஸ்ரீலங்காவின் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம விநியோக அதிகாரி ஆவார். மேலும் அவர் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன் தொழில்துறையில் மிகவும் மரியாதைக்குரிய காப்பீட்டு நிபுணர் ஆவார்.

உபுல் ஒரு பட்டதாரி முகாமைத்துவப் பயிற்சியாளராக நிறுவனத்துடன் தனது பயணத்தைத் தொடங்கினார் மற்றும் நிறுவனத்துடனான தனது தொழில் வாழ்க்கையின் போது படிப்படியாக முன்னேறி பெருநிறுவன உயர் பதவிகளை அடைந்தார். பொது முகாமைத்துவம், விற்பனைத் துறை உள்ளடங்கலாக ஆயுள் மற்றும் பொதுக் காப்பீட்டின் அனைத்து அம்சங்களிலும் காப்புறுதி பொறுப்பேற்று, மறுகாப்பீட்டு நுட்பம் மற்றும் பல்விநியோக வழிகளில் பல்வேறு நிலைகளில் அவர் விரிவான வெளிப்பாட்டை பெற்றுள்ளார் மேலும் நிறுவனத்துடன் உள்ளூர் மற்றும் சர்வதேச பயிற்சி வாய்ப்புகளையும் பெற்றுள்ளார். இவர் இதற்கு முன்னர் நிறுவனத்தின் குறிப்பிட்ட அதிகாரி மற்றும் நிறுவனத்தின் முதன்மை அதிகாரி ஆகிய சட்டப்பூர்வ பதவிகளை வகித்துள்ளார்.

Capitaltrust
Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## Central Bank receives the first tranche of the IMF funds of USD 330 mn... Treasury Bill rates decline sharply...

Daily Market Watch
22nd March 2023

### Market Commentary

Stock market traders rallied around Sri Lanka Telecom and Lanka Hospitals after the cabinet approved the sale of the controlling interest.
The Central Bank received the first tranche of the IMF funds of USD 330 mn. A striking feature of the IMF facility is that the funds will also be allowed to be utilized for budgetary support, thereby placing less pressure on the government to borrow from domestic markets, which should in turn help to reduce interest rates. Meanwhile, Treasury Bill rates declined sharply as indicated in the below table. With the country now being treated as debt sustainable and not bankrupt, we expect foreign and local investors who were on the sidelines to gradually commence investing in the stock market.


### T bill Auction Summary

| | | | | |
|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |


### Market Performance

| | 22.03.2023 | 21.03.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,527.1 | 9,604.4 | -0.81 |
| S&P SL 20 Index | 2,768.3 | 2,800.8 | -1.16 |
| Turnover (LKR mn) | 1,512.2 | 1,477.7 | 2.3 |
| Foreign Purchases (LKR mn) | 58.7 | 70.6 | -16.9 |
| Foreign Sales (LKR mn) | 23.2 | 48.2 | -51.9 |
| Market Cap (LKR bn) | 4,025.8 | 4,021.3 | 0.1 |
| Market Cap (US$ bn) | 12.5 | 12.5 | 0.1 |
| Traded Companies | 249 | 253 | -1.6 |
| Market PER (x) | 5.2 | 5.2 | 0.2 |
| Price to Book (x) | 1.0 | 1.0 | 0.0 |
| Dividend Yield (%) | 3.9 | 3.9 | 0.0 |


### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI





### Turnover Breakdown





### Key Rates

| | 22.03.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 22.74% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.23% |
| Treasury Bill Rate (364 Days) | 24.32% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.60% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

Kelani Valley Plantations PLC (KVAL) - LKR 3.00. XD date - 24.03.2023.

Hayleys Fabric PLC (MGT) - LKR 0.30. XD date - 24.03.2023.

Talawakelle Tea Estates PLC (TPL) - LKR 6.00. XD date - 24.03.2023.

Haycarb PLC (HAYC) - LKR 1.00. XD date - 24.03.2023.

Hayleys Fibre PLC (HEXP) - LKR 0.50. XD date - 24.03.2023.

Dipped Products PLC (DIPD) - LKR 0.60 . XD date - 24.03.2023.

Hayleys PLC (HAYL) - LKR 5.35. XD date - 24.03.2023.

Ceylon Tobacco Company PLC (CTC) - LKR 30.00 XD date - 31.03.2023.

Sampath Bank PLC (SAMP) - LKR 3.45. XD date - 31.03.2023.

SCRIP DIVIDENDS

Sampath Bank PLC (SAMP) - 1 share for 40.3989773996 Shares. XD date - 31.03.2023.

Commercial Bank of Ceylon PLC (COMB) - 1 share for 16.9934641119 Shares. XD date - 31.03.2023.

Hatton National Bank PLC (HNB) - 1 share for 23.5294128792 Shares. XD date - 31.03.2023.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# இலங்கையின் பொருளாதாரத்திற்கு இணையவழி சந்தைப்படுத்தலின் முக்கியத்துவம்

இணையவழி சந்தைப்படுத்தல் என்பது தொழிலாளர்களை தொழில் முனைவோராக மாற்றுவதாகும். வளர்ந்து வருபவர்களையும் ஏனையோரையும் முன்னேற்றி அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்குவதற்கு இது ஒரு அற்புதமான வழி.

1800களின் பிற்பகுதியில், முதல் மார்க்கெட்டிங் நிறுவனத்தின் நிறுவனரான டேவிட் மெக்கானல் என்பவரால் உருவாக்கப்பட்ட கலிபோர்னியா பெர்ஃப்யூம் கம்பெனி இன்று நாம் அனைவரும் அறியும் அவான் (Avon) இணையவழி சந்தைப்படுத்தல் நிறுவனமாகும்.

இலங்கை போன்ற நாடுகளில் வறுமையை ஒழிப்பதற்கு, உருவாக்கப்படும் செல்வம் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நீங்கள் செல்வத்தை உருவாக்க விரும்பினால், வளர்ந்த நாடுகள் ஏற்கனவே வெற்றிகரமாக நெட்வொர்க் மார்க்கெட்டிங் செய்து வருகின்றன, இது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருளாதாரத்தின் மேம்பாட்டை உறுதிப்படுத்துகின்றது.

நாட்டிற்கு டொலர் கையிருப்பு வரத்து அதிகரிக்கிறது. துரதிஷ்டவசமாக, இலங்கையில் இணையவழி சந்தைப்படுத்துதலுக்கான முறையான சட்ட ஏற்பாடுகள் இல்லாததும், இவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான முறையான வர்த்தமானிகளின் பற்றாக்குறையும் நாட்டின் பொருளாதாரத்தின் போக்கிற்கு தடையாக இருப்பது வருத்தமளிக்கிறது.

# தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவதில் தினகரன் பத்திரிகைக்கு முதன்மை பொறுப்பு வழங்கப்படுகிறது

## தேசிய நாமல் உயன நிறுவுனர் வனவாசி ராகுல தேரர்

தேசிய இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை உருவாக்குதற்கான முக்கிய பணியை தினகரன் பத்திரிகை மேற்கொள்ள வேண்டும் என தேசிய நாமல் உயன நிறுவுனர் வனவாசி ராகுல தேரர் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் கடந்த 20 ஆம் திகதி தெரிவித்தார்.


அவர் தினகரன் பத்திரிகையின் 91ஆவது ஆண்டு விழாவில் இணைந்து கொண்ட போதே இதனை தெரிவித்தார்.

**அங்கு உரையாற்றிய தேரர் தொடர்ந்து கூறியதாவது,**

தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்காக அனைத்து பத்திரிகைகளும் தங்களால் முடிந்த முயற்சியை செய்ய வேண்டும். அனைத்து ஊடகங்களும் மக்களை பிரிக்கும் கொள்கையிலிருந்து விலகி அனைத்து இனத்தாரையும் ஒற்றுமைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

நாட்டில் அனைத்து மக்களும் இன, மத,மொழி போன்ற பல காரணங்களால் பிரிந்து வாழ்கிறார்கள். நாட்டின் தேசிய சொத்து அனைத்து மக்களுக்கும் உரியது. மக்களிடையே கொள்கையளவில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இலங்கை மக்களை பொறுத்தவரையில் ஊடக கலையில் ஏதோ பின்னடைவு உள்ளது என எனக்கு சில நேரம் நினைக்கத் தோன்றுகின்றது. நாம் பிறந்ததன் பின்னர் தான் சிங்களவர்களானோம். தமிழர்களானோம். முஸ்லிம்களானோம். கிறிஸ்தவர்களானோம். ஆனால் நாம் அனைவரும் இயற்கையின் படைப்புகள். பத்திரிகை கலையும் அவ்வாறானதே. இந்தப் பேனா மிகவும் புதுமையானது. பேனாவால் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும். இது உண்மையில் சவரக்கத்தியால் தயிர் சாப்பிடுவது போன்றதே ஊடகத்துறையில் பணியாற்றுவது. அதேபோன்று தினகரனுக்கும் ஒரு பொறுப்பும் கடமையும் ஒன்று. அது என்னவென்றால் இனங்களிடையே நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கு முன்னுரிமை அளிப்பதாகும்.



பத்திரிகைகள் எவ்வளவு தூரத்திற்கு அதற்காக செயல்படுகின்றன என எனக்குத் தெரியாது. பத்திரிகை கலை என்பது சுயாதீனமாக செயல்படுவதாகும். ஆனால் நாம் சுயநலமாக சிலரின் தேவைக்காக செயல்படுகின்றோம். நாம் செய்ய வேண்டியது, சிங்களமா, தமிழா, ஆங்கிலமா என பாராது இந்த பத்திரிகைகள் அனைத்தும் தேசிய நல்லிணக்கத்தை பாதுகாத்து மேம்படுத்துவதாகும்.

மக்களை பிரித்து வேறுபடுத்தாமல் செயல்பட வேண்டும். வடக்கு, தெற்கை எடுத்துக் கொண்டால் அரசியல் ரீதியாக பிரிந்துள்ளார்கள். குல ரீதியாக பிரிந்துள்ளார்கள். இனமாக பிரிந்துள்ளார்கள். மதமாக பிரிந்துள்ளார்கள். பாலர் பாடசாலைகளாக பிரிந்துள்ளார்கள். சிங்கள பாலர் பாடசாலை, முஸ்லிம் பாலர் பாடசாலை, தமிழ் பாலர் பாடசாலைகள் என பிரிந்துள்ளன. நாம் எங்கே இருக்கின்றோம்? பூஜ்ஜியத்தில். கத்தோலிக்க பாடசாலை, பௌத்த பாடசாலை, வேறு இன பாடசாலைகள் என்னும் இந்த கொள்கையை மாற்றுவதற்கான பங்களிப்பை பத்திரிகைகள் வழங்க வேண்டும் . பிக்குகள் நிக்காயாக்கள் என பிரிந்துள்ளார்கள். மக்களும் பிரிந்துள்ளார்கள். எம்மால் ஒரு நாடாக முன்னேற்றமடைய முடியுமா? எமது அரசியல்வாதிகள், தற்போதுள்ள அரசாங்கம் இவற்றுடன் தொடர்புடையன. அது வேறு கதை.

ஆனால் நாம் நாட்டு மக்களின் நன்மைக்காக நல்லது செய்ய நல்ல நோக்குடன் பேனாவை பயன்படுத்த வேண்டும் என்பதையே நான் கூற விரும்புகின்றேன்.

வயலட்

# 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள்



ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை 6ஆம் வகுப்பிற்கு பிரபல பாடசாலைகளில் சேர்ப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியாகியுள்ளன.

2022 இல் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளிகளே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களிலான பாடசாலைகளுக்கு வெவ்வேறாக வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றில் ஆகக் கூடிய புள்ளிகளாக கொழும்பு ரோயல் கல்லூரிக்கு 182 வெட்டுப்புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. கண்டி தர்மராஜ வித்தியாலயத்திற்கான வெட்டுப்புள்ளி 180 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மொழிமூல கலவன் பாடசாலைகளில் மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள ஹைலன்ஸ் கல்லூரிக்கே அதிகூடிய வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய இக்கல்லூரிக்கான வெட்டுப்புள்ளி 163 ஆகும். முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரிக்கு 152, மூதூர் மத்திய கல்லூரிக்கு 151, மாவனல்லை சாஹிரா கல்லூரிக்கு 151 என வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் மொழி மூல ஆண்கள் பாடசாலையில் கொழும்பு ரோயல் கல்லூரிக்கு 170 , டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரிக்கு 161, இசிபத்தான கல்லூரிக்கு 158, ஓட்டமாவடி மத்திய கல்லூரிக்கு 155 மற்றும் ஹட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரிக்கு 155 என வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதே போன்று தமிழ் மொழி மூல பெண்கள் பாடசாலைகளில் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு 162 வெட்டுப்புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. யாழ் வேம்படி மகளிர் பாடசாலைக்கு 154, மட்டக்களப்பு வின்சன்ட் கல்லூரிக்கு 152 , ஹட்டன் புனித கப்ரியல் மகளிர் கல்லூரிக்கு 147 என வெட்டுப்புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய சகல பாடசாலைகளுக்குமான வெட்டுப்புள்ளிகளை கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் சென்று பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கலாசார பணிப்பாளர் பேருவளை விஜயம்



முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் பைசால் ஆப்தீன் அண்மையில் பேருவளை சீனன்கோட்டைக்கு விஜயம் செய்தார். அன்னார் சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச்செயலாளர் சிஹாப் ஹாஜியார் மற்றும் சங்க இணைப்பொருளாளர் ஸவாஹிர் ஹாஜியார் ஆகியோரை சந்தித்து முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். இதன்போது பள்ளிச்சங்கம் சார்பாக பணிப்பாளருக்கு ஸவாஹிர் ஹாஜியார் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் அருகில் 'Beauty Gems' உரிமையாளர் அஹ்ஸர் ஸவாஹிர், திணைக்கள அதிகாரி முப்தி முர்ஸியையும் படத்தில் காணலாம்.

# கையை வெட்டி தன்னுடன் எடுத்துச் சென்ற நபர்

மொரட்டுவை, கொரலவெல்ல பகுதியில் அதிவேக வீதியில் வைத்து மின்சார ஊழியர் ஒருவரின் கைகளை ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிய காட்சிகள் பாதுகாப்பு கமராவில் பதிவாகியுள்ளன.

இதனையடுத்து, பிரதேசவாசிகள் பாதிக்கப்பட்ட நபரை 1990 அம்புலன்ஸ் சேவையின் ஊடாக பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் மொரட்டுவை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், துண்டிக்கப்பட்ட கை பாகங்களை சந்தேகநபர் எடுத்துச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



இலங்கை போக்குவரத்து சபையில் காணப்படும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான வெற்றிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போது போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நியமனக்கடிதங்களை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

# சித்தாண்டி முருகன் ஆலய திருவிழா

*காரைதீவு குறூப் நிருபர்*

ஈழத்துப்பழனி என்று அழைக்கப்படும் சித்தாண்டி வேலோடு மலை முருகன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா, பிரதம குருவான சிவஸ்ரீ கு.க.அரவிந்த குருக்கள் தலைமையில் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக, ஆலயப் பரிபாலன சபையின் தர்மகர்த்தா சுப்பிரமணியம் தியாகராஜா தெரிவித்தார்.

தொடர்ந்து 6 நாட்கள் திருவிழா நடைபெற்று, 7ஆம் நாளான ஏப்ரல் 5ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் திருவிழா இனிதே நிறைவடையும்.


NLDB

கமத்தொழில் அமைச்சு

**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**

**பதவி வெற்றிடம்**

இலங்கையின் தகுதியுள்ள பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவி - உதவிப் பொது முகாமையாளர் (கூட்டு வர்த்தக செயற்பாடுகள்) - HM 1-3 – 2016**

**தகைமைகள்** : கமத்தொழில் / பெருந்தோட்ட முகாமைத்துவம் / கால்நடை விஞ்ஞானம் / விலங்கு வேளாண்மை / முகாமைத்துவம் / பொது நிர்வாம் / வியாபார நிர்வாகம் / வர்த்தகம் என்பவற்றில் இளமாணிப் பட்டம் சகிதம் பட்டப் பின்படிப்புத் தகைமை (Masters) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் அங்கத்துவம் அல்லது ICASL/ ACCA/CIMA என்பவற்றில் சக / இணை (Associate / Fellow) அங்கத்துவம்

அத்துடன்

முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை, அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் நிரூபிக்கப்பட்ட பதிவுகள் சகிதம் முகாமைத்துவ நிலையில் 18 வருட கால அனுபவம். இதில் மூன்று (03) வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையிலாக இருத்தல் வேண்டும்.

2. **பதவி - உதவிப் பொது முகாமையாளர் (பண்ணை விலங்கு மற்றும் பெருந்தோட்ட அபிவிருத்தி) - HM 1-3 – 2016**

**தகைமைகள்** : விஞ்ஞானம் / கமத்தொழில் / பெருந்தோட்ட முகாமைத்துவம் / கால்நடை விஞ்ஞானம் / விலங்கு வேளாண்மை என்பவற்றில் இளமானிப் பட்டம் சகிதம் பட்டப் பின்படிப்புத் தகைமை (Masters) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் மேகூறப்பட்ட துறையில் அங்கத்துவம்

அத்துடன்

முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை, அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் நிரூபிக்கப்பட்ட பதிவுகள் சகிதம் முகாமைத்துவ நிலையில் 18 வருட கால அனுபவம். இதில் மூன்று (03) வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையிலாக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : **HM 1-3-2016**: ரூபா. **86,865/-, 15x2,270/-** ரூபா **120,915/-**
மேற்கூறப்பட்ட சம்பளத்திற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் நேரத்தில் இதே திறன்கொண்ட சேவையில் உள்ளவர்கள் / சேவையாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மேலதிக நன்மைகள்:**

i. உள்ளக மற்றும் வெளிப்புற மருத்துவ நன்மைகள்
ii. ஒரு மாதத்திற்கு 960 கி.மீ. பிரத்தியேக ஓட்டம் சகிதம் வாகனம் ஒன்று வழங்கப்படும்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும்**

i. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல் உள ஆரோக்கியத்தையும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கான தகுதியையுடையவராகவிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த குணநலன்களையுடையவராகவிருத்தல் வேண்டும்.

2023 ஏப்ரல் 17ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து சுயதரவு மற்றும் உறவினரல்லாத இருவரின் பெயர்கள், அவர்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை அடக்கிய சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் என்பவற்றை பதிவுத் தபாலில் தலைவர், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும்.

அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட, கொழும்பு-05.**



**பெறுகை அறிவித்தல்**

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு, மேல் மாகாணம்)**

**மீகொட ஆயுர்வேத மத்திய நிலைய மறுசீரமைப்பு செயற்றிட்டத்திற்காக மற்றும் கம்பஹா ஆதார வைத்தியசாலையின் 04ஆம் மாடியை மறுசீரமைப்பதற்குத் தேவையான பதார்த்தங்களைக் கொள்வனவு செய்தல்**

01. கம்பஹா ஆதார வைத்தியசாலையின் 04 ஆம் மாடியை மறுசீரமைப்பு செய்யும் செயற்றிட்டத்தின் குளியலறை மற்றும் பென்றி கபட்டுகளை தயாரிப்பதற்கு தேவையான பதார்த்தங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல்

PRDA/WP/PRO/2023/16

**கேள்வியின் சாராம்சம்**

| | விபரம் | பிணையம் காசாக (ரூபா) | வங்கிப் பிணையம் ரூபா |
|---|---|---|---|
| 1 | பென்றி கபட்டுக்கள் மற்றும் குளியலறை தொகுதிகளைப் பிரித்தல் (Partition) களிற்குத் தேவையான பதார்த்தங்களை கொள்வனவு செய்தல் | 57,500.00 | 115,000.00 |

02. இதற்கான பிணையத்தை காசாக அல்லது வங்கிப் பிணையமொன்றாக, மேற்படி பெறுமானத்திற்கு, பெறுகைப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. 2023.03.23 முதல் 2023.04.07 வரை மு.ப.09.00 முதல் பி.ப.2.30 வரை அதற்கான படிவக் கட்டணம் ரூபா 1000.00+2.5% (SSCL) +15% வட் ஐச் செலுத்தி (பதிவு செய்யப்பெற்றுள்ள வழங்குநர்கள் தவிர்ந்த) மா.வீ.அ. அதிகார சபையின் (மே.மா) பிரதான அலுவலக வழங்கல் பிரிவில் இதற்கான கேள்விப்படிவத்தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்விகளைத் திறத்தல் 2023.04.10 அன்று மு.ப.11.00 இற்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான அலுவலக 02ஆம் மாடியில் மேற்கொள்ளப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரம் அளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

02. மீகொட ஆயுர்வேத மத்திய நிலைய மறு சீரமைப்பு செயற்றிட்டத்திற்குத் தேவையான குளியலறை உபகரணங்கள் மற்றும் டைல் கொள்வனவிற்காக கேள்விகோரல்

PRDA/WP/PRO/2023/21

**கேள்வியின் சாராம்சம்**

| | விபரம் | பிணையம் காசாக (ரூபா) | வங்கிப் பிணையம் ரூபா |
|---|---|---|---|
| 1 | குளியலறை உபகரணங்கள் மற்றும் டைல் கொள்வனவு செய்தல் | 90,000.00 | 180,000.00 |

02. இதற்கான கேள்விப் பிணையத்தை காசாக அல்லது வங்கிப் பிணையமொன்றாக மேற்படி பெறுமானத்திற்கு பெறுகைப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் பிரகாரம் சமர்ப்பித்தல் வேண்டும்.


03. இதற்கான கேள்விப்படிவத் தொகுதியை 2023.03.23 முதல் 2023.04.07 வரை மு.ப.09.00 முதல் பி.ப.2.30 வரை அதற்கான படிவக் கட்டணம் ரூபா 1000.00+2.5% (SSCL) +15% வட் ஐச் செலுத்தி (பதிவு செய்யப்பெற்றுள்ள வழங்குநர்கள் தவிர்ந்த) மா.வீ.அ. அதிகார சபையின் (மே.மா) பிரதான அலுவலக வழங்கல் பிரிவில் இதற்கான கேள்விப்படிவத்தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்விகளைத் திறத்தல் 2023.04.10 அன்று பி.ப.2.30 இற்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான அலுவலக 02ஆம் மாடியில் மேற்கொள்ளப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரம் அளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

05. கேள்விகளை வழங்குவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, கேள்வித் தெகையானது, 5.0 மில் ரூபாவிற்கு மேற்படும் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும் பதிவுச்சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.


**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல.59, புனித செபஸ்தியன" மேடு,**
**கொழும்பு -12**
**தொலைபேசி இல - 0115676903.**

# சிறு விளம்பரம்





## மோட்டார் வாகனங்கள்



117

## வேன்கள் விற்பனைக்கு


253-0095 Isuzu Van, 1993, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 0714542958. 018473



119

## பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

WP CAK-8832 Suzuki Alto, 2015, car கூடிய விலை க் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 018475



122

## மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP ABN-7760 Bajaj, 2016, threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810. 018466

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பின்வரும் நபர்களுக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின் நிலையம்/ வசதியின் பெயர் | இடம் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|---|
| E/AL/N/21/38 | எகோ பவர் பிரைவேட் லிமிடெட் | ஹபுகஸ்தன்னா II சிறிய நீர் மின் நிலையம் | ஹபுகஸ்தன்ன தோட்டம், கல்லலெல்ல, இரத்தினபுரி | 2.301 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/11 | நெச்சுரல் ரிசோர்சஸ் ஹைட்ரோ பவர் பிரைவேட் லிமிடெட் | கொலபதானா மினி நீர்மின் நிலையம் | கொத்மலை, நுவரெலியா | 1.100 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03

திகதி: 2023.03.23

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi - 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

# இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

## செயற்றிட்ட அமுல்நடாத்தல் அலகு (PIU) – வட மத்திய மாகாணம்

## சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் – மேலதிக நிதியிடல் (HSEP-AF)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| | |
|---|---|
| திகதி: | 2023 மார்ச் 23 ஆம் திகதியன்று |
| கடன்/ மானிய இல. மற்றும் தலைப்பு | **Loan 4121-SRI:** சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் - மேலதிக நிதியிடல் |
| ஒப்பந்த இல. தலைப்பு | 1. **HSEP(AF))/PIU/NCP/ANU/W/8/2022/01 – W-8(AF)** வேலைகளின் பெறுகை - அனுராதபுர மாவட்டம் |
| தொகுதிகள் | தொகுதி **A.** வஹல்கட **PMCU**<br>தொகுதி **B** மஹாவிலாச்சிய **DHC**<br>தொகுதி **C** ரத்மல்கஹவெவ **DHC** |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி | 2023 ஏப்ரல் 20 |

1. சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட ஆகுசெலவிற்காக (மேலதிக நிதியிடல்) ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ஆஅவ) (ADB) நிதியுதவியை இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளது. இந்த நிதியிடலின் பகுதியொன்று மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படும். ஆஅவ இன் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் இதில் பங்கு பெறலாம்.

2. கீழே விபரிக்கப்பட்டவாறு சுகாதார நிலையங்களின் புணர்நிர்மாணம் மற்றும் புதிய நிர்மாணங்கள் அடங்கலான வேலைகளின் நிர்மாணம் மற்றும் பூர்த்தி செய்தல் ஆகியவற்றிற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுகாதார அமைச்சின் (''தொழில் வழங்குனர்'' என அழைக்கப்படுபவர்) செயலாளரின் அலுவலகத்தின் கீழ் கொழும்பு-08, கின்ஸி வீதி, **3/19,** ஆம் இலக்கத்திலுள்ள சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொ.இல. | ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | தொகுதிகள் | சுகாதார நிலையத்தின் பெயர் | வகுதி |
|---|---|---|---|---|
| 1. | **HSEP(AF))/PIU/NCP/ANU/W/8/2022/01 – W-8(AF)** வேலைகளின் பெறுகை - அனுராதபுர மாவட்டம் | தொகுதி **A** | வஹல்கட | **PMCU** |
| | | தொகுதி **B** | மஹாவிலாச்சிய | **DHC** |
| | | தொகுதி **C** | ரத்மல்கஹவெவ | **DHC** |

3. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு ஆஅவ இன் தனிக்கட்ட, ஒரு-உறை நடைமுறைக்கமைவாக பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கு பெறலாம்.

4. இந்த விலைமனுக்கோரலில் பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே பங்கு பெறலாம்.

**A. நிதியிடல்:**

**(i)** வரலாறு ரீதியிலான நிதியிடல் செயற்பாடு: விலைமனுதாரரின் நிதியிடல் நிலைமையின் தற்போதுள்ள உறுதிப்பாட்டை காட்சிப்படுத்துவதற்காக கடந்த மூன்று (3) வருடங்களின் (2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022) நிதியிடல் கூற்றுக்களை சமர்ப்பித்தல்.

- வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனிகள்: கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூற்றுக்கள்.
- கூட்டுப்பங்குடைமைகள் மற்றும் ஏககூட்டாண்மைகள்: அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்/ பட்டயம் பெற்ற கணக்காளரினால் சான்றழிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூற்றுக்கள் அத்துடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வருமான வரி திரட்டுக் கடிதமும்.

**(ii)** வருடாந்த நிர்மாண சராசரி நிதிப்புரள்வு: செயற்பாட்டிலுள்ள அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றழிக்கப்பட்ட மொத்த கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிர்மாண நிதிப்புரள்வை (கீழேயுள்ள அட்டவணையை பார்வையிடவும்) விலைமனுதாரர் (கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை) கொண்டிருத்தல் வேண்டும். (கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள தேவைப்படுத்தல்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக பிரயோகப்படுத்தப்படும்)

| தொகுதி இல. | சுகாதார நிலையத்தின் பெயர் | இலங்கை ரூபாவில் தொகை (மில்லியனில்) |
|---|---|---|
| தொகுதி **A** | வஹல்கட **PMCU** | **116.73** |
| தொகுதி **B** | மஹாவிலாச்சிய **DHC** | 96.85 |
| தொகுதி **C** | ரத்மல்கஹவெவ **DHC** | 112.73 |

**(iii)** நிதியிடல் மூலவளங்கள்: விலைமனுதாரர் (தேவைப்படுமிடத்து கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை) அதனது நிதியிடல் மூலவளங்கள், அதனது தற்போதுள்ள ஒப்பந்த கடப்பாடுகளுக்கான அதனது நிதியிடல் பொறுப்புக்கள் நீங்கலாக ஒப்பந்தங்களுக்கான மொத்த தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தல் அல்லது விஞ்சுகின்றன என்பதை காட்சிப்படுத்தல் வேண்டும் (தொகுதிகள்) (கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள தேவைப்படுத்தல்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக பிரயோகப்படுத்தப்படக்கூடியவை)

| தொகுதி இல. | சுகாதார நிலையத்தின் பெயர் | இலங்கை ரூபாவில் தொகை (மில்லியனில்) |
|---|---|---|
| தொகுதி **A** | வஹல்கட **PMCU** | **16.78** |
| தொகுதி **B** | மஹாவிலாச்சிய **DHC** | 13.92 |
| தொகுதி **C** | ரத்மல்கஹவெவ **DHC** | 16.21 |

**B. அனுபவம்:**

**(i)** நிகரான அளவு மற்றும் தன்மை: விலைமனுதாரர் (கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை, தேவைப்படின்) கடந்த ஐந்து (5) வருடங்களில் சித்திகரமாக அல்லது கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்ட ஆகக் குறைந்தது உத்தேசிக்கப்பட்ட வேலைகளின் நிகரான ஒரு ஒப்பந்தத்தின் ஒப்பந்தக்காரராக, கூட்டுமுயற்சி பங்காளராக அல்லது உபஒப்பந்தக்காரராக செயற்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழுள்ள விலைமனுதாரரின் பங்குபெறுதலின் பெறுமதியானது ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளவாறு தேவைப்படுத்தல்களை விஞ்சியிருத்தல் பொருத்தமாகும்.

| தொகுதி இல. | சுகாதார நிலையத்தின் பெயர் | இலங்கை ரூபாவில் தொகை (மில்லியனில்) |
|---|---|---|
| தொகுதி **A** | வஹல்கட **PMCU** | **46.69** |
| தொகுதி **B** | மஹாவிலாச்சிய **DHC** | 38.74 |
| தொகுதி **C** | ரத்மல்கஹவெவ **DHC** | 45.09 |

(ii) விலைமனுதாரரொருவர் சித்திகரமான பல எண்ணிக்கையான விலைமனுக்களைச் சமர்ப்பித்தால் (அதிக குறைந்தளவு மதிப்பீடு செய்யப்பட்டதும் கணிசமான அளவு பதிலிறுக்கக்கூடியதுமானதும்) விலைமனுவில் சமர்ப்பிக்கப்பட்டவாறு பின்வரும் திரட்டப்பட்ட தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்வதற்கான விலைமனுதாரரின் திறனை மதிப்பீடு செய்தலை விலைமனுவின் மதிப்பீடு அடக்கும்.

- வருடாந்த நிர்மாண சராசரி நிதிப்புரள்வு
- நிதியிடல் மூலவளங்கள்
- ஒதுக்கீடு செய்யப்படவுள்ள உபகரணங்கள், மற்றும்
- பணிக்கு வழங்கப்படவுள்ள ஆளணியினர் தகைமைத் தகவுத்திறனானது விலைமனுக்கோரல் ஆவணத்தில் இன்னும் அதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது.

5. மேலதிக தகவலைப் பெறுவதற்காகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிப்பதற்குமாக விலைமனுதாரர் பின்வருபவரை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

செயற்றிட்ட பொறியியலாளர்,
செயற்றிட்ட அமுலாக்கல் அலகு - வட மத்திய மாகாணம்,
சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,
சுகாதார மருத்துவ பழைய கட்டிடம்,
பண்டாரநாயக்க மாவத்தை,
அனுராதபுரம், இலங்கை.

மின்னஞ்சல்: **pe.hsep.ncp@gmail.com**
தொலைபேசி/ தொலைநகல்: 025-2227308

6. விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர் பின்வருவனவற்றை செயற்படுத்தல் வேண்டும்.

- W-8(AF) அனுராதபுர மாவட்ட வேலைகளின் பெறுகைக்கான விலைமனுக்கோரல் ஆவணங்களைக் கோரி மேலேயுள்ள முகவரிக்கு எழுதுதல்.
- **2023** ஏப்ரல் 19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் அல்லது அதற்கு முன்னராக ஒப்பந்தங்கள் விடயத்திற்காக கீழே குறிப்பிட்டுள்ள (8 ஆம் பந்தி) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துதல்.
- பணக்கொடுப்பனவு முறைமையானது கொழும்பு-08, கின்ஸி வீதி, 3/19 ஆம் இலக்க சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளரின் பெயரில் வங்கி வரைவொன்றின் மூலம் அல்லது வேலை நாட்களில் ரொக்கப் பணத்தில் அல்லது கொழும்பு-10, ரீஜெண்ட் வீதி, இலங்கை வங்கி 7040799 என்ற கணக்கிலக்கத்திற்கு நேரடியாக வங்கி வரவிற்கு செலுத்தப்படல் வேண்டும்.

7. 2023 ஏப்ரல் 4ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு 5 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது தொழில் வழங்குனரினால் நடாத்தப்படும். இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு அனைத்து விலைமனுதாரர்களும் சமுகமளிக்குமாறு கண்டிப்பாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

8. **உங்கள் விலைமனுவை பின்வரும் முகவரியில்**
**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு - வட மத்திய மாகாணம்,**
**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**சுகாதார மருத்துவ பழைய கட்டிடம்,**
**பண்டாரநாயக்க மாவத்தை, அனுராதபுரம், இலங்கை.**

இறுதித் திகதியான 2023 ஏப்ரல் 20 ஆம் திகதியன்று பி.ப.2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுப்பிணையொன்றுடன் ஒப்படைக்கவும். விலைமனுப்பிணையானது வங்கி உத்தரவாதப் பாங்கொன்றின் மூலமாக சமர்ப்பிக்கப்படுவதாயின், விலைமனுக்கோரல் படிவங்களில் வழங்கப்பட்டவாறான உருமாதிரியை பாவித்து இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் **"The Project Director, Health System Enhancement Project"** என்ற பெயரில் வழங்கப்பட்டதுமானதாகவுமிருத்தல் வேண்டும்.

| தொகுதிகள் | சுகாதார நிலையத்தின் பெயர் | விலைமனுப்பிணை - இ.ரூபாவில் | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் - இ.ரூபாவில் |
|---|---|---|---|
| தொகுதி A | வஹல்கட PMCU | 1,170,000.00 | 14,000.00 |
| தொகுதி B | மஹாவிலாச்சிய DHC | 970,000.00 | 12,500.00 |
| தொகுதி C | ரத்மல்கஹவெவ DHC | 1,130,000.00 | 13,500.00 |

9. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலின் இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (2023 ஓகஸ்ட் 18 ஆம் திகதியன்று வரையும்). விலைமனுப்பிணையானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 148 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (2023 செப்டம்பர் 15 ஆம் திகதியன்று வரையும்)

11. சுகாதார அமைச்சின் சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் அல்லது வட மத்திய மாகாண, சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலகம் ஆகியன விலைமனுக்களை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தலுக்கான எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள மாட்டாது.

12. உள்ளூர் விலைமனுதாரர் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ள முன்னர், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட முகாமைத்துவ அலகு,**
**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**இல. 3/19, கின்ஸி வீதி, கொழும்பு-08, இலங்கை.**
**தொலைபேசி/ தொலைநகல்: 0112697173/63**
**திகதி: 2023 மார்ச் 23 ஆம் திகதியன்று.**

## அறிவித்தல்

கீழே விபரிக்கப்பட்டுள்ள கம்பனியானது 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச்சட்டத்தின் பிரிவு 9(1)ன் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவன மாகும்.

கம்பனியின் பெயர்:
**வூக்ஸ் (பீவீடீ) எல்டீடீ**
கம்பனியின் இல:
PV 00273090
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 15.03.2023
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: **இல. 116, மீராணியா வீதி, கொழும்பு-12.**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் இத்தால் பின்வருமாறு வழங்கப்படுகின்றது

கம்பனியின் பெயர்:
**சிலோன் பெட்டல்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்**
பதிவிலக்கம்: **பீவி 00272109**
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
**2023.02.27ம் திகதியன்று**
பதிவு முகவரி :
**20/15, சாது ஒழுங்கை, நீலம் மஹர வீதி, மஹரகம**
**பணிப்பாளர்**

## விசேட அறிவித்தல்

கங்கானமலாகே துஷான் ஷமீர பெரேரா (தே.அ.அ.இல.860511576V) ஆகிய நான், 2023 மார்ச் 23ஆம் திகதி முதல் ஶ்ரீதர டிரேடர்ஸ் (WJ 18256) வியாபாரத்தின் பங்குதாரர் இல்லை எனவும் ஶ்ரீரத டிரேடர்ஸுடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்/ தொடர்பாடல்கள் தொடர்பில் எனது பொறுப்பு அல்லது தொடர்புகள் இல்லை எனவும் இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

# மத்திய சுற்றாடல் அதிகார சபை

பதுளை மாவட்டத்தில் ஹாலிஎல பிரதேச செயலக பிரிவின் மொரேத்தொட்டை, ஹாலிஎல பிரதேசத்தில் உத்தேசிக்கப்பட்ட கனேகல சிறு நீர் மின்சக்தி திட்ட கருத்திட்டத்திற்கான ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப.) அறிக்கையின்

## இறுதி தீர்மானம் தொடர்பான பொது அறிவித்தல்

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 ஆஆ(4) இன் கீழான அறிவித்தல்**

குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் விசேட விதிகளுக் கமைவாக மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கான திருத்தியமைக்கப்பட்ட 1993ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான விதிமுறை) ஒழுங்குவிதி 9(i) இற்கு அமைவாக இலக்கம் 15B 1ம் கட்டை, தொலஸ்பாகே வீதி, கம்பளை எனும் விலாசத்திலமைந்த Ganegala Mini Hydro Power Holdings (Pvt) Ltd. இன் பணிப்பாளருக்கு அங்கீகாரத்தினை வழங்க மத்திய சுற்றாடல் அதிகார சபையானது தீர்மானித்துள்ளது என்பதனை பொது மக்கள் யாவருக்கும் இத்தால் அறிவிக்கின்றது.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை,**
**'பரிசரபியச',**
**இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை – 2022 (2023)

## செய்முறைப் பரீட்சை

இப்பரீட்சையின் பின்வரும் பாடங்களுக்கான எழுத்துப் பரீட்சைகளுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சையை நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

| பாட எண் | பாடம் | செய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ள திகதிகள் |
|---|---|---|
| 28 | மனைப்பொருளியல் | 2023.03.28 இருந்து 2023.04.06 ஆம் திகதி வரை |
| 53 | நாட்டியம் (பரதம்) | 2023.03.28 இருந்து 2023.04.06 ஆம் திகதி வரை |
| 54 | கீழைத்தேய சங்கீதம் | 2023.03.28 இருந்து 2023.04.06 ஆம் திகதி வரை |
| 55 | கர்நாடக சங்கீதம் | 2023.03.28 இருந்து 2023.04.06 ஆம் திகதி வரை |
| 56 | மேலைத்தேய சங்கீதம் | 2023.03.28 இருந்து 2023.03.31ஆம் திகதி வரை |
| 57 | நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) | 2023.03.28 இருந்து 2023.04.06 ஆம் திகதி வரை |
| 58 | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | 2023.03.28 இருந்து 2023.04.06 ஆம் திகதி வரை |
| 59 | நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) | 2023.03.28 |

மேற்குறித்த பாடங்களுக்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் விண்ணப்பப்படிவத்திலுள்ள தபால் முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக (www.doenets.lk) பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்தி தோற்ற வேண்டிய இடம், திகதி என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவற்றை எக்காரணத்திற்காகவேனும் பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

இப்பரீட்சை தொடர்பாக ஏதாவது விசாரணைகள் இருப்பின் இலங்கை பரீட்சைத் திணைக்களத்துடன் பின்வரும் தொலைபேசி எண்கள் மூலம் தொடர்புகொள்ள முடியுமென்பதை கருத்திற் கொள்ளவும்.

**நேரடித் தொலைபேசி எண் : 1911**
**தொலைபேசி இலக்கங்கள் : 011-2784208, 011-2784537, 0112786616, 0112785922**
**தொலைநகல் இலக்கம் : 011-2784422**
**தொலைபேசி இலக்கங்கள் : 011-2786200, 011-2784201, 0112785202**
**மின்னஞ்சல் முகவரி** : al.practical.seo@gmail.com

**எச்ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

6/31AL/PRC/2022
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்ல.**
**2023.03.23**

### கமத்தொழில் அமைச்சு

# NLDB தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

## பதவி வெற்றிடம்

இலங்கையின் தகுதியுள்ள பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி - பொது முகாமையாளர் - HM 2-1 – 2016**

**பதவிக்குரித்தான செயற்பாடுகளின் தன்மை**

பொது முகாமையாளர் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் உயர்நிலையிலுள்ள நிறைவேற்றுதர அதிகாரியாவார். பொது முகாமையாளர் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் அனைத்து நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக மற்றும் நிதி விவகாரங்களுக்கு பொறுப்பாக இருப்பார். மேலும் பணிப்பாளர் சபையின் பொது வழிகாட்டல்கள் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை செயற்படுத்துதல், நிறைவேற்றுதல் மற்றும் அமுல்படுத்துதல்களை மேற்கொள்ளுதல் மற்றும் சபையின் ஊழியர்களுக்கு உத்தியோகபூர்வ சாதனைகளில் சிறந்து விளங்குவதற்கு தலைமைத்துவத்தையும் ஊக்கத்தையும் வழங்குதல்.

**தகைமைகள்** : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / கமத்தொழில் / வியாபார நிர்வாகம் / பெருந்தோட்ட முகாமைத்துவம் / கால்நடை விஞ்ஞானம் என்பவற்றில் இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

விஞ்ஞானம் / கமத்தொழில் / வியாபார நிர்வாகம் / கால்நடை விஞ்ஞானம் என்பவற்றில் பட்டப் பின்படிப்புத் தகைமை (Masters) அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ தொழில்சார் நிறுவனமொன்றின் கூட்டு அங்கத்துவம்

**அத்துடன்**

முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை, அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் நிரூபிக்கப்பட்ட பதிவுகள் சகிதம் முகாமைத்துவ நிலையில் 20 வருட கால அனுபவம். இதில் ஐந்து (05) வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையிலாக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / கமத்தொழில் / வியாபார நிர்வாகம் / பெருந்தோட்ட முகாமைத்துவம் / கால்நடை விஞ்ஞானம் என்பவற்றில் இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

விஞ்ஞானம் / கமத்தொழில் / வியாபார நிர்வாகம் / பெருந்தோட்ட முகாமைத்துவம் / கால்நடை விஞ்ஞானம் அல்லது தொடர்புடைய ஏதாவது துறையில் கலாநிதிப் (PHD) பட்டம்.

**அத்துடன்**

முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை, அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் நிரூபிக்கப்பட்ட பதிவுகள் சகிதம் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் 05 ஐந்து வருட கால அனுபவம்.

**அத்துடன்**

பல்வகை - ஒழுக்காற்று குழுக்களை வழிநடத்துவதற்கும் தலைமை தாங்குவதற்கும் நிரூபிக்கப்பட்ட திறன் மற்றும் சபையின் அனைத்து மனித மற்றும் ஏனைய வளங்களை சரியாக வரிசைப்படுத்துதல் மற்றும் திறமையான நிர்வாகத்தில் அனுபவம்.

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : **HM 2-1-2016**: ரூபா. **91,645/-, 12x2,700/-** ரூபா **124,045/-**
இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்திகுரிய தொழில்முயற்சிக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**மேலதிக நன்மைகள்:**

- இரண்டு தொழிலாளர் கொடுப்பனவு சகிதம் முழுமையான தளபாடமிடப்பட்ட பங்களா
- ஒரு மாதத்திற்கு 960 கி.மீ. பிரத்தியேக ஓட்டம் சகிதம் வாகனம் ஒன்று
- உள்ளக மற்றும் வெளிப்புற மருத்துவ நன்மைகள்

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும்**

i. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல் உள ஆரோக்கியத்தையும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கான தகுதியையுடையவராகவிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த குணநலன்களையுடையவராகவிருத்தல் வேண்டும்.

2023 ஏப்ரல் 17ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து சுயதரவு மற்றும் உறவினரல்லாத இருவரின் பெயர்கள், அவர்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை அடக்கிய சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் என்பவற்றை பதிவுத் தபாலில் தலைவர், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும்.

அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/EX/DN/45/2023 | கொம்பனி வீதியில் பேர வாவிக்குக் குறுக்காக உள்ள உருக்குப் பாலத்தின் கட்டமைப்பு மற்றும் நிறுவல்கள் | 5,750.00 | 746,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | உருக்குக் கட்டமைப்புகளில் அனுபவம் சகிதம் C 04 மற்றும் C 05 CIDA தரத்தைக் கொண்ட பாலம் / கட்டிட ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின்** இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

I. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு** வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,** இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,** மாளிகாகந்த, கொழும்பு 10.

II. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

III இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 -** நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2023-04-11ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2023-04-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.11.08ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.10.09ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-04-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஊ. 2023-04-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# லெஜன்ட்ஸ் தொடரில் ஜயசூரிய, டில்ஷான்



முன்னாள் சர்வதேச மற்றும் உள்ளூர் கிரிக்கெட் வீரர்களின் பங்கேற்போடு இந்தியாவில் நேற்று ஆரம்பமான கிலாடி இலெவன் லெஜன்ட்ஸ் கிண்ண டி20 கிரிக்கெட் தொடரில் சனத் ஜயசூரிய, டீ.எம் டில்ஷான் உட்பட இலங்கையின் முன்னாள் வீரர்களும் பங்கேற்றுள்ளனர்.

இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் சபையால் நடத்தப்படும் இந்தத் தொடரில் மொத்தம் 6 அணிகள் பங்கேற்றுள்ளன.

ஒன்பது நாட்கள் நீடிக்கும் போட்டிகள் காசிபாத்தின் ஜவாஹர்லால் நெஹ்ரு மைதானத்தில் நடைபெறுகின்ற.

இதில் பர்வீஸ் மஹ்ரூப், திசர பெரேரா, இசுர உதான, டில்ஷான் முனவீர, உபுல் தரங்க ஆகிய இலங்கை முன்னாள் வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

# ஒருநாள் உலகக் கிண்ணம் ஒக்டோபர் 5ஆம் திகதி ஆரம்பம்

## 12 இந்திய நகரங்களில் நடத்தத் திட்டம்



2023 ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டி வரும் ஒக்டோபர் 5ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 19 ஆம் திகதி வரை நடைபெற வாய்ப்பு உள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையை மேற்கோள் காட்டி 'கிரிக்கின்போ' இணைய தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

பத்து அணிகள் பங்கேற்கும் இந்த உலகக் கிண்ணத்திற்காக குறைந்தது ஒரு டஜன் மைதானங்கள் பெயரிடப்பட்டிருப்பதோடு, இறுதிப் போட்டி அஹமதாபாத்தில் உள்ள உலகின் மிகப் பெரிய கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, பங்களூரு, சென்னை, டெல்லி, தர்மசாலா, குவாஹாத்தி, ஹைதராபாத், கொல்கத்தா, லக்னோவ், இன்தோர், ராஜ்கோட் மற்றும் மும்பையிலும் போட்டிகள் நடைபெறவுள்ளன. 46 நாட்கள் நீடிக்கவிருக்கும் இந்தத் தொடரில் மூன்று நொக் அவுட் போட்டிகள் உட்பட மொத்தம் 48 போட்டிகள் இடம்பெறவுள்ளன.

எனினும் போட்டிகள் நடைபெறும் குறிப்பிட்ட மைதானம் அல்லது அணிகள் பயிற்சிப் போட்டிகளில் ஆடும் மூன்று நகரங்கள் பற்றிய விபரத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இந்தியாவில் மாறுபட்ட காலத்தில் மாறுபட்ட இடங்களில் பருவமழைக்காலம் வரும் நிலையில் அந்த சிக்கல் காரணமாகவே மைதானங்களை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வழக்கமாக சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் குறைந்தது ஓர் ஆண்டுக்கு முன்னதாகவே போட்டி அட்டவணையை அறிவிக்கின்றபோதும், இந்திய அரசாங்கத்தின் அனுமதிக்காகவும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை காத்துள்ளது.

இதில் தொடருக்காக வரிவிலக்கு வழங்குவது, பாகிஸ்தான் அணிக்கு விசா அனுமதி வழங்குவது ஆகிய இரு முக்கிய விடயங்கள் கருத்தில் கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது. 2013 ஆரம்பம் தொடக்கம் ஐ.சி.சி போட்டிகள் தவிர்த்து பாகிஸ்தான் அணி இந்தியாவில் ஆடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மாளிகாவத்தை யூத் அணியினர் சம்பியன்



சிட்டி புட்போல் லீக்கினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாம் பிரிவு கழகங்களுக்கு இடையிலான லீக் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் தோல்வியுறாத அணியாக மாளிகாவத்தை யூத் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

குறே, கொள்ளுப்பிட்டி யுனைட்டட், மாளிகாவத்தை யூத், ருத்ரா, விக்டரி, யங் சில்வர் ஆகிய ஆறு அணிகள் பங்குபற்றிய சிட்டி லீக் முதலாம் பிரிவு கால்பந்தாட்டப் போட்டி கடந்த 3 மாதங்களாக நடைபெற்றுவந்தது. இதில் விக்டரி கழகத்துக்கு எதிராக சிட்டி லீக் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கடைசி லீக் போட்டியில் 6–1 என்ற கோல் கணக்கில் மாளிகாவத்தை யூத் இலகு வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

# சோபர் கழகம் சம்பியன்




ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அட்டாளைச்சேனை சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை (20) இரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை எவர் டொப் விளையாட்டுக் கழகத்தை 04 ஓட்டங்களால் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சோபர் அணியினர் 5 ஓவர் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு 39 ஓட்டங்களைப் பெற்றனர். எவர் டொப் அணியினர் 2 விக்கெட்டிளை இழந்து 35 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியை தழுவியது.

# 'ருஹுனு நீலங்களின் சமர்' நாளை ஆரம்பம்





நூவன் கொடிகார

கொழும்பு றோயல் மற்றும் கல்கிசை புனித தோமஸ் கல்லூரிகளுக்கு இடையிலான நீலங்களின் சமருக்கு அடுத்து மிகப் பழமையான பாடசாலை மாபெரும் கிரிக்கெட் போட்டியான மாத்தறை புனித தோமஸ் மற்றும் புனித சர்வேசஸ் கல்லூரிகளுக்கு இடையிலான 123 ஆவது 'ருஹுனு மாபெரும் நீலங்களின் சமர்' போட்டி நாளை (24) தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மூன்று நாட்கள் மாத்தறை உயன்வத்த விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.


1900ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தொடர்ச்சியாக 123 ஆண்டுகளாக நடத்தப்படும் மாபெரும் கிரிக்கெட் போட்டியில் புனித தோமஸ் 32 வெற்றிகளையும் புனித சர்வேசஸ் 27 வெற்றிகளையும் பெற்றுள்ளது.

1988 ஆம் ஆண்டு சனத் ஜயசூரிய புனித சர்வேசஸ் கல்லூரி அணிக்கு தலைமை வகித்ததோடு 1992இல் இந்திக்க டி சேரம் புனித தோமஸுக்கு தலைவராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. தவிர பல தேசிய அணி வீரர்களையும் இந்த இரு கல்லூரிகளும் உருவாக்கியுள்ளன.

புனித சர்வேசஸ் கல்லூரி கடைசியாக இந்த மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வெற்றியீட்டியது 1971 ஆம் ஆண்டில் என்பதோடு புனித தோமஸ் 2017 ஆண்டு வெற்றியீட்டியது.

இதில் புனித தோமஸ் கல்லூரி செனுர பெரேரா தலைமையில் செயற்படவிருப்பதோடு புனித சர்வேசஸ் கல்லூரி பீ.டபிள்யு. விரான் நெத்தரு தலைமையில் ஆடவுள்ளது.

# போர் நடக்கும் உக்ரைனுக்கு ஐ.எம்.எப் முதல்முறை கடன்



உக்ரைன் நாட்டுக்கு 15.6 பில்லியன் டொலர் கடன் வழங்குவதற்கு ஊழியர் மட்டத்தில் உடன்படிக்கை எட்டப்பட்டதாக சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்) தெரிவித்துள்ளது.

போர் நடக்கும் நாடொன்றுக்கு சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்க ஒப்புதல் அளித்திருப்பது இது முதல் முறையாகும்.

ரஷ்ய படையெடுப்புக்குப் பின்னர் உக்ரைனுக்கான மிகப் பெரிய நிதியாகவும் இது உள்ளது. குறிப்பாக அதிக நிச்சயமற்ற நிலைக்கு முகம்கொடுக்கும் நாட்டுக்கு விதிவிலக்காக கடன் வழங்க அனுமதிக்கும் வகையில் ஐ.எம்.எப் விதியில் அண்மையில் மாற்றம் கொண்டு வந்தது.

"உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு தொடரும் நிலையில் அந்நாட்டு பொருளாதாரத்தில் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது" என்று ஐ.எம்.எப் தெரிவித்துள்ளது.

உக்ரைனின் சர்வதேச நன்கொடையாளர்களும் பங்காளிகளும் பெரிய அளவில் சலுகை முறையில் நிதி வழங்க அது உதவும் என்று நாணய நிதியம் குறிப்பிட்டது.

# சிரியாவில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்



இஸ்ரேல் இந்த மாதத்தில் இரண்டாவது முறையாக அலெப்போ விமானநிலையத்தின் மீது வான் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் பொருட்சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக சிரிய பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

லடக்கியா நகரக் கடற்கரையின் மேற்காக மத்தியதரைக் கடலில் இருந்து நேற்று (22) அதிகாலை 3.55 மணி அளவில் இஸ்ரேல் ஏவுகணைகளை வீசியதாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இதில் இஸ்ரேலிய போர் விமானங்கள் மத்தியதரைக் கடலுக்கு மேலால் பறந்தபோதே சிரியாவின் மிகப்பெரிய நகரும் முன்னர் வர்த்தக மையமாகவும் இருந்த அலெப்போ மீது ஏவுகணைகளை வீசி இருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் இந்த புதிய தாக்குதல் பற்றி கருத்துக் கூற இஸ்ரேல் மறுத்ததாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மனிதாபிமான உதவிகள் வரும் பிரதான வழியாக அலெப்போ சர்வதேச விமானநிலையம் உள்ளது. கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி இடம்பெற்ற பூகம்பத்தில் துருக்கியுடன் சிரியாவும் மோசமாக பாதிக்கப்பட்டது.

சிரியா மீது இஸ்ரேல் நூற்றுக்கணக்கான ஏவுகணை தாக்குதல்களை நடத்திபோதும் மிக அரிதாகவே அதற்கு பொறுப்புக் கோருகிறது. ஈரான் ஆதரவு ஆயுதங்கள் குவிக்கப்படுவது மற்றும் தரப்புகளை இலக்கு வைத்தே தாக்குதல்களை நடத்துவதாக இஸ்ரேல் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

சிரிய உள்நாட்டு யுத்தத்தில் ஈரான் ஆதரவு தரப்பினர் ஜனாதிபதி பஷர் அல் அஸாத்துக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

# ஓரினச்சேர்க்கைக்கு சிறை: உகண்டாவில் புதிய சட்டம்



ஓரினச் சேர்க்கையாளர் அல்லது பாலியல் சிறுபான்மையினர் என்று அடையாளப்படுத்துவோரை குற்றவாளியாக்கும் சட்டமூலம் ஒன்று உகண்டா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனை சட்டமாக அங்கீகரித்து ஜனாதிபதி யொவேரி முசெவேனியால் கையெழுத்திடப்பட்டால் குற்றவாளியாக்கப்படுவோர் நீண்ட சிறைத் தண்டனையை எதிர்கொள்வார்கள்.

முன்மொழியப்பட்டிருக்கும் இந்த சட்டத்தின்படி ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் பற்றி சமூகத்தில் உள்ள நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் உறுப்பினர்கள் நிர்வாகத்தை அறிவுறுத்துவது கடமை என குறிப்பிடப்பட்டுள்ளது.

உகண்டா நாட்டில் ஓரினச்சேர்க்கைக்கு தடை இருந்தபோதும், புதிய சட்டம் அதனை மேலும் கடுமையாக்குவதாக உள்ளது.

# வெளியேற்றிய குடியேறிகள் திரும்ப இஸ்ரேல் அனுமதி



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் 2005 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட நான்கு சட்டவிரோத குடியேற்றங்களுக்கு இஸ்ரேலிய பிரஜைகள் மீண்டும் திரும்புவதை அனுமதிப்பதற்கு இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது.

இந்த குடியேற்றங்கள் பலஸ்தீனர்களின் தனிப்பட்ட காணியில் கட்டப்பட்டவை என்று இஸ்ரேலிய உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கும் நிலையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் சட்டமூலத்திற்கு சர்வதேச அளவில் கடும் கண்டனம் வெளியாகியுள்ளது.

இதனை செயற்படுத்துவதற்கு இஸ்ரேலிய இராணுவத் தளபதி கையெழுத்திட வேண்டி உள்ளது.

இது முஸ்லிம்களின் ரமழான் மாதத்தில் பலஸ்தீனர்களுடனான பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் ஒன்றாக உள்ளது.

# பாகிஸ்தான், ஆப்கானில் பயங்கர பூகம்பம்: 13 பேர் பலி



பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் பெரும்பகுதியை குலுக்கிய சக்திவாய்ந்த பூகம்பத்தில் குறைந்தது 13 பேர் கொல்லப்பட்டு மேலும் 200க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 6.5 ரிச்டர் அளவில் பதிவான இந்த பூகம்பத்தால் மக்கள் வீதிகளுக்கு ஓட்டம்பிடித்ததோடு கட்டடங்கள் சேதமடைந்த நிலையில், நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் உள்ள வடகிழக்கு ஆப்கானிஸ்தானின் மலைப் பிராந்தியத்தில் இந்த பூகம்பம் மையம் கொண்டிருந்தது. இதன் அதிர்வு தொலைவில் இருக்கும் இந்தியாவிலும் உணரப்பட்டுள்ளது.

"இந்த அதிர்வு பயங்கரமாக இருந்தது. எனது வாழ்நாளில் இவ்வாறான ஓர் அதிர்வை நான் உணர்ந்ததில்லை" என்று காபுல் குடியிருப்பாளர் கடேரா ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார். இந்த அதிர்வை அடுத்து அவர் ஐந்து மாடிக் குடியிருப்பில் இருந்து வீதிக்கு வந்த நிலையிலேயே இதனைத் தெரிவித்தார். இதில் பாகிஸ்தானின் கைபர் பக்துங்வா பிராந்தியத்தில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் மேலும் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

யுரேசிய மற்றும் இந்திய டெக்டோனிக் தகடுகள் சந்திக்கும் இடத்தில் இருக்கும் இந்தப் பிராந்தியத்தில் பூகம்பம் பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியம் அதிகமாகும். கடந்த ஆண்டு ஜுன் மாதம் ஆப்கானிஸ்தானின் பக்திகா மாகாணத்தை குலுக்கிய பூகம்பத்தில் 1,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். இது அந்த நாட்டில் சுமார் கால் நூற்றாண்டு காலத்தில் இடம்பெற்ற மோசமான பூகம்பமாக பதிவானது.

# செயலிகளுக்கு அமெ. கட்டுப்பாடு

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக வெளிநாடுகளைத் தளமாகக் கொண்டுள்ள செயலிகள் மற்றும் தொழில்நுட்பங்களைத் தடை செய்வதற்கான புதிய அதிகாரங்களை வழங்கும் சட்டத்திற்கு வெள்ளை மாளிகை ஆதரவு அளித்துள்ளது.

செனட்டர்கள் பலர் இணைந்து அறிமுகப்படுத்தியுள்ள இச்சட்டத்தின் ஊடாக தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் வெளிநாட்டு தொழில்நுட்பங்களைத் தடை செய்வதற்கான புதிய அதிகாரங்கள் ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

நூறு மில்லியனுக்கும் மேற்பட்ட அமெரிக்கர்களால் பயன்படுத்தப்படும் பைட்டான்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான பிரபலமான டிக்டொக் செயலியை தடை செய்ய இந்த புதிய அதிகாரங்கள் ஊக்கமளிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.